# தமிழக வரலாறு-
# கரிகாற்
# பெருவளத்தான்

புலவர் கா.கோவிந்தனார்

எழிலகம்

தமிழக வரலாறு வரிசை எண்—3

# தமிழக வரலாறு–
# கரிகாற் பெருவளத்தான்

புலவர் கா. கோவிந்தனார்

**எழிலகம்**
46, செல்வ விநாயகர் கோயில் தெரு,
திருவத்திபுரம் (செய்யாறு)
604407

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழக வரலாறு— கரிகாற் பெருவளத்தான் |
| ஆசிரியர் | : | புலவர் கா. கோவிந்தனார் |
| முதற் பதிப்பு | : | ஜூலை, 1997 |
| உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| வெளியீடு | : | ஏழிலகம்<br>46, செல்வ வினாயகர் கோயில் தெரு,<br>திருவத்திபுரம் (செய்யாறு)<br>திருவண்ணாமலை மாவட்டம்<br>604407<br>தொ. எண்: 04182 22255 |
| சென்னை முகவரி | : | 17/12, பீட்டர்ஸ் சாலைக் குடியிருப்பு,<br>இராயப்பேட்டை, சென்னை-14<br>தொலைபேசி எண் : 8528340 |

## விலை ரூ. 26-00

அச்சிட்டோர் சென்னை ஆப்செட்
சென்னை – 600 014.

ாலை,
ன்னை-14

# பதிப்புரை

இருபதாம் நூற்றாண்டு தமிழகத்தின் வரலாற்றில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெறத்தக்க வகையில் நல்ல தமிழ் அறிஞராக, வரலாற்றுத் திறனாய்வாளராக, செந்தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியப் படைப்பாளராக, பாதை மாறாத பகுத்தறிவுவாதியாக. அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக,. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக, என பல்திறன் படைத்த நற்றமிழ்ப் புலவராக விளங்கியவர்,

**புலவர். கா. கோவிந்தனார்** அவர்கள்.

“தமிழுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழ் நாட்டுக்கும் தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்தவர்” என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப் பெற்ற பேறு பெற்றவர்; பைந்தமிழ்ப் புலவராய் உயர்ந்து, சங்கத் தமிழ் ஏடுகளிலெல்லாம் திளைத்து, வரலாற்றுக் கண்கொண்டு ஆய்ந்து, தொல்காலத் தமிழர் வாழ்வை இக்காலத்தவரும் தெளிந்திடுமாறு தேன் தமிழ்ச் சுவடிகளாக வரைந்து வழங்கிய பெருமை உடையவர்,

**புலவர். கா. கோவிந்தனார்** அவர்கள்.

புலவர்களுள் பெரும் புலவராய் விளங்கி, திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனத்தாரின் **புலவரேறு** பட்டம், தமிழக அரசின் '**திரு.வி.க. விருது**', மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின், '**தமிழ்ப் பேரவைச் செம்மல்**' பட்டம் போன்ற சிறப்புகளைப் பெற்ற **புலவர்** அவர்களின் தமிழ்ப் பணி பொன்விழா கண்ட பெருமையினையுடையது.

"**என் தமிழ்ப் பணி**" என்ற தலைப்பில், தாம் எழுதிய கடைசி கட்டுரையில், "என் எழுத்துப் பணி தொடரும், குறள் பற்றி, சங்க இலக்கியங்கள் பற்றி பல தலைப்புகளில் நூல் எழுதக் குறிப்பு எடுத்து வைத்துள்ளேன். "கல்வி கரையில, கற்பவர் நாள் சில", காலம் இடம் தந்தால் என் எழுத்துப் பணி தொடரும்" என்று புலவர் தம் தமிழ்ப் பணியைத் தொடர வேண்டும் என்ற தணியா ஆவலை வெளியிட்டுள்ளார். ஆனால், காலம் இடம் தரத் தவறி விட்டதனால், முற்றுப் பெறாத நிலையிலே அவருடைய எழுத்துப் பணி எச்சமாகவே நின்று போயிற்று. காலம் செய்த கொடுமை அது!

தமிழால் உயர்ந்து, தம் தமிழ்ப்பணி மூலம் தமிழுக்கும் உயர்வு தேடித் தரும் வகையில், எழுத்துலகம் நினைவு கொள்ளும் வண்ணம் நூற் பணியாற்றிய **புலவர்** அவர்கள், '**செத்தும் பொருள் கொடுத்த சீதக்காதி வள்ளல்**' போலத் தம் மறைவிற்குப் பின்னும் தமிழுக்கு அணி செய்யும் வகையில் பல இலக்கியப் படைப்புகளைத் தம் கையெழுத்து வடிவிலே அளித்துச் சென்றுள்ளார்.

அந்த எழுத்துச் சுவடிகளையெல்லாம் அச்சு வடிவில் வெளியிடுவதைத் தன் தலையாய கடமையாக **எழிலகம்** ஏற்று, அதன் முதற் கட்டமாக,

**''வள்ளுவர் சொல்லாட்சி மாட்சி''**
**''மனையுறை புறாக்கள்''**

ஆகிய இரு இலக்கிய நூல்களை வெளியிட்டோம்.

சங்க கால அரசர் வரிசை, திருமாவளவன், அறம் உரைத்தஅரசர், இலக்கியங்கண்ட காவலர், கலிங்கங் கண்ட காவலர், தமிழர் தளபதிகள், கழுமலப்போர், தமிழர் வாழ்வு, தமிழர் வாணிகம், பண்டைத் தமிழர் போர் நெறி, தமிழகத்தில் கோசர்கள், போன்ற வரலாற்று நூல்கள் பல படைத்த புலவர் அவர்கள், சங்க காலம் தொட்டு, இன்றுவரையான, தமிழக வரலாற்றைக், காலம் தோறும் தொகுத்து வரிசையாக எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

அந்தப் பணியும் முற்றுப் பெறாது போனது. அந்தப் பணியில் அவர் எழுதி முடித்த வரலாற்றுப் படைப்புகளை,

**தமிழக வரலாறு வரிசை**

என்ற பெயரில் வெளியிட முனைந்து, சென்ற ஆண்டு,

**''தமிழக வரலாறு—சங்ககாலம்—அரசர்கள்''**
**''தமிழக வரலாறு—கோசர்கள்''**

ஆகிய இரு வரலாற்று நூல்களை வெளியிட்டுள்ளோம்.

தமிழக வரலாறு வரிசையின் மூன்றாவது நூலாக இன்று,

**''தமிழக வரலாறு—கரிகாற் பெருவளத்தான்''**

என்ற இந்த நூலைத் தமிழ்கூறு நல்லுலகத்தின் முன் படைக்கிறோம்.

''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே''

என்ற புறநானூற்று மொழிகளுக்கேற்ப, புகழுடம்பு பெற்றுவிட்ட புலவர் பெருந்தகை, இறவாத புகழுடைய இலக்கியங்கள் பலவற்றைத் தமிழன்னைக்கு அணி செய்ய அளித்து விட்டுச் சென்றுள்ளார். புலவர் அவர்களின் முன்னைய படைப்புகளுக்குத் தமிழகத்துப் பெரியோர்களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும், ஆதரவினையும் தொடர்ந்து அளித்திட வேண்டுகிறோம்.

''தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை'' என்றார் பாவேந்தர். தம் வாழ்நாள் முழுவதும், காலம் கரம் பிடித்து அழைத்துப் போன அந்தக் கடைசி நொடிவரை, தமிழ்ப் பணி ஆற்றிய புலவர் அவர்கள் வாழ்வார்! அவர் தமிழ் உலகிற்கு அளித்துச் சென்றுள்ள இலக்கியச் செல்வங்கள் உள்ளவரை என்றென்றும் நிலைத்து வாழ்வார்! தமிழ் படிப்போர் நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழ்வார்; என்பது உறுதி.

—எழிலகம் பதிப்பகத்தார்

# குறுக்க விளக்க அகர நிரல்

| | | | |
|---|---|---|---|
| 1. | அகம் | : | அகநானூறு |
| 2. | க. பரணி | : | கலிங்கத்துப் பரணி |
| 3. | கலி | : | கலித்தொகை |
| 4. | கு. உலா. | : | குலோத்துங்க சோழன் உலா |
| 5. | கு. பிள்ளைத் தமிழ் | : | குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் |
| 6. | குறுந் | : | குறுந்தொகை |
| 7. | சிலப் | : | சிலப்பதிகாரம் |
| 8. | சிறுபாண் | : | சிறுபாணாற்றுப்படை |
| 9. | திரு | : | திருமுருகாற்றுப்படை |
| 10. | தொல் | : | தொல்காப்பியம் |
| 11. | நற் | : | நற்றிணை |
| 12. | பட்டின | : | பட்டினப்பாலை |
| 13. | பதிற்று | : | பதிற்றுப்பத்து |
| 14. | பரி | : | பரிபாடல் |
| 15. | புறம் | : | புறநானூறு |
| 16. | பெரும் | : | பெரும்பாணாற்றுப்படை |
| 17. | பொருநர் | : | பொருநர் ஆற்றுப்படை |
| 18. | மதுரை | : | மதுரைக் காஞ்சி |
| 19. | வி. உலா | : | விக்கிரம சோழன் உலா |

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| | பதிப்புரை | iii |
| | குறுக்க விளக்க அகர நிரல் | 3 |
| 1. | பொருநர் ஆற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாம் கரிகாலனும் பட்டினப் பாலையின் பாட்டுடைத் தலைவனாம் திருமாவளவனும் வேறு வேறுபட்ட இருவரா? அல்லது இருவரும் ஒருவரா? | 5 |
| 2. | திருமாவளவனும், கரிகாலனும், வேறு வேறுபட்ட இருவர் என்ற முடிவு சரியானது தானா? | 37 |
| 3. | இளஞ்சேட் சென்னி-1, இளஞ்சேட் சென்னி-2, இளஞ்சேட் சென்னி-3, என்று வரிசைப்படுத்தல் பொருந்துமா? | 45 |
| 4. | உதியஞ் சேரல் என்பவனும், பெருஞ் சோற்று உதியஞ் சேரலாதன் என்பவனும் வெவ்வேறு அரசர்கள் என்பது பொருந்துமா? | 53 |
| 5. | புறநானூற்றுப் பாக்களுக்குப் பொருள் விளக்கம் அளிக்கும் கொளுக்கள் வரலாற்றுச் சான்றுகள் ஆகாது என்பது சரியான முடிவு தானா? | 64 |
| 6. | தொல்காப்பியர் காலம் எது? | 104 |
| 7. | பிட்டங்கொற்றன், குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவனால், வென்று காயப்படுத்தப்பட்டானா? | 105 |
| 8. | "கேள்வி" என்ற சொல், தன்னளவில் இசை எனும் பொருள் தருமா? | 115 |
| 9. | பெருநற்கிள்ளி—கால நிரல் அமைப்பு முறை சரியானது தானா? | 122 |
| 10. | சங்க கால அரசியல் அமைப்பு | 124 |
| 11. | சங்க காலப் போர் முறை | 129 |
| 12. | பழந்தமிழ்ப் பேரூர் பண்பு | 136 |
| | கருவி நூற் பட்டியல் | 156 |
| | பின்னிணைப்பு : என் தமிழ்ப் பணி | 159 |

## I. பொருநர் ஆற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாம் கரிகாலனும், பட்டினப் பாலையின் பாட்டுடைத் தலைவனாம் திருமாவளவனும் வேறு வேறுபட்ட இருவரா? அல்லது இருவரும் ஒருவரா?

**பொருநர் ஆற்றுப்படை, கரிகாலன் பற்றிக் கூறுவன இவை :**

''வென்ற வேலினையும், அழகிய பல தேர்களையும் உடைய இளஞ்சேட் சென்னியின் மகன். முருகனது சீற்றம் போலும் சீற்றத்தையும், பகைவர்க்குத் தரும் அச்சத்தையும் உடைய தலைவன். தாயின் வயிற்றில் இருக்கும்போதே அரச உரிமையைப் பெற்றவன். முன்பு தன் ஆற்றல் அறியாத பகைவர், பின்னர்த் தன்வலி அறிந்து ஏவல் செய்யவும், அவ்வாறு ஏவல் செய்ய மறுத்த பகைவர் நாடுகள் கவலை கொள்ளவும், கடல் மீது ஞாயிறு தோன்றி உலகிற்கு ஒளி வீசியவாறே விண்ணில் உலா வருதல் போல், பிறந்து, தவழ்ந்து செல்வதைக் கற்ற குழந்தைப் பருவம் தொட்டே சிறந்த தன் நாட்டு ஆட்சியைத் தோளில் தாங்கி நாள் தோறும் வளர்த்தவன். யாளியின், பிறர் உயிர்களுக்கு அச்சத்தைத் தரும் குட்டி, பால் உண்டலை மறவாத இளம் பருவத்திலேயே, முதல் வேட்டையிலேயே ஆண்யானையைக் கொன்றது போல், பனைமாலை அணிந்த சேரனையும், வேப்பமாலை அணிந்த பாண்டியனையும், வெண்ணிப் போரில் வென்றவன்; ஆத்தி மாலை அணிந்தவன். கரிகால் வளவன் எனும் பெயர் உடையவன்.''[1]

"பகையரசர் நடுங்குமாறு பிறந்து—பெரிய வறட்சி யுற்ற காலத்திலும், ஒரு வேலி அளவுள்ள சிறிய நிலம் ஆயிரம் கலம் நெல்விளையும் வண்ணம் காவிரி காக்கும் நாட்டுக்கு உரியவன்"[2]

" வென்வேல்
உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்
முருகன் சீற்றத்து உருகெழு குருசில்,
தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்பச்
செய்யார் தேஎம் தெருமரல் கலிப்பப்
பவ்வம் மீ மிசைப் பகல் கதிர் பரப்பி
வெம் வெம் செல்வன் விசும்பு படர்ந்தாங்குப்
பிறந்து தவழ் கற்றதன் தொட்டுச் சிறந்த நன்
நாடு செகின் கொண்டு நாள்தொறும் வளர்ப்ப
ஆளி நன்மான் அணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரே எனத்
தலைக்கோள் வேட்டம் களிறு அட்டா அங்கு
இரும்பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கு இரும் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்"[3]

"பெரு வறன் ஆகிய பண்பில் காலையும்
...............................................
சாலி நெல்லின் சிறை கொள் வேலி
ஆயிரம் விளையுட்டாகக்
காவிரி புரக்கும் நாடு கிழவோன்"[4]

**பட்டினப் பாலை, திருமாவளவன் பற்றிக் கூறுவன.**

"கூரிய நகத்தினையும், வளைந்த வரிபடர்ந்த உடலை யும் உடைய புலிக்குட்டி கூட்டில் அடையுண்டு வளர்ந்தாற் போல் பகைவர்களின் சிறையிடத்தே அடைக்கப்பட்டிருந்து, தான் பெருமை பெற வேண்டும் என்ற உணர்வு வயிரம் ஏறிமுற்ற, சிறையினின்றும் வெளியேறுவதற்காம் வழி வகைகளை நுண்ணிதாக ஆராய்ந்து, யானை பிடிப்பார் அகழ்ந்து வைத்த குழியில் வீழ்ந்துவிட்ட, நீண்ட கையை யுடைய ஆண்யானை, தான் அகப்பட்டிருக்கும் குழியின் ஏறுதற்கு அரிய கரையைத் தன் தந்தங்களால் குத்தி மண்ணைச் சரித்துக் குழியைத் தூர்த்துவிட்டுக் கரை ஏறித் தான் விரும்பும் தன் பிடியானையோடு சேர்ந்து கொண் டாற் போல், பகையரசர்களின் காவல் மிக்க சிறையி னின்றும் வெளியேறி, வாளை உறைகழித்து ஏந்தி, தனக்கு உரிமை பொருந்த, வழிவழி வந்த அரச உரிமை, முறைப்படி பெற்றான்"[5]

"தன் அரசைத் தான் பெற்றதோடு மனநிறைவு கொள்ளாது, பகையரசர்களின் அரண்களைக் கைப்பற்றும் கருத்தோடு, அதற்கு அடையாளமாகிய உழிஞை மாலை அணிந்துகொண்டு, யானைப் படையோடும், குதிரைப் படையோடும் சென்று, பகையரசர்களின் தூசிப்படை வீரர் களை அழித்து, அரிய காவல் அமைந்த பகைவர்களின் ஊர்கள் பலவற்றை அழித்தும், அமைதி கொள்ளாது, தான் பெற விரும்பிய வெற்றிகள் எல்லாவற்றையும் பெற்று விட்டான் ஆகவே, செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலங்களுள் ஒன்றாகிய ஒளி நாட்டவர் பணிந்து ஆற்றல் அழிந்து போக, மேற்கூறிய நாடுகளுள் மற்றொரு நாடாகிய அருவா நாட் டரசரும் தன் ஏவல் கேட்கவும், தென்னவனாம் பாண்டியன் ஆற்றல் அழியவும், பொதுவராம் இடைக்குல அரசர் குலம் முழுதும் கெடவும், இருங்கோ வேள் என்பான் குலம் முழுதும் அழியவும், வென்றான்."[7]

பகை வென்ற பின்னர், காடாகக் கிடந்த இடங்களை எல்லாம், நாடாக ஆக்கி, நீர்வளம் தரும் குளங்கள் பல வற்றைத் தோண்டி, நாட்டின் வளத்தையும் பெருக்கினான். மாட மாளிகைகள் நிறைந்த உறந்தைத் தலை நகரில், கோயில்களோடு, குடிகளையும் வாழச் செய்தான். திருமால் நிலைத்து வாழும் உறந்தைக் கோட்டையின் மதில்களிடத்தில் பெரிய வாயில்களையும், சிறிய வாயில்களையும், மதில்தலையில் அம்புக் கட்டுக்களையும் அமைத்து வைத்தான்[8] இவையெல்லாம் செய்தவன் யார் என்றால், சிங்க ஏறு போன்றவனும், பகையரசர்களுக்குத் துன்பம் தருபவனும் ஆகிய திருமாவளவன் என்பான்.[9]

" கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர் பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடி புக்காங்கு
நுண்ணிதின் உணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண் காப்பு ஏறி வாள் கழித்து
உருகெழு தாயம் ஊழின் எய்திப்
பெற்றவை மகிழ்தல் செய்யாள்,[10] செற்றோர்-
....................... ஓங்கு எழில் யானை
வடிமணிப் புரவியொடு வயவர் வீழ
................................உழிஞை சூடி—[11]
.................................................
முனைகெடச் சென்று முன் சமம் முருக்கி[12]
................................................
பெரும் பாழ் செய்தும் அமையான்;[13]
..............................................
தான் முன்னிய துறை போகலின்
பல் ஒளியர் பணிபு ஒடுங்கத்
தொல் அருவாளர் தொழில் கேட்ப

வடவர் வாடக், குடவர் கூம்பத்
தென்னவன் திறல்கெடச் சீறி, மன்னர்
மன் எயில் கதுவும் மதன் உடை நோன்தாள்
மாத்தானை மற மொய்ம்பின்
செங்கண்ணால் செயிர்த்து நோக்கிப்
புன் பொதுவர் வழி பொன்ற
இருங்கோவேள் மருங்கு சாயக்
காடுகொன்று நாடாக்கிக்
குளம் தொட்டு வளம் பெருக்கிப்
பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்
கோயிலொடு குடி நிறீஇ...[14]
..........................................
அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமாவளவன்[15]...''

**சிலப்பதிகாரம், திருமாவளவன் பற்றிக் கூறியிருப்பது.**

தமிழ்நாட்டு எல்லையுள் தன்னோடு எதிர்த்துப் போரிட வல்ல அரசர்களைக் காணாது, திருமாவளவன், போரில் பேராசை உடையவன் ஆதலின். வடநாடு பெரிய நாடு ஆகவே, ஆங்கு எதிர்த்துப் போரிடும் அரசர்களைப் பெற லாம் எனக் கருதி, ஆங்குச் செல்ல, நல்ல நாள் நாழிகையில், வாள், குடை, முரசுகளை முன்னே போகவிடுத்து, என் தோள், அவ்வடதிசை பெறுக எனத் தான் வழிபடு கடவுளை வேண்டிக்கொண்டு, அவ்வடநாடு நோக்கிப்போன அந் நாளில், இமயப் பெருமலை இடைநின்று குறுக்கிடவே, மனம் சலித்துத் திரும்பி வருபவன், போர் முயற்சி மேற் கொண்டு செல்ல விரும்பிய எனக்குப் பகையாகக் குறுக் கிட்டு விட்டது இம்மலை என அதன் மீது சினம் கொண்டு அதன் உச்சியில் தன் புலிச் சின்னத்தைப் பொறித்து விட்டுத் திரும்புவோனுக்கு, வச்சிர நாட்டான் முத்துப் பந்தரையும், மகத நாட்டான் பட்டி மண்டபத்தையும், அவந்தி நாட்டான் வாயில் தோரணத்தையும் கொடுத்தனர்.

'இருநில மருங்கின் பொருநரைப் பெறா அச்
செரு வெங் காதலின் திருமாவுளவன்
வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுக இம்
மண்ணக மருங்கின் என் வலிகெழு தோள் எனப்
புண்ணிய திசைமுகம் போகிய அந்நாள்
அசைவில் ஊக்கத்து நசை பிறக்கு ஒழியப்
பகை விலக்கியது இப் பயங் கெழு மலை என
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர் வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப் புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்,
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபின் தோரண வாயிலும்''[16]

மேலே எடுத்தாளப்பட்ட சிலப்பதிகார வரிகளுள், வரி 89-ல் திருமாவளவன் என மூலத்தில் வந்திருக்கவும், உரையாசிரியர், அடியார்க்கு நல்லார், கரிகாலன் எனப் பொருள் கூறியுள்ளார். அதே போல், வரி 98ல், 'வருவோன்' என, எப் பெயரும் கூறாது கூறியிருக்கவும்; அடியார்க்கு நல்லார், அச் சொல்லால் குறிப்பிடப் படுபவன் கரிகாலன் என்றே பொருள் கூறியுள்ளார்.

அரங்கேற்றுக் காதையில், மாதவியின் ஆடலை நாடாளும் மன்னர்க்குக் காட்ட விரும்பியதைக் குறிக்கும் தொடரில், மன்னவன் பெயர் எதுவும் குறிப்பிடப்படாமல், ''பூழ் கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி''[17] என-மன்னன் பொதுவாகவே கூறப்பட்டிருக்கவும், பழைய உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் இருவருமே, ''சோழன் கரிகாற் பெருவளத்தான்'' என்றே பொருள் கூறியுள்ளனர்.

சிலப்பதிகாரம், மனையறம் படைத்த காதை—"உரை சால் சிறப்பின் அரசு விழை சிறப்பு" என்ற வரியோடு தொடங்குவதற்கு முன்னர், அழகிய சிற்றபலக் கவிராயர் வீட்டுச் சிலப்பதிகார மூலப் பிரதியில் இடம் பெற்றிருக்கும் சில வரிகளில், "கரிகாற் பெரும்பெயர்த் திருமாவளவன்" என, கரிகாலனும் திருமாவளவனும் ஒருவரே என்பதை உறுதிப்படுத்தும் தொடர் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.[18]

மங்கல வாழ்த்துப் பாடலில், 'இப்பால் இமயத்து இருத்திய வாள் வேங்கை. உப்பாலைப் பொற் கோட்டு உழையதா—எப்பாலும் செருமிகு சினவேல் செம்பியன், ஒரு தனி ஆழி உருட்டுவோன். எனவே"[19] என வரும் வரிகளில் இடம் பெற்றிருக்கும் "செம்பியன்" என்ற சொல்லுக்கு அடியார்க்கு நல்லார், 'கரிகாலன்' எனப் பொருள் கூறி யுள்ளார்.

இந்திர விழவு ஊர் எடுத்த காதையில் வரும் "இருநில மன்னன்"[20] என்ற தொடர்க்கும் அடியார்க்கு நல்லார் "கரிகாலன்" என்றே பொருள் கொண்டுள்ளார்.

கடலாடு காதையில், கோவலன், கடலாடச் சென்ற காட்சியை விளக்கும் நிலையில் வரும் "விண் பொரு பெரும் புகழ்க் "கரிகால்வளவன்" தன்பதம் கொள்ளும் தலைநாட் போல"[21] என்ற தொடரில், "கரிகால்வளவன்" என வந்திருக்கவும், அடியார்க்கு நல்லார், இக்கரிகால் வளவன்" எனக் கூறியுள்ளார்.

நாடு காண் காதையில் வரும், "உழைப்புலிக் கொடித் தேர் உரவோன்"[22] என்ற தொடரில் வரும் "உரவோன்" என்பதற்கு, அடியார்க்கு நல்லார், "உரவோனாகிய கரிகாலன்" எனப் பொருள் கூறியுள்ளார்.

அடைக்கலக் காதையில் வரும் "வேந்துறு சிறப்பின் விழுச் சீர் எய்திய மாந்தளிர் மேனி மாதவி"[23] என்ற

தொடரில் வரும் "வேந்தன்" என்பதற்கும் அடியார்க்கு நல்லார், "கரிகாலன்" என்றே பொருள் கொண்டுள்ளார்.

வஞ்சின மாலையில், கண்ணகி, புகார் நகரத்தில் தனக்குமுன் வாழ்ந்திருந்த கற்புடை மகளிர் எழுவர்களை வரிசையாகக் கூறுங்கால், ஆதி மந்தியைப் பெயர் சுட்டிக் கூறாமல், "மன்னன் கரிகால் வளவன் மகள்"[24] எனக் கூறியுள்ளார் இளங்கோவடிகளார்.

**கரிகாலன் பற்றி பரணர் கூறுவது :**

விரிந்த தலையாட்டம் எனும் அணியால் சிறந்த, விரைந்து ஓடவல்ல, நல்ல குதிரைப் படையுடன் கூடிய, பகைவர்க்கு அச்சம் தரவல்ல சேனையுடன், தனக்கு ஏற்புடைய, களத்தில் தங்கி இருந்த பெரிய வளத்தை உடைய கரிகால் வளவன் முன் செல்லமாட்டாது, வாகைப் பறந்தலை எனும் இடத்தே நடந்த போர்க்களத்திற் கண், அவன் வெற்றி பெற்று விடவே, தம் ஒன்பது குடைகளையும் நல்ல பகல் போதிலேயே போட்டுவிட்டு ஓடிய, பெருமை இழந்த மன்னர்.

"விரி உளைப் பொலிந்த பரிஉடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டு புலத்து இறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை; ஆடு பெற
ஒன்பது குடையும் நண்பகல் ஒழித்த
பீடு இல் மன்னர்"[25]

கடுஞ்சினமும், பேராற்றலும், பெரும் புகழும் வாய்ந்த கரிகால் வளவன், ஆரவாரமும், கள் வளமும் வாய்ந்த வெண்ணிவாயில் என்னும் இடத்தில், சிறப்பு வாய்ந்த பகை அரசர் பகைத்து வந்த போரில், பேரொலி எழுப்பும் வீர முரசு போர்க்களத்தே ஒழிந்துகிடக்க, வேளிர் பதினொரு

வருடன், இருபெரு வேந்தர்களும், நிலை கெட்டுப் போகு மாறு அவர்கள் படைஆற்றலை அழித்தநாளில், அழுந்தூர்க் கண் எழுந்தது ஆர்ப்பு.

"காய்சின மொய்ம்பின் பெரும் பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழ் இசை முரசம் பொருகளத்து ஒழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி அறுத்த ஞான்றைத்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பு"[26]

"கழா அர் என்னும் ஊரில், பெரிய சுற்றத்தோடு இருந்து கரிகால் வளவன் கண்டு கொண்டிருக்க, புனல் ஆடல் மேற்கொண்டு, சிறந்த வேலைப்பாடு அமைந்த வீரக் கழல் காலில் புரள, கரிய கச்சணிந்து அடிவயிற்றில் மணியும் கட்டிக்கொண்டு, கஞ்ச தாளம் ஒலிக்க புனலாடலை விரும்பி ஆடும், ஆட்டனத்தியின் அழகை விரும்பி, காவிரி யாறு ஈர்த்துக்கொண்டு ஒளித்துக்கொண்டது."

"கழா அர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதம் கொண்டு தவிர்ந்த இன்னிசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
கருங் கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
இரும்பொலப் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்
புனல் நயந்து ஆடும் அத்தி அணிநயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு"[27]

"வாள், வலந்தர மறுப்பட்டன" எனத் தொடங்கும் மற்றொரு புறநானூற்றுப் பாடலும்[28], பரணர் பாடியதே. அப்பாடல், பரணர், உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி யைப் பாடியதாக அப்பாடலின் கொளு கூறுகிறது. பாட்

டுடைத் தலைவன் யாவனே ஆயினும், அவனை முன்னிலைப் படுத்தியே புரணர் பாடியுள்ளார், மூலத்தில் பெயர் இல்லை. ஆனால், அவன் பொற்றேர்மீது பொலிவுற வீற்றிருப்பவன் எனக் கூறப்பட்டுளது.

"பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி
மாக்கடல் நிவந் தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை"[29]

என்ற வரிகளைக் காண்க.

**கரிகாலன் பற்றி கருங்குழல் ஆதனார் :**

வளவ! என அழைத்து, அவன் ஆற்றல், அவன் நாட்டு வளங்களைப் பாடியுள்ளார்.[30] கொளு மட்டும், கரிகால் பெருவளத்தானைப் பாடியது என்கிறது.

— அவருடைய மற்றொரு புறநானூற்றுப் பாட்டல்[31] மூலத்தில் பெயர் பற்றி சிறு குறிப்பும் இல்லை. கொளுதான் கூறுகிறது. அவன் செய்த யாகம் குறிப்பிடப் பட்டுளது. வெறும் கையற்று நிலை.

**கரிகாலன் பற்றி கழாத்தலையார் :**

சேரமான் பெருஞ்சேரலாதன், சோழன் கரிகாற் பெரு வளத்தானோடு பொருது புறப்புண் நாணி வடக்கு இருந் ததைக் கூறுவதாகக் கொளு கூறுகிறது. மூலத்தில் பெயர்கள் குறிப்பிடப் படவில்லை.

"உலவுத் தலை வந்த பெருநா ளமயத்து
இருசுடர் தம்முள் நோக்கி ஒரு சுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்
தன்போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கு இருந்தனன்"[32]

**கரிகாலன் பற்றி வெண்ணிக் குயத்தியார் :**

"காற்றை ஆட்கொண்டு கடலில் கப்பல் ஓட்டிவிட்ட குலத்தில் வந்தவன். கரிகால் வளவன் எனும் பெயர் உடையான். வெண்ணிப் போர் வெற்றி கொண்டவன். அவன் பகைவன் (பெயர் குறிப்பிடப் படவில்லை) வடக்கு இருந்து உயிர் விட்டான் என்கிறது அவருடைய புறப் பாடல்.

"நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!
களி அயல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றோ?
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப் புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே"[33]

**கரிகாலன் பற்றிப் பிற இலக்கியங்கள் கூற்று :**

கரிகாலன் இமயத்தில் புலி பொறித்த நிகழ்ச்சி, காவிரிக்குக் கரை அமைத்த சிறப்பு, பட்டினப் பாலை பாடிய புலவருக்குப் பரிசளித்த கொடைத்தன்மை போன்றவற்றை, விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், கலிங்கத்துப் பரணி ஆகிய இலக்கியங்களும் கூறியுள்ளன.

"தெள்ளருவிச்
சென்னிப் புலியேறு இருத்திக் கிரிகிரித்துப்
பொன்னிக் கரை கண்ட பூபதி"[34]

—விக்கிரம சோழன் உலா.

"தலையேறு
மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதான்
கண்கொண்ட சென்னிக் கரிகாலன்"[35]

—குலோத்துங்க சோழன் உலா.

"முழுகுல நதிக்கரசர் முடிகொடு வகுத்தகரை
முகில்தொட அமைத்தது அறிவோம்
இருபுறமும் ஒக்க நினது ஒருபுலி பொறிக்க வட
இமகிரி திரித்தது அறிவோம்."[36]

—குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்

"தொழுது மன்னரே கரைசெய் பொன்னி"[37]

—கலிங்கத்துப் பரணி.

"செண்டுகொண்டு கரிகாலன் ஒருகாலின் இமயச்
சிமயமால்வரை திரித்து அருளி, மீள அதனைப்
'பண்டு நின்றபடி நிற்க இது' என்று முதுவில்
பாய்புலிக் குறிபொறித்து அது மறித்தபொழுதே"[38]

—கலிங்கத்துப் பரணி.

"தத்துநீர் வரால் குறுமி வென்றதும்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்
பத்தொடு அறுநூறு ஆயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"[39]

—கலிங்கத்துப்பரணி.

ஆக, திருமாவளவன் வரலாறு அறியத் துணை நிற்பன, முடத்தாமக் கண்ணியாரின் பொருநராற்றுப்படை, கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் பட்டினப்பாலை ஆகிய இரண்டு நெடும்பாடல்களும், இளங்கோவடிகளாரின் சிலப்பதிகார வரிகளும், பரணர் பாடிய அக நானூற்றுப் பாடல்கள் மூன்றும் (அகம் 125, 246, 376), கருங்குழல் ஆதனார் பாடிய புறநானூற்றுப் பாக்கள் இரண்டும் (7, 224), வெண்ணிக் குயத்தியார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றும் (46), ஒட்டக்கூத்தரின் மூவர் உலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் வரிகளும், ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி பாடல்களும் ஆகிய இவை மட்டுமே.

"பெருநராற்றுப்படை பாட்டுடைத் தலைவன், கரிகாலனும், பட்டினப்பாலை பாட்டுடைத் தலைவன் திருமாவளவனும், வேறுவேறுபட்ட இருவரா? அல்லது இருவரும் ஒருவரா?"

இந்த வினாக்களுக்கு விடை காண முற்பட்ட ஆய்வாளர்களிடையே கருத்து முரண்பாடு காணப்படுகிறது. தெளிவான முடிவு ஆய்வாளர்களிடையே உருவாகவில்லை.

பேராசிரியர் **சி. ஈ. இராமச்சந்திரன்** அவர்களுடைய கருத்து:

சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறைத் தலைவராக விளங்கிய பேராசிரியர் டாக்டர் சி. ஈ. இராமச்சந்திரன் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகச் செய்தி ஏட்டில், மனித இனம் பற்றிய பொருட் பகுதியில் 'திருமாவளவன்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.[40]

அதில், புலவர்களும் வரலாற்றுப் பேராசிரியர்களும், திருமாவளவனும், கரிகாலனும் வேறு வேறு பட்டவர் அல்லர். ஒருவரே என ஏற்றுக் கொண்டிருப்பதை மறந்து விட்டு, அவர்கள் இருவரும், ஒருவர் அல்லர். வேறு வேறு பட்டவர்களே என்பதை நிலைநாட்ட முன்வந்துள்ளார்.

தம் முடிவுக்கு திருவாளர் ரா. இராகவையங்கார் அவர்களைத் துணையாகக் கொண்டுள்ளார்.[41] அம்முடிவுக்குத் திருவாளர் அய்யங்கார் கூறும் காரணங்கள் வருமாறு:

1. எட்டுத்தொகை நூல்கள் எதுவும், கரிகாலனின் இமயப் படையெடுப்பு பற்றிக் கூறவில்லை.[42]

2. பத்துப்பாட்டில் ஒன்றாகிய பொருநராற்றுப்படை கூற்றுப்படி, கரிகாலன், தாய் வயிற்றில் இருக்கும் போதே அரச உரிமையைப் பெற்றுவிட்டான்.[43] அதே

பத்துப் பாட்டு வரிசையைச் சேர்ந்த பட்டினப்பாலை கூற்றுப்படி, திருமாவளவன், சிறையினின்றும் தப்பித்து வெளியேறித் தன் ஆற்றலால் அரசு உரிமையைப் பெற்றான்.[44]

3. எட்டுத் தொகையுள் ஒன்றாகிய புறநானூறு, கரி காலன் வெண்ணியில் பெற்ற வெற்றியைக் கூறுகிறது.[45] ஆனால், பட்டினப்பாலையோ, சிலப்பதிகாரமோ வெண்ணிப்போர் குறித்து ஏதும் கூறவில்லை.

4. அகநானூறு, கரிகாலன் வாகைப் பறந்தலையில் பெற்ற ஒரு வெற்றியைக் குறிப்பிடுகிறது.[46] இந்த வெற்றியும் பட்டினப்பாலையிலோ, சிலப்பதிகாரத்திலோ இடம் பெறவில்லை.

5. புறநானூறு அவன் செய்த வேத வேள்விகள் பலவற் றைக் குறிப்பிடுகிறது.[47] ஆனால், சிலப்பதிகாரமும், பட்டினப்பாலையும் அவன் சமயத் தொண்டு எதையும் குறிப்பிடவில்லை.

6. நச்சினார்க்கினியர் கூற்றுப்படி, திருமாவளவன் என்ற பெயரில் வந்திருக்கும் 'திரு' என்பது பெருமை சேர்க்க வந்த சிறப்பு அடையாயின், அவன் பெயர் "மாவள வன்" என்பதே ஆம். அங்ஙனமாக, "மாவளவன்" என்ற பெயர் உடைய சோழ அரசர்கள் மூவர் உள்ளனர்.

1. நலங்கிள்ளிச் சேட் சென்னியின் தம்பி மாவளத் தான்,
2. நெடுமாவளவன் என அழைக்கப்படும் குளமுற்றத் துத் துஞ்சிய கிள்ளிவளவன்.
3. திருமாவளவன்.

ஆகவே, திருமாவளவன், கரிகாலன் ஆதல் இயலாது.

திருவாளர், அய்யங்கார் கூறிய, மேலே காட்டிய காரணங்களை அகச்சான்றுகளாகக் கொண்ட பேராசிரியர் இராமச்சந்திரன் அவர்கள், அடுத்து அவற்றுள் ஏற்பன, ஏலாதனவற்றைக் கூறியுள்ளார்.

1. கரிகாலனின் இமயப்படையெடுப்பு, எட்டுத் தொகை நூல்களில் இடம் பெறாதது, திருமாவளவனையும், கரிகாலனையும் ஒருவராகக் கொள்ளும் முடிவுக்கு எதிரான போதுமான சான்றாக அமையாது. அவன் இமயப்படையெடுப்பு, எட்டுத் தொகை நூலாசிரியர்கள், தங்கள் பாக்களைப் பாடியபின்னர் நிகழ்ந்திருக்கக்கூடும்.

2. அதே போல், வெண்ணி, வாகைப் போர்கள் குறிப்பிடப்படாமை, திருமாவளவனையும், கரிகாலனையும் ஒருவராகக் கொள்ளும் முடிவைப் பலவீனப்படுத்தாது. பட்டினப்பாலை ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார், கரிகாலன் தன்நாட்டகத்தே ஒருசில அரசர்களோடும், குறுநிலத் தலைவர்களோடும் பெற்ற வெற்றிகளைக் காட்டிலும், அவன் வேறு இடத்தில் பெற்ற வெற்றிகளால் ஈர்க்கப்பட்டிருக்கலாம்,

3. கரிகாலன் செய்த வேத வேள்விகள், பட்டினப்பாலை ஆசிரியர் காலத்தில், அத்துணைச் சிறப்புடையதாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஆகவே, அவர், தம் பாட்டில் அவற்றைப்பற்றி குறிப்பிடாமல் விட்டிருக்கக் கூடும்.[44].

இவ்வாறு கூறியதன் மூலம், பேராசிரியர் இராமச்சந்திரன் அவர்கள், திரு. அய்யங்கார் கூறிய காரணங்கள் ஆறினுள், நான்கினை (1,3,4,5) பொருள் அற்றனவாக்கி விட்டார். ஆராய எஞ்சி நிற்பன, 2 மற்றும் 6 ஆகிய இரண்டு மட்டுமே.

இவ்வாறு, திருவாளர் அய்யங்கார் அவர்களின் காரணங்கள் சிலவற்றை மறுத்துவிட்ட பேராசிரியர் இராமச்சந்திரன் அவர்கள், திருமாவளவன் வேறு; கரிகாலன் வேறு என்பதற்காகப் பின்வரும் காரணங்களைக் கூறியுள்ளார்.[49]

1. பொருநராற்றுப்படை, கரிகாலன், தன் அரச உரிமையை, அவன், தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே பெற்று விட்டான் என்கிறது.[50] ஆனால், பட்டினப் பாலையோ, கரிகாலன், தனக்கு உரிய அரசைப் பெறுவதன் முன்னர்ச் சிறையில் இருந்தான் என்கிறது.[51]

2. மேலும், பொருநராற்றுப்படை, கரிகாலன் பிறந்து, தவழத் தொடங்கிய காலத்திலேயே அரச உரிமையைத் தோளில் தாங்கிக்கொண்டான் என்கிறது.[52] மேலும், அதே நூல், கரிகாலன் தன் இளமைப் பருவத்திலேயே வெண்ணிப்போரில் ஏனைய இரு பேரரசர்களை வென்றான் என்றும் கூறுகிறது.[53] கரிகாலன் வெற்றிச் செயல் புலி, குட்டியாக இருக்கும்போதே, பெரிய ஆண் யானையை வீழ்த்திய செயலோடு ஒப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, இப்போர், அவன் இளமைப் பருவத்திலேயே நடைபெற்றதாதல் வேண்டும். இதிலிருந்து, கரிகாலன் சிறைபடுமளவு ஆற்றல் குறைந்தவனாக இல்லை என்பது பெறப்படுகிறது.

3. பொருநராற்றுப் படை, கரிகாலன், தமிழ் அரசர் இருவரை வெற்றிகொண்டான் எனக்கூறும்போது, பட்டினப்பாலை அவன், பாண்டியன் ஒருவனை வென்றதாகக் கூறுகிறது.[54]

4. இவை அல்லாமல், திருமாவளவனின் வடநாடு வெற்றி குறித்துக் கூறும் பட்டினப்பாலை, சிலப்பதிகாரப் பாடல்களுக்கு இடையிலும் ஒத்த கருத்து இல்லை. சிலப்பதிகாரம், திருமாவளவன், இமயம் வரை சென்று

அதன் மீது தன் புலிச் சின்னத்தைப் பொறித்து மீண்டான் என்றும், தென்னாட்டில் பகைவர் இல்லை. ஆகவே, பகைவர் தேடி அவன் வடநாடு சென்றான் என்றும் கூறுகிறது.[55] ஆனால், பட்டினப்பாலையோ, அவன், வடக்கிலும், மேற்கிலும், கிழக்கிலும் வெற்றி பெற்றான் என்றுதான் கூறியுள்ளது.[56] இமயப் படையெடுப்பு பற்றிக் குறிப்பிடவில்லை. இமய வெற்றி, பட்டினப்பாலை ஆசிரியரால், கூறாமல் விடப்படுமளவு, சிறிய வெற்றி அன்று; ஆகவே பட்டினப்பாலை திருமாவளவனும், சிலப்பதிகாரத் திருமாவளவனும் ஒருவர் அல்லர்.

5. புறநானூறு; பெருந்திருமாவளவன் என்பவன் ஒருவனைக் குறிப்பிடுகிறது.[57] இதன் மூலம் இரண்டு திருமாவளவன்கள் (மூத்தவன்; இளையவன்) இருந்தனர் என்பதும், திருமாவளவன் எனும் பெயர் உடையார் ஒருவர்க்கு மேற்பட்டவர் இருந்தனர் என்பதும் பெறப்படுகிறது.

6. முதலாம் இராசராசனின், 'லெய்டன் செப்பேடுகள்[58] (*Leyden Grants*): முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காடு செப்பேடு[59], வீரராசேந்திரனின் கன்னியகுமரிக் கல்வெட்டு[60], ஆகிய இம் மூன்று ஆவணங்களும், கரிகாலன் காவிரிக்குக் கரை கட்டியதைக் கூறுகின்றன. ஆனால் இமயப் படையெடுப்பு குறித்து ஏதும் கூறவில்லை. இமயப் படையெடுப்பு என்பது மிகச்சிறிய வீரச் செயலாகாது, மிகப் பெரிய வீரச் செயலாதலின், அது உண்மையில் நடந்திருக்குமாயின், இம்மூன்று கல்வெட்டுக்களும் அதைக் குறிப்பிடாமல் தவிர்த்து இரா.

7. சேரவேந்தன் நெடுஞ்சேரலாதன், இமயத்தே வில் பொறித்தமையால், அச்செயலை அவன் பெயரோடு இணைத்து, அவனை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்[61] என அழைப்பது போல், கரிகாலனின் இமயப்

படையெடுப்பு உணர்த்தும் எந்த அடையும் அவன் பெயரோடு இணைக்கப் படவில்லை.

8. கலிங்கத்துப் பரணி, குறுமி என்ற ஊரை வென்றவனும், பட்டினப்பாலை நூலைப் பாடிய புலவனுக்குப் பதினாயிரம் பொன் பரிசு அளித்தவனும் ஆகிய சோழன் ஒருவனைக் குறிப்பிடுகிறது.[62] ஆனால் பெயர் கூறவில்லை. உரை ஆசிரியர்கள், அவன் கரிகாலன் என்கின்றனர். இரண்டையும் செய்தவன் ஒருவனே ஆயின், கரிகாலனின் இமயப் படையெடுப்பைக் கூறிய புலவர்களில், எவரும், குறுமி வெற்றியைக் குறிப்பிடவில்லை. ஆகவே, குறுமி வென்ற சோழன் கரிகாலன் ஆகான். ஆகவே, பட்டினப் பாலைக்குப் பரிசளித்த சோழனும், கரிகாலன் ஆகான். அவன் திருமாவளவனின் வேறுபட்டவனே ஆவன்.

9. இளங்கோ அடிகள், இரண்டு இடங்களில் கரிகாலனைப் பெயர் சுட்டிக் கூறியுள்ளார்.[63] அந்த இரு இடங்களிலும், கரிகாலனின் இமயப்படை எடுப்பு பற்றிய சிறு குறிப்பும் இல்லை. ஆனால் திருமாவளவன்[64] ஒரு இடத்தில் தான் குறிப்பிடப் பட்டுள்ளான். அந்த இடத்தில் மட்டும் இமயப் பெரு வெற்றிச் செயலைக் குறிப்பிட்டுள்ளார். திருமாவளவன், கரிகாலன் இருவரும் ஒருவரே ஆயின், இளங்கோ அடிகள், தம் நூல் நெடுகிலும், அவற்றுள் ஏதேனும் ஒரு பெயரையே ஆண்டிருப்பர். வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு பெயர்களை ஆண்டிருக்க மாட்டார், ஆகவே, இளங்கோ அடிகள், கரிகாலன், திருமாவளவன் ஆகிய இருவரையும் வேறுபட்ட இருவராகவே கொண்டுள்ளார்.[65]

இனி, 'கரிகாலன் வேறு, திருமாவளவன் வேறு, என்பதற்கான காரணங்களாக, ஆய்வாளர்கள் கூறியுள்ளவற்றின் தகுதி, தகுதி இன்மைகளை ஆராய்வாம்.

1. கரிகாலன், அவன் தாய் வயிற்றில், கருவாக இருக்கும் போதே அரசுரிமை பெற்று விட்டான் என்றால், அவன் தந்தை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, அவன் பகைவரால் கொல்லப்பட்டு விட்டான், அல்லது, இயல் பாகவே இறந்து விட்டான் என்பது பொருள்.

கரிகாலன், பகைவர் சிறையகத்திருந்து வெளி யேறிப் பகை வென்று தன் அரசுரிமையைப் பெற்றான் என்றால், கரிகாலன் பிறந்து வளரும் பருவத்தில், அவன் தந்தை இறந்துபோக, அரசிழந்திருந்த சோழ நாட்டு அரியணையைக் கைப்பற்றிக் கொண்ட யாராலோ, அவன் சிறையில் அடைக்கப்பட்டான். ஆகவே சிறையிலிருந்து வெளியேறிப் பகை அழித்து அரசுரிமைப் பெறவேண்டியதாயிற்று என்பது பொருள்.

''தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தி''[66] என்ற பொருநராற்றுப்படை வரியிலிருந்தும்,''

'' கூருகிர்க்
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத்திருந்து பீடுகாழ் முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள் கழித்
துருகெழு தாய மூழ்தினெய்தி''.[67]

என்ற பட்டினப் பாலை வரிகளிலிருந்தும் இயல்பாகப் பெறக் கூடிய பொருள் இதுவாக இருக்கவும், அவற்றை வரலாற்று நிலையில் முரண்பட்டனவாகக் கொண்டு, அவ்வாறு, பிழை படக் கொண்ட ஒரு முடிவை, பிறிதொரு வரலா உண்மைக்கு மாறான ஒரு முடிவுக்கு அகச்சா கொள்வது முறையாகாது.

2. கரிகாலன், சோழர் பேரரசு ஆண்ட, உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகன் என்பதாலும், அத் தந்தை அவன் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டிருக்கக் கூடும் ஆதலாலும், கரிகாலன், இளமைப் பருவத்தி லேயே அரசுரிமையைத் தாங்க நேர்ந்தது என்பதில் முரண்பட்டது இல்லை. பேரரசர் இருவர், வேளிர் பதினொருவர் ஒருங்கே அழிந்துபோக நடைபெற்ற வெண்ணிப் போர், கரிகாலன் சிறையிலிருந்து வெளி யேறிப் பகை அழிக்க முனைந்த போர் எனக் கொண் டால், (இயல்பாக அதுவே நடந்திருக்கக் கூடியது) களிற்றைக் கொன்ற புலிக் குருளையை உவமையாகக் கொண்டதிலும் முரண்பாடு இல்லை.

3. கரிகாலன் தமிழ் அரசர் இருவர்களையும் வென்றான் எனப் பொருநராற்றுப்படை கூறியிருப்பது போலவே, பட்டினப் பாலையும் கூறியிருக்கிறது. "தென்னவன் திறல்கெட" என்ற தொடருக்கு முன்னே, "குடவர் கூம்ப" என்ற தொடர் வந்திருப்பது காண்க. "குடவர்" என்பார், தமிழகத்தின் மேற்குத்திசைக் காவலர்களாய சேரர் ஆவர். "வஞ்சி முற்றம் வயக்களனாக, அஞ்சா மறவர் ஆட்போர் பழித்துக் கொண்டனை பெரும, குடபுலத்து அதரி"[68] என்ற தொடரினைக் காண்க.

யானைக் கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும் பொறை என்ற சேர வேந்தன், 'குடவர் கோ' என அழைக்கப்படுதலும் காண்க.[69]

4. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ வடிகளார், திருமா வளவனுக்குக் குறைந்தது ஒரு தலைமுறைக்கு மேலே, காலத்தால் பிற்பட்டவர். அதனால், அவன் வாழ்க் கையில் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் அறிந்து கூற அவரால் முடியும். அவ்வாறே கூறி யுள்ளார்.

ஆனால், பட்டினப்பாலை ஆசிரியர், அவன்பால் பதினாறு ஆயிரம் பொன் பரிசில் பெற்றவர். அவன் சம காலத்தவர். அவர் பட்டினப் பாலை பாடும்வரை வடநாட்டுப் படையெடுப்பு நிகழாதிருந்திருக்கக் கூடும். தென்னாட்டில் பகைவர் இல்லையாகவே, வடநாடு நோக்கிச் சென்றான் கரிகாலன் என்கிறது சிலப்பதிகாரம். அவ்வாறு, தென்னாட்டில் பகையேதும் இல்லாமல் செய்ய, கரிகாலனுக்குப் பல ஆண்டுகள் ஆகியிருக்கக் கூடும். அதனால் அவன் வடநாடு சென்றது, அவன் ஆட்சிக் காலத்து இறுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியாக இருந்திருக்கவும் கூடும். அதனால், அதைப் பட்டினப்பாலை ஆசிரியர் கூறாது விட்டிருக்கவும் கூடும். ஆகவே அது வரலாற்றுப் பிழையாகாது.

ஒருவர் கூறியதை, மற்றொருவர் கூறவில்லை, என்பதினாலேயே, அந்த ஒருவர் கூறியது நடவாத ஒன்று என்ற முடிவுக்கு வரக்கூடாது என்பதைப் பேராசிரியர். சி. ஈ. இராமச்சந்திரன் அவர்களே ஒப்புக்கொண்டுள்ளார்.

"திருமாவளவன்" என்ற தலைப்புள்ள அவருடைய கட்டுரையிலேயே, திருவாளர். ரா. ராகவையங்கார் அவர்கள் கூறிய கருத்து ஒன்றை மறுக்கும் நிலையில்[70]

"கரிகாலனின் இமயப் படையெடுப்பு எட்டுத் தொகை நூல்களில் இடம் பெறாதது, திருமாவளவனையும், கரிகாலனையும் ஒருவராகக் கொள்ளும் முடிவுக்கு எதிரான போதுமான சான்றாக அமையாது. அவன் இமயப் படையெடுப்பு, எட்டுத்தொகை நூலாசிரியர்கள் தங்கள் பாக்களைப் பாடிய பின்னர் நிகழ்ந்திருக்கக் கூடும்."[71] என்று கூறியுள்ளார்.

மேலும், அந்தக் கட்டுரையிலேயே "அதேபோல், வெண்ணி, வாகைப் போர்கள் குறிப்பிடப் படாமை

திருமாவளவனையும், கரிகாலனையும் ஒருவராகக் கொள்வதைப் பலவீனப் படுத்தாது. பட்டினப்பாலை ஆசிரியர், கரிகாலன் தன் நாட்டில், ஒருசில அரசர்களோடும், குறுநிலத் தலைவர்களோடும் பெற்ற வெற்றிகளைக் காட்டிலும், அவன் வேறு இடத்தில் பெற்ற வெற்றிகளால் ஈர்க்கப் பட்டிருக்கலாம்."[12] என்றும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாம்.

"அது கூறப்படவில்லை; ஆகவே அது இல்லாத ஒன்று" என்ற வாதத்திற்குத் திருவாளர். பி.டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள், தம்முடைய 'தமிழர் வரலாறு' என்ற நூலில் அளித்திருக்கும் விளக்கமும் ஈண்டுகுறிப்பிடல் தகும். "இருக்கு வேதத்தில் ஆலமரம் குறிப்பிடப்படவில்லை என்பதால், அவ்வேதம் எழுதப் பட்ட காலத்தில் இந்தியாவில் ஆலமரம் என்பதே இல்லை என்ற வாதம் சரியான வாதம் ஆகாது."[13]

5. ஒரு அரசனைப் புலவர் பலர் பாடியுள்ளமைக்கும், ஒரே புலவர், பல அரசர்களைப் பாடி உள்ளமைக்கும் சங்க இலக்கியங்களில் எண்ணற்ற சான்றுகள் உள்ளன. ஆகவே, பொருநராற்றுப்படையின் திருமாவளவனும், சிலப்பதிகாரத் திருமாவளவனும் ஒருவர் அல்லர்; வேறு வேறு பட்டவர் என்பதற்கான நல்ல அகச்சான்று எதுவும் காட்டாமல், திருமாவளவன் எனும் பெயர் உடையார் பலர் உள்ளனர் என்பது ஒன்றைக் கொண்டே அம்முடிவுக்கு வருவது வாதநெறியாகாது.

ஒரு அரச குலத்தில், ஒரே பெயர் உடையார் பலர் இருத்தல் இயல்பே; அந்துவஞ் சேரல் இரும்பொறை, இளஞ் சேரல் இரும்பொறை, யானைக் கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை; தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை: இவர் சேரர் குலத்தவர்,

கடலுள் மாய்ந்த இளம் பெரு வழுதி; கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி; பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி; வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய வழுதி; இவர் பாண்டியர் குலத்தவர்.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி; போரவைக் கோப் பெருநற்கிள்ளி; முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி; வேற்பஃறடக்கை பெருவிறற் கிள்ளி; இவர் சோழர் குலத்தவர்.

இவ்வகையில், சோழர் குடியில், திருமாவளவன் எனும் பெயர் உடையார், ஒருவர்க்கு மேற்பட்டவர் இருத்தல் இயல்பே. அவ்வகையில் திருமாவளவன் என்னும் பெயர் உடையவர் பலர் இருந்திருக்கக் கூடும். அது கொண்டே பட்டினப்பாலைத் திருமாவளவன் வேறு; சிலப்பதிகாரத் திருமாவளவன் வேறு என முடிவு செய்தல் முறையாகாது.

6. திருமாவளவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, பட்டினப்பாலை பாடிய, அவன் சமகாலப் புலவரும், திருமாவளவன் காலத்துக்குச் சற்றே பிற்பட்ட காலத்தில் வாழ்ந்திருந்த சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகளாரும், திருமாவளவனின் இமயப் படையெடுப்பைக் கூறியிருக்கும் நிலையில், திருமாவளவன் காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு மேல் பிற்பட்ட காலத்தவனாகிய, முதலாம் இராசராசனின் லெய்டன் செப்பேடு, முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காடு செப்பேடு, வீரராசேந்திரனின் கன்னியாகுமரிக் கல்வெட்டு ஆகியன, இமயப்படையெடுப்புபற்றி ஏதும் கூறவில்லை என்பது கொண்டு, இமயப் படையெடுப்பே நிகழவில்லை; ஆகவே, அப்படையெடுப்பின் தலைவனாகிய திருமாவளவனும் இல்லை என்பது பொருந்தாது.

இருக்கு வேதத்தில் ஆல் கூறப்படவில்லை; ஆகவே அவ்வேத காலத்தில் ஆலே இல்லை என்ற வாதத்தின் பொருத்தமின்மை ஈண்டும் பொருந்தும்.

7. கண்ணகி சிலைக்கான கல்லை இமயத்தே எடுத்து, கங்கையில் நீராட்டிக் கொண்டு வந்தான் சேரன் செங்குட்டுவன். ஆனால், அப்பெருஞ் செயல், அவன் பெயரோடு இணைத்து வழங்கப்படவில்லை. ஆகவே, இமயத்தில் வில் பொறித்த நெடுஞ்சேரலாதன் செயலை, அவன் பெயரோடு இணைத்து அவன் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என அழைக்கப்பட்டதுபோல், திருமாவளவன் இமயத்தில் புலி பொறித்தான் என்பது உண்மை நிகழ்ச்சியாயின், அச்செயல், அவன் பெயரோடு இணைத்து வழங்கப்பட்டிருக்கும்; ஆனால், அவ்வாறு வழங்கப்படவில்லை. ஆகவே, திருமாவளவன் இமயத்தே புலி பொறித்தான் அல்லன் என்பது பொருந்தாது.

8. கலிங்கத்துப்பரணி ஆசிரியரும், கரிகாலனின் வரலாறு அனைத்தையும் பாடிவிடவில்லை. அவன் வாழ்க்கையில் நிகழ்ந்தன அனைத்தையும் கூறி விடவில்லை. அவன் வாழ்க்கையின் திருப்பு முனையாக அமைந்த நிகழ்ச்சி, பகைவர் சிறையினின்றும் வெளியேறிப் பகை வென்று அவன் தன் அரசுரிமையைப் பெற்றது, ஆகும். அதையே கலிங்கத்துப் பரணி ஆசிரியர் கூறவில்லை. அவர் அதைக் கூறவில்லை; ஆகவே அது நிகழவில்லை என் வாதிடல் பொருந்தாது.

இந்த வாதம் எவ்வாறு பொருந்தாதோ, அவ்வாறே, குறுமி வெற்றியைப் புலவர்கள் பாடவில்லை. ஆகவே குறுமி வென்ற சோழன் கரிகாலன் ஆக மாட்டான்; ஆகவே பட்டினப் பாலையின் பாட்டுடைத் தலைவனும் கரிகாலன் ஆகான். ஆகவே, அவன் திருமாவளவனும் அல்லன், என்ற வாதமும், பொருந்தாது. ஒருவர் ஒன்றைப் பாடவில்லை. ஆகவே, அது நடைபெறவில்லை என்ற வாதம் பொருந்தாது! என்பதைப் பேராசிரியர், டாக்டர் சி. ஈ. இராமச்

சந்திரன் அவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதை முன்னரே விளக்கியுள்ளேன்.

9. இளங்கோ அடிகளார், கடலாடு காதை, வஞ்சின மாலை ஆகிய இரு இடங்களில்,[74] கரிகாலன் எனப் பெயர் சுட்டிக் கூறியுள்ளார், எனவும், இந்திரவிழா ஊர் எடுத்த காதையில் மட்டும்[75] திருமாவளவன் என்ற பெயரை ஆண்டுள்ளார் எனவும், பேராசிரியர், டாக்டர் சி. ஈ. இராமச்சந்திரன் அவர்கள் கூறியுள்ளார்.[76] இதில் ஒரு திருத்தம். இந்திரவிழா ஊர் எடுத்த காதையில் திருமாவளவன் என்ற பெயர் இடம் பெற்றிருப்பது உண்மை. ஆனால், கடலாடு காதை, வஞ்சின மாலைகளில் ஆண்டிருப்பது, வெறும் 'கரிகாலன்' என்ற பெயர் அன்று; மாறாகக் 'கரிகால் வளவன்' என்ற பெயராகும்.

கடலாடு காதை, வஞ்சினமாலை ஆகிய இடங்களிலும் வரும் கரிகால்வளவன், சிலப்பதிகாரத்துக்கும், அதாவது, கண்ணகி வாழ்ந்த காலத்துக்கும் முந்திய காலத்துக் கரிகால்வளவனே ஆவன் என்பது, அக்கரிகால்வளவர் இருவரும், புதுப்புனல் விழாக் கொண்டாடிய கரிகால்வளவர் எனவும், கரிகால்வளவன் மகளின் கணவனாம், ஆட்டனத்தியைக் காவிரி ஈர்த்துச் சென்ற காலத்துப்புனல் விழாக் கண்டிருந்த கரிகால்வளவனாம் எனவும் கூறப் பட்டுள்ளனர் என்பதால் புலனாகிறது.

அப்புனல் நிகழ்ச்சி, கண்ணகி காலத்துக்கு முந்தையது என்பது, அவ்வாதி மந்தியைப் போல்வார் எழுவர் வாழ்ந் திருந்த புகார் எனக் கடந்த கால நிகழ்ச்சிகளாகக் கண்ணகி கூறியிருப்பதால் உறுதிப்படும். ஆகவே. அவ்விரு இடங் களிலும் சுட்டிப் கூறப்பட்டிருக்கும் 'கரிகால்வளவன்', கண்ணகி காலத்தவனோ, அவளுக்குச் சிலை எடுத்த செங் குட்டுவன் காலத்தவனோ அல்லன்; மாறாக, அவர்கள்

காலத்துக்கு முற்பட்ட காலத்தவனே என்பது உறுதி செய்யப்படும்.

கண்ணகி காலத்துச் சோழன் கரிகாலன் அல்லன்; கரிகாலனாயின், மேலே கூறிய இடங்களில் கரிகால்வளவன் என்றோ, திருமாவளவன் என்றோ பெயர் சுட்டிக் கூறியதுபோல், இளங்கோ அடிகளார் கூறியிருப்பார். ஆனால், அவர் அவ்வாறு கூறாது, "செம்பியன்" என மங்கலவாழ்த்துப்பாடலிலும், [77] "மன்னன்" என அரங்கேற்றுக்காதையிலும் [78] இந்திரவிழா ஊர் எடுத்தக் காதையிலும் [79], "உழைப்புலிக் கொடித்தேர் உரவோன்" என நாடுகாண் காதையிலும் [80], "வேந்து" என அடைக்கலக் காதையிலும் [81], மன்னன், செம்பியன், வேந்து, என்ற பொதுப் பெயர்களால்தான் குறிப்பிட்டுள்ளார்.

இளங்கோ அடிகளார், அவ்வாறு கூறியிருப்பினும், அங்கெல்லாம் அடியார்க்கு நல்லார், கரிகாலன் என்றே பொருள் கொண்டுள்ளார் என்பது உண்மை. சிலப்பதிகாரத்துச் சோழ அரசன், கரிகாலனாயின், அவனுக்கு முற்பட்ட சோழ வேந்தனை, இந்திரவிழாவூர் எடுத்த காதையில் [82] "திருமாவளவன்" எனவும், கடலாடு காதை, வஞ்சின மாலைகளில், "கரிகால் வளவன்" [83] எனவும் பெயர் சுட்டிக் கூறியிருப்பது போல் கூறியிருப்பர். அவர் அவ்வாறு கூறவில்லை. ஆகவே சிலப்பதிகாரத்துச் சோழன் கரிகாலன் அல்லன்; அவனைக் கரிகாலனாகக் கொண்டது அடியார்க்கு நல்லார் செய்த பிழை.

அடியார்க்கு நல்லார் அந்த ஒரு பிழையை மட்டும் செய்தவர் அல்லர்; இந்திரவிழாவூர் எடுத்த காதையில், வடநாடு சென்ற சோழ வேந்தன் "திருமாவளவன்" என்னும் பெயர் உடையான் என, இளங்கோ வடிகளார் தெளிவாகக் கூறியிருக்கும், அங்கும், அவனைக் "கரிகாலன்" என்றே பொருள் கொண்டு, பெரும்பிழை செய்துள்ளார் அடியார்க்கு நல்லார்.

ஆக, "கரிகாற் பெருவளத்தான்" என ஆண்டிருக்கும் அவ்விரு நிகழ்ச்சிகளும் கண்ணகி காலத்துக்கும் முற்பட்ட நிகழ்ச்சிகளே ஆதலாலும், "திருமாவளவன்" என ஆண்டிருக்கும் நிகழ்ச்சியும் அதேபோல், கண்ணகி காலத்துக்கும் முற்பட்ட நிகழ்ச்சியே ஆதலாலும்; சோழ வேந்தன் குறிப்பிடப்படும் இடங்களிலெல்லாம், "கரிகாலன்" என்றே பொருள் கூறியுள்ள அடியார்க்கு நல்லாரும், "கரிகாற் பெருவளத்தான்" என வரும் அவ்விரு இடங்களில், 'கரிகாலன்' எனப் பொருள் கூறாமல், கரிகாலன் என்ற பெயரை அடுத்துத் திருமாவளவன் என்பதில் இடம் பெற்றிருக்கும் வளவன் என்பதையும் இணைத்து, மூலத்தில் உள்ளவாறே "கரிகாற் பெருவளத்தான்" என்றே பொருள் கொண்டுள்ளார் ஆதலாலும், மனையறம் படுத்த காதை, "உரைசால் சிறப்பின்" எனத் தொடங்குவதற்கு முன்னர், இடம் பெற்றிருப்பதாக மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் அவர்களின். சிலப்பதிகார மூலப் பிரதியில்,[84] "திருவின் செல்வியொடு" எனத் தொடங்கி. "இசையொடு சிறந்த" என முடியும் 13வரிகளில், "கரிகாற் பெரும் பெயர்த் திருமாவளவன்" எனக், கரிகாற்பெருவளத்தானும், திருமாவளவனும் ஒருவரே் என்பதை உறுதி செய்யும் சொற்றொடர் இடம் பெற்றுளது, ஆதலாலும், இளங்கோ அடிகளார். கரிகாற்பெருவளத்தான் என்ற பெயராலும், திருமாவளவன் என்ற பெயராலும் ஒருவனையே குறிப்பிட்டுள்ளார் என்பது உறுதியாம்.

கரிகாலனும், திருமாவளவனும் ஒருவன் அல்லர். வேறு வேறுபட்டவர் என்ற தம் கொள்கையை வலியுறுத்த பேராசிரியர், டாக்டர். சி. ஈ. இராமச்சந்திரன் அவர்கள் மற்றொரு வாதத்தையும் வைத்துள்ளார்.[85]

பட்டினப் பாலையில் வரும் 'திருமாவளவன்'[86] என்ற பெயரை. உரையாசிரியர் நச்சினார்க்கினியர், 'திரு-மா-வளவன்' எனப் பிரித்து, "திருவின் பெருமையையுடைய கரிகாற் பெருவளத்தான்" எனப் பொருள் கூறியுள்ளார்.[87]

ஆகவே, திருமாவளவன் என்பது ஒருவனின் இயற்பெயர் அன்று. வளவன் என்பதே இயற்பெயர். திரு-மா-இரண்டும். வளவனுக்குப் பெருமை சேர்க்க, அச் சொல்லோடு இணைக்கப்பட்ட அடைச் சொற்களே எனக் கூறியிருப்பதன் மூலம், திருமாவளவன் என்ற பெயருடையான் ஒருவனும் இருந்திலன் என வாதிடுகிறார்.

இவ்வாதத்தில் வலிவு இல்லை. அது எப்படியாயினும், இதில் நச்சினார்க்கினியரை ஏற்றுக் கொள்ளும் பேராசிரியர் இராமச்சந்திரன் அவர்கள், பொருநராற்றுப்படை ஈற்றிலும், பட்டினப் பாலை ஈற்றிலும், முறையே, 'சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடிய பொருநராற்றுப்படை' என்றும், 'சோழன்கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பட்டினப் பாலை' என்றும் கூறிப், பொருநராற்றுப்படை பாட்டுடைத் தலைவன் கரிகால் வளவனும்[88] பட்டினப்பாலை பாட்டுடைத் தலைவன் திருமாவளவனும்[89] ஒருவனே என்பது உறுதிபடக் கூறியிருப்பதையும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதுவே வாதமுறை.

ஆக, கரிகாலனும், திருமாவளவனும் ஒருவர் அல்லர், வேறு வேறு பட்டவரே என்ற தம் வாதத்தை வலியுறுத்த பேராசிரியர் சி. ஈ. இராமச்சந்திரன் அவர்கள் எடுத்து வைத்த காரணங்கள் எவையும் வாதநெறியோடு பட்டன அல்ல. ஆகவே, பொருநராற்றுப் படைக் கரிகால்வளவனும், பட்டினப்பாலை, சிலப்பதிகாரத் திருமாவளவனும், ஒருவனே; சிலப்பதிகாரக் காலத்துக்கு முற்பட்டவனே என்பது உறுதி ஆகிவிட்டது.

இது, உறுதியாகிவிடவே, தம் கட்டுரையின் ஈற்று இரு பத்திகளில், அவ்விருவர்களில், யார் முந்தியவர் என்ற ஆராய்ச்சியில் இறங்கி, திருமாவளவனே முந்தியவன் என முடித்திருக்கும் முடிபு[90] குறித்து ஏதும் கூறத் தேவையில்லை என்பதால், ஏதும் கூறினேன் அல்லன்.

## சான்றெண் விளக்கம்

1. முடத்தாமக் கண்ணியார். பொருநராற்றுப்படை, வரிகள் 129-148
2. மேலது, வரிகள் 237-248
3. மேலது, வரிகள், 129-148
4. மேலது, வரிகள், 237-248
5. கடியலூர் உருத்திரங் கண்ணனார், பட்டினப் பாலை, வரிகள் 221-228
6. மேலது, வரிகள், 232-270
7. மேலது, வரிகள் 275-282
8. மேலது, வரிகள் 283-289
9. மேலது, வரிகள் 298-299
10. மேலது. வரிகள். 221-228
11. மேலது, வரிகள், 231-235
12. மேலது, வரி, 238
13. மேலது, வரி 270
14. மேலது, வரிகள் 273-286
15. மேலது, வரிகள், 298-299
16. சிலப். 5 : 89-104
17. மேலது. 3 : 11
18. சிலப்பதிகாரம். டாக்டர் - உ. வே. சா. பதிப்பு, 30-1-27, பக்கம் 46, அடிக்குறிப்பு
19. சிலப். 1 : 65-68
20. மேலது. 5 : 24
21. மேலது 6 ; 159-160

22. மேலது. 10 : 142
23. மேலது. 15 : 21-22
24. மேலது. 21 : 11
25. அகம். 125
26. மேலது. 246
27. மேலது. 376
28. புறம். 4
29. மேலது. 7 வரி 14-15
30. மேலது. 7
31. மேலது. 224
32. மேலது. 65
33. மேலது. 66
34. கண்ணி-12
35. கண்ணி-18
36. பாடல். 53
37. பாடல். 184
38. பாடல். 179
39. பாடல். 198
40 **Dr C. E. Ramachandran, "Tirumavalavan,' Madraa University Journal-Humanities, Vol. 34 No. 1.pp 1-7**
41. பட்டினப்பாலை; ரா. ராகவையங்கார் பதிப்பு பக்கம்-3.
42. மேலது, பக்கம். 3
43. மேலது. பக் 15
44. மேலது. பக். 15
45. மேலது. பக். 7
46. மேலது. பக். 7

47. மேலது. பக். 7
48. Dr. C. E. Ramachandran, Op. cit., p-5
49. Ibld, p. 5
50. பொருநர். 215-232
51. பட்டின. 222-227
52. பொருநர். 137-138
53. மேலது. 146-147
54. பட்டின. 277
55. சிலப். 5 : 89-98
56. பட்டின. 274-282
57. புறம். 58
58. Epigraphia Indica, Vol. xxii, p 213
59. S.I.I. Vol. III. p. 383
60. Epigraphia Indica, Vol Xviii, p. 21
61. பதிற்று. பதிகம். 2:1
62. க. பரணி. பா. 198
63. சிலப். 6:150; 21:11
64. மேலது 5 : 190
65. Dr C. E. Ramachandran. op. cit. p-9
66. பொருநர். 132
67. பட்டின. 220-226
68. புறம். 376 : 24-26
69. மேலது 17 : 40
70. Dr. C. E. Ramachandran, op. oit. p-4
71. Ibid, p-4
72. Ibid. p-4
73. P. T. Srinivasa Iyenger, History of the Tamils, AES, New Delhi, 1982, p-124

74. சிலப். 6: 159, 21 : 11
75. மேலது, 5 : 190
76. Dr. C. E. Ramachandran, op. cit; p-8
77. சிலம் 1 : 65-68
78. மேலது 3 : 11
79. மேலது 5: 213
80. மேலது 10 : 142
81. மேலது. 15 : 21-22
82. மேலது 5 : 40
83. மேலது 6 : 159, 21 : 11
84. சிலப்பதிகாரம், உ.வே.சா, பதிப்பு. ப. 162
85. Dr. C. E. Ramachandran, op. cit: p-6
86. பட்டின. 299
87. பட்டினப்பாலை, நச்சினார்க்கினியர் உரை
88. பொருநர். 148
89. பட்டின. 299
90. Dr. C. E. Ramachandran, op. cit; p-9.

# 2. திருமாவளவனும், கரிகாலனும், வேறு பட்ட இருவர் என்ற முடிவு சரியானது தானா ?

தமிழ் நாட்டு வரலாற்றை முழுமையாகவும் முறையாகவும் வரைந்து பல தொகுதிகளாக வெளியிட வேண்டும் என்ற சீரிய ,நோக்குடன் தமிழ் நாடு அரசு, வரலாற்றுத் துறையிலும், தமிழிலக்கியத் துறையிலும் பயிற்சியும் தேர்ச்சியும் வாய்ந்த அறிஞர்கள் இடம்பெற்றுள்ள வரலாற்றுக்குழு வொன்றை அமைத்துள்ளது. அவ் வரலாற்றுக் குழுவினரால் தொகுக்கப் பெற்று, தமிழ்நாடு அரசு வெளியீடாக, தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983ல் **''தமிழ்நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல்''** என்ற நூலை வெளியிட்டுள்ளது,[1] அத் தொகுப்பு நூலில், **திருமாவளவன்** குறித்து: ஆய்வாளர்கள் பலர் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

அதில், **'அடிப்படைச் சான்றுகள்-I'** என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ள, சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறைத் தலைவராக விளங்கிய, பேராசிரியர் **டாக்டர் சி. ஈ. இராமச்சந்திரன்** அவர்களும்[2]' **'சோழர்'** என்றதலைப்பில் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ள ஆராய்ச்சிப் பேரறிஞர் **மயிலை. சீனி வேங்கடசாமி** அவர்களும்[3], **குறுநில மன்னர்கள்'** என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ள, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பேராசிரியராக விளங்கிய

**டாக்டர் க. த. திருநாவுக்கரசு** அவர்களும்,[4] **'திருமாவளவன்'** குறித்துத் தம் முடிவுகளை எடுத்து வைத்துள்ளனர். ஒரே நூலில் இடம் பெற்றுள்ள இவ்வாய்வாளர்களின் கருத்துக்களிடையே முரண்பாடு உள்ளது.

'மாறுபட்ட கருத்துக்களின் வன்மைமென்மைகளை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய பொறுப்பினை வருங்காலத் தலைமுறையினரிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளது'[5] என்று, இத்தொகுப்பு நூலை பதிப்பித்து வெளியிட்டுள்ள, தமிழ் வளர்ச்சி இயக்ககத்தினர் தம் நிலையை எடுத்துக் காட்டியுள்ளனர்.

இனி, **தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல்'** என்ற தொகுப்பு நூலில் **'திருமாவளவன்'** குறித்துக் கூறப்பட்டிருப்பனவற்றைக் காண்போம்.

அதில், **''அடிப்படைச் சான்றுகள்-I''** என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில். பேராசிரியர் டாக்டர் சி. ஈ. இராமச்சந்திரன் அவர்கள், பக்கம் 15ல், பொருநராற்றுப் படையில் கரிகாற் பெருவளத்தானைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் காணப் பெறுகின்றன என்றும், இவன் தந்தையின் பெயர் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி என்றும் குறிப்பிட்டுள்ளார். பக்கம் 17ல், ''கரிகாற் பெருவளத்தான்'' (பட்டினப்பாலை: கொளுவில் இடம் பெற்றிருப்பது) ''கரிகாலன்'' (பட்டினப் பாலை ஈற்றில் இடம் பெற்றிருக்கும் வெண்பாவில் இடம் பெற்றிருப்பது) ஆகிய பெயர்கள், சோழன் கரிகாலனையே குறிப்பவை: இளமையில், இவனைச் சிறையிட்டனர். ஆனால், இவன் வாளை உருவிக் கொண்டே பகைவரிடமிருந்து வீரத்தோடு தப்பினான். இதனால், இவன் பெற்ற ஆட்சி உரிமை, 'உருகெழுதாயம்' (பட்டினப்பாலை-227) எனப் புகழ்பெற்றது'[6] எனக் கூறியுள்ளார்.

இங்கு, திருமாவளவன் பற்றி ஏதும் கூறவில்லை எனினும், பட்டினப்பாலையின் பாட்டுடைத் தலைவன், '**திருமாவளவன்**[7] ஆதலின் கரிகாற் பெருவளத்தான், கரிகாலன். திருமாவளவன் ஆகிய பெயர்கள், சோழன் கரிகாலனையே குறிப்பவை என்பதையும் கூறாமல் கூறியுள்ளார் எனக் கொள்ளலாம்.

''தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல்'' என்ற நூலில், '**சோழர்**' என்ற தலைப்புள்ள கட்டுரை எழுதியிருக்கும் ஆராய்ச்சிப் பேரறிஞர் திருவாளர். மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள், பக்கம் 287ல்,

''**கரிகாலன்**'' என்னும் பெயருடைய சோழ அரசன் சங்க காலத்தில் ஒருவன்தான் இருந்தான். அவனுக்குப் பல்வேறு வகையில் வழங்கி வந்த பெயர்களும், அவனது பல்வேறு செயல்களும், பல்வேறு பாடல்களில், பல்வேறு புலவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் திரட்டி ஒப்பு நோக்கும்போது கரிகாலன் என்னும் அரசன் ஒருவன் தான் இருந்தான் என்பது பெறப்படுகிறது.

**பத்துப்பாட்டு** என்னும் தொகுப்பில் உள்ள **பட்டினப்பாலை** என்னும் பாட்டைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார்; **பொருநராற்றுப்படை** என்னும் பாட்டைப் பாடியவர் முடத்தாமக் கண்ணியார். இவர்களது இந்தப் பாட்டுகள் கரிகாலன்மீது பாடப்பட்டவை. இவர்களால் பாடப்பட்டுள்ள கரிகாலன் ஒருவனே என்பதை அந்தப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அவனது பெயர்களை நோக்கி அறியலாம். ''திருமாவளவன், கரிகாலன், சோழன் கரிகாற் பெருவளத்தான், பெருவளக் கரிகால்.'' எனக் கூறியுள்ளார்,[8]

தொடர்ந்து, ''கொளுக் குறிப்பு, பத்துப் பாட்டைத் தொகுத்தவரால் தரப்பட்டது. இவர், நம் எல்லோரையும்

காட்டிலும் பாட்டுகள் தோன்றிய காலத்தோடு நெருங்கிய தொடர்புடையவர். எனவே, இவர் ஒரே பெயரை இரண்டு பாட்டுகளின் தலைவனுக்கும் குறிப்பிடுவதால் இவற்றில் கூறப்பட்டவன் ஒருவனே என்பது தேற்றம்''

''கரிகாலனைப் பற்றிப் பாடப்பட்ட பாடல்கள் புற நானூற்றில் நான்கு உள்ளன. அவற்றைப் பாடிய புலவர்கள் மூன்று பேர். இந்த நான்கு பாடல்களுக்கும் தரப்பட்டுள்ள கொளுக் குறிப்பில் கரிகாலனது பெயர், 'சோழன் கரிகாற் பெரு வளத்தான்' என்றே உள்ளது. இந்தக் கொளுக் குறிப்பைத் தந்தவர் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர்.

புறநானூற்றைத் தொகுத்தவரும், பத்துப் பாட்டைத் தொகுத்தவரும் ஒருவரா, இரு வேறு அறிஞரா என்பது நமக்குத் தெரியாது. எப்படியாயினும், குறிப்புகள் எல்லாம் 'சோழன் கரிகாற் பெருவளத்தான்' என்னும் ஒரே பெயரையே கையாளுகின்றன. கரிகாலனைப் பற்றிக் கருத்துகள் தரும் அறிஞர்கள் எல்லோரையும் விட இந்தக் கொளு குறிப்புத் தந்தவர் கரிகாலன் காலத்தோடு நெருங்கிய தொடர்புடையவர். எனவே, புறநானூற்றிலும், பத்துப் பாட்டிலும் குறிப்பிடப்பட்ட அரசன் ஒருவனே ஆவான். இவை பெயரால் தெரியவரும் உண்மை'' என்று கூறியுள்ளார்.[9]

ஆக, பேராசிரியர் சி. ஈ. இராமச்சந்திரன் அவர்களும், ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்களும், சங்க காலத்தில் கரிகாலன் ஒருவனே இருந்தான் என்ற கொள்கை உடையவர் என்பது தெரிய வந்தது.

ஆனால், 'தமிழ் நாட்டு வரலாறு — சங்க காலம் — அரசியல்' என்ற அதே நூலில், **''குறுநில மன்னர்கள்''** என்ற தலைப்புள்ள கட்டுரை எழுதியிருக்கும் டாக்டர்.

க. த. திருநாவுக்கரசு அவர்கள், பக்கம் 446ல் பின் வருமாறு கூறியுள்ளார்.[10]

"**கரிகாலன்—I** காலத்தில் பதினொரு குறுநில மன்னர்கள் இருந்தனர் (அகம் 246 : 12) என்பது தெரிய வருகிறது. கரிகாலனுக்கு முற்பட்ட காலத்தில் ஏழு குறுநில மன்னர்கள் பேராற்றால் வாய்ந்தவர்களாக இருந்தனர் எனக் கருத இடம் உண்டு (அகம் 44 : 7-11) ஆனால் கரிகாலன் காலத்திற்குப் பிறகு அவர்கள் எண்ணிக்கையில் மிகுதிப்பட்டதாகத் தெரிகிறது. அவர்கள் 'ஈரேழ் வேளிர்' (14) எனக் குறிப்பிடப் படுகின்றனர்." (அகம் 138)

அவர் எடுத்துக் காட்டியுள்ள அகநானூறு 246 ஆம் பாடலைப் பாடிய புலவர், பரணர். அவ்வகப்பாட்டில், கரிகாலன் வெண்ணிப் போர்க்களத்தில் பதினொரு வேளிர்களையும், வேந்தர் இருவரையும் வெற்றி கொண்டது கூறப்பட்டுள்ளது என்பது நினைவு கூரத்தக்கதாம்.

டாக்டர். க. த. திருநாவுக்கரசு அவர்கள், தம்முடைய '**குறுநில மன்னர்கள்**' என்ற தலைப்புள்ள அதே கட்டுரையில், பக்கம் 485ல்,

"பொருநராற்றுப் படையிலும், பட்டினப் பாலையிலும், பரணருடைய பாடல் ஒன்றிலும் சிறப்பித்துப் பேசப்படும் திருமாவளவனை, இரண்டாம் கரிகாலன் (**கரிகாலன்—II**) என வரலாற்று ஆசிரியர் சுட்டுவர்" என்றும்,

பக்கம், 486, "காவிரிப் பூம்பட்டினத்திற்குப் பெருவாழ்வு அளித்த **திருமாவளவன்** எனப்பட்ட **இரண்டாம் கரிகாலன்**, கி. பி. முதல் நூற்றாண்டின் கடைப் பகுதியிலும். இரண்டாம் நூற்றாண்டின் முதற் பகுதியிலும் வாழ்ந்தவன் ஆதல் வேண்டும்." என்றும், "திருமாவளவ

னுடைய தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி கி.பி. 56 முதல் கி. பி. 80 வரை ஆட்சி செய்தவன் ஆவான். அவனுடைய (உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின்) தந்தையான கரிகாலன்—I, கி. பி. 30 முதல் கி. பி. 55 வரை ஆண்டவன் ஆகலாம்'' என்றும்,

பக்கம் 489ல் ''கரிகால் பெரு வளத்தான்'' எனவும், ''திருமாவளவன்'' எனவும் போற்றப்படும் சோழப் பெரு வேந்தனே, இரண்டாம் கரிகாலன் ஆவான். 'தாய் வயிற்றில் இருந்து தாயம் எய்திய' அவன் கடும்போர் புரிந்து தன் உரிமையை நிலை நாட்டினான். (பட்டினப் பாலை 207)... பின்னர் கரிகாலன்—II, இமயம் வரை படையெடுத்துச் சென்றான். இமயத்தில் தன் புலிச் சின்னத்தைப் பொறித்துத் திரும்பினான்'' (சிலம்பு 5 : 90-104) என்றும் கூறியுள்ளார்.[11]

ஒரே நூலில், திருவாளர், டாக்டர் சி. ஈ. இராமச் சந்திரன் அவர்களும்; மயிலை சீனி. வேங்கடசாமி அவர் களும், 'கரிகாலன், கரிகாற் பெருவளத்தான், திருமா வளவன்' என்ற பெயர்கள் ஒருவனையே குறிக்கும். சங்க காலத்தில், கரிகாலன் எனும் பெயருடையான் ஒருவன் தான் இருந்தான் எனக்கூற, திருவாளர் டாக்டர். க. த. திருநாவுக்கரசு அவர்கள், ''உருவப்பஃறேர் இளஞ் சேட் சென்னியின் தந்தை முதலாம் கரிகாலன், மகன் இரண்டாம் கரிகாலன்'' எனக் கூறியிருப்பது முரண்பட்டு நிற்கிறது. இம்முரண்பாடு களையப்படல் வேண்டும்.

இதற்கான விரிவான விளக்கம், 'பொருநராற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் கரிகாலனும், பட்டினப் பாலையின் பாட்டுடைத் தலைவன் திருமாவளவனும், வேறு வேறுபட்ட இருவரா? அல்லது இருவரும் ஒருவரா' என்ற தலைப்புள்ள என்னுடைய கட்டுரையில், திருவாளர், டாக்டர். சி. ஈ. இராமச்சந்திரன் அவர்களின் 'திருமா

வளவன்' என்ற கட்டுரைக்கு[12] நான் கொடுத்திருக்கும் விளக்கத்தில் அளித்துள்ளேன். ஆங்கு காண்க.

திருவாளர் டாக்டர் சி. ஈ. இராமச்சந்திரன் அவர்கள், சென்னைப் பல்கலைக் கழக வெளியீட்டில், தாம் எழுதிய 'திருமாவளவன்' என்ற கட்டுரையில், 'திருமாவளவன் வேறு, கரிகாலன் வேறு' என எழுதியிருந்தாலும், தமிழ் நாட்டு வரலாறு—சங்க காலம்—அரசியல்' என்ற நூலில், இருவரும் ஒருவரே என முடித்திருப்பது என் முடிவிற்குப் பெரியதோர் அரணாகும்.

## சான்றெண் விளக்கம


1. தமிழ்நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல், தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983.

2. டாக்டர், சி. ஈ. இராமச்சந்திரன், "அடிப்படைச் சான்றுகள்", தமிழ்நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல், தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983, ப: 17-18.

3. மயிலை. சீனி. வேங்கடசாமி, "சோழர்", தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல், தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983, ப. 287-288.

4. டாக்டர், க, த. திருநாவுக்கரசு, "குறுநில மன்னர்கள்" தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல்-தமிழ் வளர்ச்சி இயக்ககம். 1983, ப. 446.

5. தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசர்கள், தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983, பதிப்புரை ப. xvi

6. டாக்டர், சி. ஈ. இராமச்சந்திரன், முன்னூல், ப. 17-18.

7. பட்டின. வரி. 299

8. மயிலை. சீனி. வேங்கடசாமி, முன்னூல், பக். 287-288.

9. மேலது. பக். 287-288.

10. டாக்டர், க. த. திருநாவுக்கரசு, முன்னூல், பக். 446-489.

11, மேலது, பக். 485-489

12. Dr C. E. Ramachandran, "Tirumavalavan" Madras University Journal, Humanities, Vol. 34 No. pp. 1-9.

## 3. இளஞ்சேட் சென்னி-1, இளஞ்சேட் சென்னி-2, இளஞ்சேட் சென்னி-3 என்று வரிசைப் படுத்தல் பொருந்துமா?

சங்க நூல்களில், உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி பாமுளூர் எறிந்த, நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என மூன்று இளஞ் சேட் சென்னியர் அறியப்படுகின்றனர்.

உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, கரிகால் பெரு வளத்தானைப் பெற்றவன். இது, முடத்தாமக் கண்ணி யார், கரிகாலன் மீது பாடிய பொருநராற்றுப் படையில், கரிகாலனை, "உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்"[1] எனப் பெயரிட்டு அழைப்பதால் தெளிவாகும்.

உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மனைவி, அழுந்தூரில் வாழும் வேளிர் குடியில் வந்தவர். இது, "மன்னர் பாங்கின் பின்னராகுப" என்ற தொல்காப்பியம், அகத்திணையியல் சூத்திர உரையில்,[2] "உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி, அழுந்தூர் வேளிடை மகட்கோடலும், அவன் மகன் கரிகாற்பெருவளத்தான், நாங்கூர் வேளிடை மகட் கோடலும்" என்று நச்சினார்க்கினியர் கூறுவதால் உறுதியாகும்.

கரிகாலன், வெண்ணிப் பறந்தலைப் போரில் பெற்ற வெற்றி குறித்து, அழுந்தூரில் விழாக் கொண்டாடப் பெற்றது என்று கூறும் **பரணர்** பாட்டால்[3], அழுந்தூர் வேளிர் மகளே, உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மனைவியாவாள்; கரிகாலனின் தாயாவாள் என்ற உண்மை மேலும் உறுதி செய்யப் பெறும்.

**ஊன் பொதி பசுங்குடையார்** என்ற புலவர் பாராட்டியோராகச் சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங் கானல் இளஞ்சேட் சென்னி என்பவனும்,[4] செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என்பவனும்[5], ஆக இருவர் உளர்.

இரண்டாவதாகக் குறிக்கப் பெற்ற **"செருப்பாழி எறிந்த"** என்ற தொடர்க்குப், "போர்க்களமாகிய பாழி என்ற ஊரை அழித்த என்றே பொருள் கொள்ள வேண்டும். பாழி, சேர நாட்டைச் சேர்ந்த ஊராக விளங்குவதாலும், சேரமான் பாமுளூர் எறிந்த இளஞ்சேட் சென்னியும், சேர நாட்டுப் பாமுளூர் என்ற ஊரை வென்றதாகத் தெரிவதாலும், இருவர்க்கும் இளஞ்சேட் சென்னி என்ற பெயர் ஒற்றுமை உண்மையாலும், இருவரையும் பாராட்டிய புலவர் ஒருவராகவே இருப்பதாலும், சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங் கானல் இளஞ்சேட் சென்னியும், செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியும் வேறு வேறு அல்லர்; ஒருவரே எனக் கொள்ளுதல் பொருந்தும்.

இனி, வம்ப வடுகரை ஓட்டிப் பாழியை அழித்த இளம் பெருஞ் சென்னி என்பவன் வரலாறு, அகநானூற்றில் குறிப்பிடப்பட்டுளது.[6] செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியும், வடுகரை வென்றான் எனப் புறநானூற்றில் குறிப்பிடப் பட்டுள்ளான்.[7] பாழியை அழித்தலும், வடுகரை வேறலும் இருவர்க்கும் ஏற்றிக் கூறப்பட்டுள்ளமையாலும், இளஞ்சேட் சென்னி, இளம் பெருஞ்சென்னி என்ற பெயர்கள் ஒற்றுமை கொண்டிருப்பதாலும், அகத்தில்,[8]

கூறப் பெற்ற இளம் பெருஞ் சென்னி, செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியே ஆவன் எனக் கோடலும் பொருந்தும்.

இனி, சேரமான் பாமுளூர் எறிந்த இளஞ்சேட் சென்னியைப் பாடும் பொழுது "இயல் தேர் அண்ணல்"[9] என அவன் தேர் உடைமை பாராட்டப் பெற்றுள்ளமையாலும், இளஞ்சேட் சென்னி, என்ற பெயர் ஒற்றுமையாலும், உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியும் போர் பல செய்தவன்[10] எனத் தெரிவதாலும்,

உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகன் கரிகாலனின் பகைவர்களாகப் பாழியில் பெரும் பொருள் சேர்த்து வைத்த வேளிர்களும்[11], அவர்கள் தலைவன் இருங்கோவேளும் கூறப்பட்டுள்ளமையாலும்[12], அவ்வேளிர்கள், கரிகாலன்மீது, அவன் இளமைக் காலத்திலேயே போர் தொடுத்தது, அவன் தந்தை, தங்கள் பாழியை அழித்தமைக்குப் பழிவாங்கும் எண்ணத்தால் இருக்கலாம் ஆதலாலும்,

'பாழிக்குரியோன் எனப்பட்ட நன்னன், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலோடு வாகைப் பறந்தலையில் பொழுது களத்து ஒழிந்தான். இப்போரில் பெற்ற வெற்றியின் பயனாய், நார்முடிச் சேரல், இழந்த தன் பூழி நாட்டைப் பெற்றான்[13] என்ற செய்திகளால், பாழியொடு தொடர்புடையதாகத் தோன்றும் வாகைப் பறந்தலைக் கண், கரிகாலன் தன்னை வந்தெதிர்த்த ஒன்பது மன்னரை வெற்றி கொண்டான்[14] என்று கூறப்படுவதால், கரிகாலனும் அப் பாழியோடு, யாதேனும் ஒரு வகையில் தொடர்புடையனாதல் வேண்டும் எனக் கருத இடமுண்டு ஆதலாலும்,

அவன் தந்தை எனக் கூறப் பெறும், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, சேரமான் பாமுளூர் எறிந்த நெய்

தலங் கானல் இளஞ்சேட் சென்னி, செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி, இளம் பெருஞ்சென்னி என்ற நால் வரும், வேறு வேறு அல்லர்; ஒருவரே எனக் கொள்ளத் தான் அகச் சான்றுகள் ஓரளவு துணைபுரிகின்றன.

சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ள, 'இளஞ்சேட் சென்னி' எனும் பெயர் உடையார்கள் குறித்த மேற் குறித்த இவ்வுண்மைகளை, 1951 ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட 'திருமா வளவன்' என்ற என் நூலிலும்[15], 1954 ஆம் ஆண்டு, கழகம் வெளியிட்ட, 'சங்க கால அரசர் வரிசை'யில் 'சோழர்' என்ற என் நூலிலும்[16], விளக்கமாக எடுத்துரைத்துள் ளேன். 'கரிகாலன் தந்தை நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி ஆகும்' என்ற திருவாளர் K. V. சுப்பிரமணிய அய்யர் அவர்களின் கூற்றும்[17] இங்கு நினைவு கூரத் தக்கதாம்.

ஆனால். தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவினரால் தொகுக்கப் பெற்று, தமிழ் நாடு அரசு வெளியீடாக, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983ல் வெளியிட்டுள்ள **'தமிழ் நாட்டு வரலாறு—சங்க காலம்—அரசியல்'** என்ற நூலில், **'சோழர்'** என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரையில், பாமுள்ளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ் சேட் சென்னியை, முதலாம் இளஞ்சேட் சென்னி, (இளஞ் சேட் சென்னி—I) என்றும், செருப்பாழி எறிந்த இளஞ் சேட் சென்னியை, இரண்டாம் இளஞ்சேட் சென்னி (இளஞ்சேட் சென்னி—II) என்றும், உருவப்பஃறேர் இளஞ் சேட் சென்னியை, மூன்றாம் இளஞ்சேட் சென்னி (இளஞ் சேட் சென்னி—III) என்றும் வரிசைப் படுத்திக் காட்டப் பட்டுள்ளது.[18] இதற்கான அகச் சான்று எதையேனும், அல்லது காரணம் எதையேனும் அக்கட்டுரை ஆசிரியர் காட்டியுள்ளாரா என்றால் இல்லை.

அது மட்டுமன்று, பக்கம் 282ல், "சென்னி" எனும் சோழர் குடியைச் சேர்ந்த இரு அரசர்கள், கரிகால் பெரு வளத்தானுக்கு முன்னர் ஆட்சி செய்துள்ளனர். அவர்கள் பாமுள்ளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி (இளஞ்சேட் சென்னி—1), செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி எனும் உருவப்பஃறேர் (இளஞ்சேட் சென்னி—2)" என கூறியதன் மூலம், செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி; உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி ஆகிய இரு வேறு பட்டவர்களை, ஒருவரார்க; காட்டிவிட்டு, செருப் பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி எனும் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னிதான் 'இளஞ்சேட் சென்னி—2 என வரிசைப் படுத்தும் ஆசிரியர்,

அடுத்த பக்கத்தில், பக்கம் 283ல், இளஞ்சேட் சென்னி-II ஆக, செருப்பாழி எறிந்தவனைப் பிரித்துக் காட்டியுள்ளார். அதே போல் பக்கம் 282ல் இளஞ்சேட் சென்னி-2, என்று காட்டப்பட்ட உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, 285ல், இளஞ்சேட் சென்னி-3 என்று தனிமைப் படுத்திக் காட்டப்பட்டப்பட்டுள்ளான். ஏன் இந்த முரண்பாடு?

உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, செருப்பாழி எறிந்த் இளஞ்சேட் சென்னி, நெய்தலங்கானத்துப் பாமுளூர் எறிந்த இளஞ்சேட் சென்னி, எனப் புலவர்களால் தெளிவாக அறிமுகப் படுத்த, சிறப்பு அடைகள் கொடுக்கப் பட்டுள்ளன. அங்ஙனமாகவும், நெய்தலங் கானத்துப் பாமுளூர் எறிந்தான் முதல்வன் போலவும், செருப்பாழி எறிந்தான் இரண்டாமவன் போலவும், உருவப்பஃறேர் உடையான் மூன்றாமவன் போலவும், பொருள் கொள்வதற்கு ஏற்ப, 'இளஞ்சேட் சென்னி—1. என்றும், 'இளஞ் சேட் சென்னி—2' என்றும், 'இளஞ்சேட் சென்னி—3' என்றும் முறையே வரிசைப் படுத்தல் தேவைதானா என்பதை எண்ணிப் பார்த்தல் நலம்.

## சான்றெண் விளக்கம்

1. பொருநராற்றுப் படை : 130

2. தொல். அகத்திணையியல்—சூ : 30

3. ''பெரும் பெயர்க் கரிகால்

ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர் கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழ் இசை முரசம் பொருகளத்து ஒழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி அறுத்த ஞான்றைத்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பு''

—அகம் : 246

4. புறம் : 10; 103.

5. புறம் : 370; 378.

6. ''எழூஉத் திணி தோள் சோழர் பெருமகன்
விளங்கு புகழ் நிறுத்த இளஞ் பெருஞ் சென்னி
.........................................
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டி''
—இடையன் சேந்தங் கொற்றனார். அகம் : 375

7. ''தென் பரதவர் மிடல் சாய
வட வடுகர் வாளோட்டிய''

—புறம் : 378

8. அகம் : 375

9. புறம் : 203

10. புறம் : 4

11. "நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்" —அகம் : 258

"பாழி யாங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
அருங்கல வெறுக்கை" —அகம் : 372

12. பட்டினப் பாலை : 282; —அகம் : 246

13. "இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருது களத்தொழிய
..........................................
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன"
—அகம் : 199

"பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை யறுத்தவன்
பொன்படு வாகை முழு முதல் தடிந்து."
பதிற்று—4—பதிகம்

14. ''பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற
ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த
பீடில் மன்னர்''

—பரணர் : அகம் : 125

15. புலவர் கா. கோவிந்தன், 'திருமாவளவன்', கழகம், 1951, பக் 21—25.

16. புலவர் கா. கோவிந்தன், 'சங்க கால அரசர் வரிசை—2, பகுதி—1, 'சோழர்'. கழகம், 1954' பக்—21—23.

17. **Indian Antiquary vol 41, P-14, V-7.**

18. மயிலை சீனி. வேங்கடசாமி, ''சோழர்'', தமிழ் நாட்டு வரலாறு—சங்க காலம்—அரசியல்—தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983 பக் 282—285.

## 4. உதியஞ்சேரல் என்பானும் சேரமான் பெருஞ் சோற்று உதியஞ் சேரலாதன் என்பவனும் வெவ்வேறு அரசர்கள் என்பது பொருந்துமா?

தமிழ் நாட்டு வரலாற்றுக் குழுவினரால், தொகுக்கப் பெற்று, தமிழ் நாட்டு அரசு வெளியீடாக, தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983ல் வெளியிட்டுள்ள **''தமிழ்நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல்''** என்ற நூலில் **''சேரர்''** என்ற தலைப்பில், ஆராய்ச்சிப் பேரறிஞர் **மயிலை. சீனி. வேங்கடசாமி** அவர்கள், சேர மரபினரின் வரலாற்றை எழுதியுள்ளார்.

அக் கட்டுரையின் 139வது பக்கத்தில் **'உதியஞ்சேரல்'** என்ற தலைப்பின்கீழ் ஒப்புநோக்கம்:

சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் பாரதப் போரில் இருதரத்துப் படைகளுக்கும் சோறு வழங்கினான். அவன் (சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்) வேறு, இவன் (உதியஞ் சேரல்) வேறு'' என்று கூறியுள்ளார்.

அதே கட்டுரையின் 227வது பக்கத்தில் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்ற தலைப்பின் கீழ்,

''உதியஞ் சேரல், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் இருவரும் வெவ்வேறு அரசர்கள்

| உதியஞ்சேரல் | சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் |
|---|---|
| 1. செங்குட்டுவனுக்குப் பாட்டன் | பாரதப் போர் நடந்த காலத்தவன், கால் வழி தெரியவில்லை |
| 2. பேய்க்குப் பெருஞ் சோறு அளித்தான் | வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்தான். |
| 3. பாடிய புலவர் கடைச் சங்க காலத்தவர் | பாடிய புலவர் தலைச்சங்க காலத்தவர் (களவியல் உரை) |
| 4. பகைவர்களை வென்றான் | பகைவர்க்கும், நண்பர்க்கும் நடுநிலையாளனாய் விளங்கினான்.'' |

என்று பட்டியலிட்டு, இருவரும் வெவ்வேறு அரசர்கள் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த பக்கத்தில்,[1] ''பெயர் ஒப்புமை, வள்ளன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த இருவரையும் ஒருவர் என்று கூறுகின்றார். இந்த ஒப்புமை மேம்போக்கானது. ஆழ்ந்த நோக்கில் வேற்றுமைகளே மிகுதி. எனவே, இரு வேறு அரசர்கள் என்று கொள்வதே சரியானது''—என அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

ஆனால், அக்கட்டுரையின் தொடக்கத்தில் உதியஞ் சேரலின் பண்பு நலம் கூறும் வகையில் ''இவன் (உதியஞ் சேரல்) குற்றமற்ற சொற்களையே பேசுவான். உண்மையே

பேசுவான். கொடை வழங்குதலை தன் கடமை என எண்ணிச் செய்தான்; கோணாத தன் நெஞ்சு விரும்பியவாறு செய்தான். நிலம், விசும்பு, காற்று, தீ, நீர் எனும் ஐம்பெரும் பூதங்களின் இயற்கை குணங்களாகிய பொறை, சூழ்ச்சி, வலி, தெறல், அளி போல் இவன் தனக்குப் பகைவர் பிழை செய்தபோது அப் பிழையைப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும், அவரை அழித்தற்கேற்ற மன வலியும், அவ்வாற்றலால் அவரை அழித்தலும், அவர் வழிபட்டால், அவருக்குச் செய்யும் அருளும் உடையோனாவான்''[2]

—என்று பாராட்டியுள்ள கட்டுரையாசிரியர், அதற்கு மேற்கோளாக, புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய பாடலின்,

''மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீமுரணியநீரு மென்றாங்
கைம்பெரும் பூதத்தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்
வலியுந்தெறலும் அறியுமுடையோய்''[3]

—என் வரும் முதல் எட்டு வரிகளைக் காட்டியுள்ளார்.

அதே போல், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்ற தலைப்பின் கீழ் அவன் சிறப்பு நலன்களை,

''நாட்டுப் பரப்பு :

வங்காளக் குடாக் கடலும், அரபிக்கடலும், இவனுடைய (சேரமான் பெருஞ் சோற்று உதியஞ் சேரலாதன்)

கடல்கள் என்று சொல்லும்படி. இவனது நாட்டுப் பரப்பு தமிழகத்தின் தென் பகுதி முழுவதும் பரவியிருந்தது.-

வானவரம்பன்

இவனே வானவரம்பன் என்னும் சிறப்புப் பெயரை முதன் முதலில் பெற்றவன் எனத் தெரிகிறது. ஞாயிறு இவனது கீழைக் கடலில் தோன்றி இவனது மேலைக் கடலில் மறைந்தது என்று சான்று கூறுகிறது. வடக்கில் இருந்த நாடுகள் இவனைப் புகழ்ந்து கொண்டிருந்தமை யால், ஒரு வகையில் இவனுக்கு அடங்கியவை. தென்புறம் கடலாகும். எனவே, இவனது நாட்டுக்கு எந்த வகையில் வரம்பு (எல்லை) கூறுவது, மேலே உள்ள வானத்தைக் கூறு வதைத் தவிர, வேறு வழியில்லை. எனவே, '**வான வரம்பன்**' என்று இவனைப் பலரும் சிறப்பித்துக் கூறி மகிழ்ந்தனர்.

இந்தப் புகழ்ச்சிகளைப் பொருள் நுட்பத்தோடு கேட்டறிந்த முரஞ்சியூர் முடிநாகராயர் அவனை நேரில் கண்ட போது அதே சிறப்புகளைப் பெருமிதத்தோடு வியப்பும் மகிழ்வும் தோன்றக் கூறி மகிழ்ந்தார்.

**போரும் சோறும் :**

ஐவருக்கும் நூற்றுவருக்கும் போர் நடந்தது. இப் போரில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் இவன் சோறு வழங்கி னான். நண்பர், பகைவர் என்று வரையறுத்துக் கொள் ளாது (வரையாது) எல்லோருக்கும் வழங்கினான்.

சுற்றம் :

பால் புளித்தாலும், பகல் இருண்டாலும், வேத நெறி திரிந்தாலும் இவனோடு உறவில் திரியாத தன்மை உடையது இவனது சுற்றம்.

இத்தகைய சுற்றத்துடன் இமய மலையும் பொதிய மலையும் போல அசைவின்றி வாழ வேண்டும் என்று இவன் வாழ்த்தப் படுகிறான். ஆட்சிப் பரப்பு, பொதியத்திலும், புகழ்ப் பரப்பு இமயத்திலும் விளங்கியமை நோக்கி இவன் இவ்வாறு வாழ்த்தப் படுகிறான்.

—எனப் பலபடப் போற்றியிருக்கும் கட்டுரையாசிரியர், அதற்கும் மேற்கோளாக, முரஞ்சியூர் முடிநாகராயர் அவர்களுடைய அதே புறப் பாடலின்,

''நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்து நின்
வெண்டலைப் புணிரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந
வான வரம்பனை நீயோ பெரும
அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம் பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிடுபதம் வரையாது
கொடுத்தோய்
பாஅல் புளிப்பினும் பகலிருளினும்
நாஅல் வேத நெறிதிரியினும்
திரியார் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ வத்தை அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி யந்தணர் அருங்கட னிறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே''[5]

என வரும் வரிகளையே காட்டியுள்ளார்.[6]

அடுத்து, பக்கம் 227ல் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனின் பண்புநலன் கூற வந்த கட்டுரையாசிரியர்,

''பண்பு நலன் :

பகைவர் செயல்களைப் பொறுத்துக் கொள்வதில் இவன் நிலம் போன்றவன்; சூழ்ச்சித் திறன் அகலத்தால் வானத்தைப் போன்றவன்; வலிமையில் காற்றைப் போன்றவன்; பகைவரை அழிப்பதில் தீப் போன்றவன்; கொடையில் நீரைப் போன்றவன்.''

என, தம் கட்டுரையின் 139 ஆம் பக்கத்தில் உதியஞ் சேரலின் பண்புநலனுக்கு மேற்கோளாகக் காட்டிய முரஞ்சியூர் முடிநாகராயரின் புறப் பாடல் வரிகளையே[7] மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்.

உதியஞ் சேரலும், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் இருவரும் வேறு வேறு அல்லர்; ஒருவரே என்பதை உறுதி செய்ய, கட்டுரையாளர், அவ்விரு அரசர்களின் வரலாற்றிற்கும் மேற்கோளாக ஒரே புறப் பாடலை எடுத்தாண்டிருப்பதே போதும். மேலும், அப் புறநானூற்றுப் பாடலின்[8] கொளுவும் பாட்டுடைத் தலைவனைக் குறிப்பிடும்போது ''சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலர்தன்'' எனக் கூறி, உதியஞ் சேரல், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் இருவரும் ஒருவரே என்பதை உறுதி செய்துள்ளது.

## பஞ்ச பாண்டவரா? பாண்டியர் ஐவரா?

**'சேரர்'** என்ற தலைப்பில் நாம் எழுதியுள்ள கட்டுரையின் **226** ஆம் பக்கத்தில், கட்டுரையாளர், ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், ''ஐவருக்கும், நூற்றுவருக்கும் போர் நடந்தது. ஐவர் என்பவர் பஞ்ச பாண்டவர். நூற்றுவர் என்பவர் துரியோதனன் முதலானோர். இருவருக்கும் நடந்த போர் பாரதப் போர். இப்போரில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம்

இவன் (சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்) சோறு வழங்கினான்; பெருஞ்சோற்று விழா நடத்திச் சிறப்பாக வழங்கினான்; நண்பர், பகைவர், என்று வரையறுத்துக் கொள்ளாது (வரையாது) எல்லோருக்கும் வழங்கினான்'' என்று கூறியுள்ளார்.

• பக்கம் **227**ல், உதியஞ்சேரல், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் இருவரும் வெவ்வேறு அரசர்கள் என்ற தலைப்பின் கீழ், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் பற்றிக் கூறும் இடத்திலும், ''அவன் பாரதப் போர் நடந்த காலத்தவன். வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்தான்'' என்று கூறிப், பெருஞ்சோற்று உதியன் சேரலாதன், பாரத காலத்தவன் என்பதைக் கட்டுரையாளர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் உறுதி செய்துள்ளார்.

ஆனால், அவரே, பக்கம் **226**ல், ''பாண்டியரில், பஞ்சவர், கௌரியர் என்போர் கிளைக் குடியினர் ஆவர். இந்தக் கிளைக் குடியினர்க்கிடையே போர் நடந்த போது, இவன் (சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்) இவ்வாறு நடந்து கொண்டான் என்று அறிஞர் மயிலை **சீனி. வேங்கடசாமி** கருதுகிறார். (இது எழுதுபவரும் திருவாளர். மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களே தாம் என்பதை நினைவில் கொள்வது நல்லது.) ''பொலம் பூண் ஐவர்'' எனச் சங்கப் பாடல்[9] குறிப்பொன்று கூறுகிறது. அது பாண்டியரைக் குறிப்பிடுகிறது. எனவே, பாண்டியரும் ஐவர் எனத் தெரிகின்றது. நூற்றுவர் என்பார், ஈரைம்பதின்மரைக் கொள்ளலாம். எனவே, இது கௌரியர் என்னும் துரியோதனன் முதலானோரைக் குறிக்காமல் பாண்டியரில் ஒரு குடியினராகிய 'கவுரியரை' குறிப்பிட்டிருக்கலாம். பாண்டிய நாட்டில் உள்நாட்டுப் போர் நிகழ்ந்த போது இவன் இரு படைக்கும் உணவு வழங்கி

யிருக்கலாம் என்று கருதவும் வாய்ப்புண்டு''[10] எனக் கூறி, முன்னர்க் கூறியதை மறுத்துள்ளார்.

இது முறைதானா? என்பதை வரலாற்றாய்வாளர் எண்ணிப் பார்த்தால் நலம்.

**உதியஞ் சேரலாதனும், கரிகாலனும் :**

இனி சோழன் கரிகால் பெருவளத்தானுடன் வெண்ணியில் போரிட்டுப் பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர் விட்ட சேரமான் பெருஞ்சேரலாதன் என்பானைப் பாராட்டிக், கழாத்தலையாரும்,[11] வெண்ணிக் குயித்தியாரும்[12] பாடிய இரண்டு பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

இதே நிகழ்ச்சியை, மாமூலனாரும் தம் அகநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.[13]

''கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும்பிறி தாகி யாங்கு''

என. 'வெண்ணியில் நடந்த போரில், கரிகால் வளவனொடு போரிட்டுப் புறப்புண் பெற்றான் சேரலாதன்; அவன் தான் பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர் விட்டானாக, அவன் பிரிவினைப் பொறாத சான்றோர் பலரும் அவனோடு உயிர் நீத்தனர்' என்று சேரலாதன் புகழ் பாடியுள்ளார்,

உதியஞ் சேரல் தன் நாட்டை விரிவு படுத்தியதையும், அவன் பரிசில் தரும் பெருமையினையும்,

"நாடுகண் அகற்றிய உதியஞ்சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவவினி வாழி"[14], என்றும்,

அவன். அளிக்கும் பெருஞ்சோற்று விழாவினை,

"துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ்சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை, இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇஇருந் தாங்கு,"[15]

என்றும், எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ள மாமுலனாரே, வெண்ணியில் தோற்ற சேரலாதனையும் குறிப்பிட்டுள்ளார்[16]. ஆகவே, கரிகாலனோடு போரிட்டுத் தோற்று வடக்கிருந்து உயிர்விட்ட சேரவேந்தன், உதியஞ்சேரலாதனே எனக் கொள்ளுதல் பொருந்துமா என்பதை அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து துணிவார்களாக.

இக் கருத்தை, 1955ஆம் ஆண்டிலேயே, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடான, சங்க கால அரசர் வரிசை தொகுதி 1, 'சேரர்' என்ற தலைப்புள்ள என்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளேன்.[17]

## சான்றெண் விளக்கம்

1. மயிலை, சீனி. வேங்கடசாமி, "சேரர்", தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல், தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983, ப.-228.
2. மேலது, பக். 139.
3. புறம். 2: 1-8.
4. மயிலை. சீனி. வேங்கடசாமி, முன்னூல், பக். 139-அடிக்குறிப்பு.
5. புறம். 2: 9-24
6. மயிலை. சீனி. வேங்கடசாமி, முன்னூல், பக். 228—அடிக் குறிப்பு.
7. புறம். 2 : 1—8
8. புறம். 2
9. மதுரைக் காஞ்சி—778
10. மயிலை. சீனி. வேங்கடசாமி, முன்னூல், பக். 226—227
11. புறம். 65

12. மேலது. 66

13. அகம். 55

14. மேலது. 65

15. மேலது. 66

16. மேலது. 55

17. புலவர். கா. கோவிந்தன்,
சேரர், கழகம், 1955, பக். 38.

# 5. புறநானூற்றுப் பாக்களுக்குப் பொருள் விளக்கம் அளிக்கும் கொளுக்கள் வரலாற்றுச் சான்றுகள் ஆகாது என்பது சரியான முடிவு தானா?

தமிழ் நாட்டு வரலாற்றுக் குழுவினரால் தொகுக்கப் பெற்று, தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்காக, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983ல் வெளியிட்ட **''தமிழ் நாட்டு வரலாறு—சங்க காலம்—அரசியல்''** என்ல நூலில் **'சேரர்'** வரலாறு படைக்கும், ஆராய்ச்சிப் பேரறிஞர். **மயிலை. சீனி. வேங்கடசாமி** அவர்கள், ''இது போன்ற நிலைகள் இருப்பதால், கொளுக் குறிப்பினால் மட்டும் தெரிய வரும் செய்திகளை அப்படியே முழுமையான உண்மைகள் என்று நாம் எடுத்துக் கொள்ள இயலாது''[1] என்ற கருத்தை அறிவித்துள்ளார்.

அவ்வாறு அறிவித்த அவர் தம் கூற்றுக்கு ஆதாரமாக **புறம் 389** ஆம் எண்ணுள்ள பாடலில். புலவர், தாம் பாடி வந்த அரசனிடம் (யார் என்று தெரியவில்லை) ஆதனுங்கன் போலப் பரிசில் தர்வேண்டும் என்று வேண்டு வதைக் காண்கிறோம். பாடலில், கொளுக் குறிப்பு ஆதனுங்கனையே பாடியுள்ளதாகக் குறிப்பிட்டு விட்டது. இது பொருந்தாக் கூற்று''[2] எனக் கூறி முடித்துள்ளார்.

"ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடியது", என்று தான் கொளு குறிப்பிடுகிறது என்பதும், மூலம், "ஆதனுங்கன் போல நீயும்... நல்கு மதி" எனக் கூறி, அப் பாட்டுடைத் தலைவன், ஆதனுங்கனின் வேறுபட்ட ஒருவன் என்பதை உறுதி செய்யும் வகையில் தான் அமைந் துள்ளது என்பதும் உண்மை.

பரிசில் பெறும் புலவர், தமக்குப் பரிசில் அளிக்கும் புரவலன் பெயரைத் தம் பாட்டிடைக் கூறி, நேர்முகமாக விளித்துப் பாடுவது ஒரு மரபு. அவனை நேர்முகமாக விளித்துப் பாடாமல், அவன் கொடைப் பெருமையை விளங்கக் கூறி. அவனே போல் நீயும் கொடுப்பாயாக, எனப் பிறிதொரு வரை முன்னிலைப் படுத்திப் பாடுவது; பிறிதொரு மரபு. குமணனைப் பெருஞ் சித்திரனார் பாடிய புறநானூற்றுப் பாடல்கள் எட்டு.[3] அவற்றில், "இயல் தேர்க் குமண"[4], "படர்வேற் குமண"[5], "நற்போர்க் குமண"[6], எனக் குமணனை முன்னிலைப் படுத்திப் பாடிய பாக்களுக்கிடையே, "நீயும் எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே! குமணன் நல்கிய வளனே"[7] எனத், தம் மனைவியை முன்னிலைப் படுத்திப் பாடிய பாவினையும் பாடியுள்ளார்.

திருவாளர் மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள், குமணனைப் பெருஞ் சித்திரனார் பாடிய பாக்கள் ஆறு[8] எனக் கொண்டாலும்[9], இந்தப் பாடலைக்[10] குமணனைப் பாடியதாகவே கொண்டுள்ளார். இதன் கொளு "பெருஞ் சித்திரனார், குமணனைப் பாடிப் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது" என்கிறது என்றாலும், இந்தப் பாட்டில், குமணன் பெயர் இடம் பெற்றிருந் தாலும், அவனை முன்னிலைப் படுத்திப் பாடவில்லை. மாறாக, புலவரின் மனைவிதான் முன்னிலைப் படுத்திப் பாடப் பெற்றுள்ளார். ஆகவே குமணன் புகழ்பாடும் பாடல் எனக் கூறும் கொளுக் கூற்று ஏற்புடையதன்று

எனத் தள்ளிவிடப் படுவதில்லை. திருவாளர் வேங்கடசாமி அவர்களும் தள்ளி விடவில்லை.

புறநானூற்றில், ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடிய பாக்கள் இரண்டு.[11] இவற்றுள் **புறம் 175**ல், பெருஞ் சித்திரனார், குமணனை, புறம் **158, 159**, மற்றும் **164** பாடல்களில் நேர்முகமாக விளித்துப் பாடியது போல், ஆதனுங்கனை, "எந்தை வாழி ஆதனுங்க!" என நேர்முகமாக விளித்துப் பாடியுள்ளார்.

இரண்டாவது பாட்டாகிய **புறம் 389**ல், பெருஞ் சித்திரனார்; **புறம் 163**ல், குமணன் கொடுத்த கொடை வளம் தம் தேவைக்கும் அதிகமாம் என்பதை விளக்குமுகத்தான், தம் மனைவியை, "மனை கிழவோயே" என விளித்து, "எல்லோர்க்கும் கொடுமதி—குமணன் நல்கிய வளனே" எனப் பணிக்கு முகத்தான், குமணன் கொடை வளத்தையே பாராட்டியுள்ளார்.

பெருஞ் சித்திரனார் கடைப்பிடித்திருக்கும் இம்மரபை ஒட்டியே, கள்ளில் ஆத்திரையனாரும், **புறம் 389**ல், கொடைவளம் வாய்க்கப் பெற்றவனே எனினும், புலவர் உலகிற்குப் பயிலத் தெரியாத முதியன் என்பானை, 'முதியன்' என்ற அண்மை விளியாலும், "பெரும" எனச் சேய்மை விளியாலும் விளித்து விட்டு. "ஆதனுங்கன் போல, நீயும் விறுசால் நன்கலம் நல்குமதி" எனப் பணிக்கு முகத்தான் ஆதனுங்கன் புகழையே பாராட்டியுள்ளார். ஆகவே, அப்பாட்டு[12] ஆதனுங்கனைப் பாடிய பாட்டே என்பது தெளிவு.

ஆகவே, புறநானூற்றுக் கொளுக்கள், வரலாற்றுக்குத் துணை நிற்பன அல்ல என்ற திருவாளர். மயிலை: சீனி. வேங்கடசாமி அவர்களின் வாதமோ, அதற்கு ஆதார

மாக **புறம் 389** கொளுவைக் காட்டுவதோ, ஏற்புடைய தாகாது.

திருவாளர். **பி. தி. சீனிவாச அய்யங்கார்** அவர்களின் **தமிழர் வரலாறு (History of the Tamils)** என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமான தமிழர் வரலாறு நூலின் இரண்டாம் பகுதியில் புறநானூற்றுக் கொளுக்கள் குறித்து என்னுடைய கருத்தை விளக்கமாக எடுத்துரைத்துள்ளேன்.[13]

"நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என்ற தொகை நூல்களில் உள்ள அனைத்து அகத்துறைப் பாடல்களுக்கும், திணையும், துறையும், பாடிய புலவர் பெயரும் கொடுத்திருப்பது போல், புறநானூற்றுப் பாடல்கள் நானூறுக்கும் திணையும், துறையும், பாடிய புலவர் பெயரும் கொடுத்திருப்பதால், அது செய்தது, அப்பாடல்களைத் தொகுத்தவர் செயலாகும்."

"புறனூற்றுப் பாக்களில், முதல் **266** பாக்களுக்குத் திணை, துறை, பாடிய புலவர் ஆகிய விளக்கங்களுக்கு மேலாக, அப்பாக்கள் பாடப் பெற்ற சூழ்நிலை, அப்பாக்களின் பாட்டுடைத் தலைவர்கள் ஆகிய விளக்கம் அளிக்கும் கொளுவும், அதை அடுத்துப் பொருள் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளன."

"எந்தப் பாட்டோடு பொருள் விளக்கம் நின்று விடுகிறதோ, அந்தப் பாட்டோடு கொளுவும் நின்று விடுகிறது; ஆகவே, கொளு, பொருள் விளக்கம், ஆகிய இரண்டையும் செய்தவர் ஒருவரே; அவர், அந்நூலைத் தொகுத்தவரினும் காலத்தால் பிற்பட்டவராதல் வேண்டும். நூலைத் தொகுத்தவர், கி. பி. ஆறாம் நூற்றாண்டினராயின், கொளுவும், விளக்கமும் அளித்தவர், கி. பி. 12 ஆம் நூற்றாண்டிற்கும், கி. பி. 16 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தவராதல் வேண்டும்" என முடித்து

விட்டு,[14] அக்கொளுக்கள், வரலாற்றுச் சான்றுகளாக ஏற்கும் தகுதியுடையவல்ல என முடிந்த முடிவாக முற்றுப் புள்ளியும் வைத்து விட்டார் திருவாளர். பி டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள்.[15]

கொளுவிற்கும், விளக்க உரைக்கும், அவர் விதித்த காலத்திற்கான அடிப்படைச் சான்று எதுவும் காட்டாத அவர், கொளு, வரலாற்றுச் சான்று ஆகாது, என்ற தம் முடிவிற்கு ஆதாரம் காட்ட, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடும் **புறம் 76, 77** பாக்களையும், சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது பற்றுக் கோட்பட்டுக் குடவாயில் கோட்டத்துச் சிறையில் கிடந்து தண்ணீர் தா என்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக் கொண்டிருந்து உண்ணாது பாடியதான சேரமான் கணைக்கால் இரும்பொறையின் புறம் 74 பாட்டையும், சிறு குடி கிழான் பண்ணனைப் பாராட்டும் கிள்ளிவளவன் பாடிய **புறம் 173,** பாட்டையும், சோழன் நலங்கிள்ளியுழை நின்று உறையூர் புகுந்த இளந்தத்தன் என்னும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, ஒற்று வந்தான் என்று கொல்லப் புக்குழிப் பாடியதாகக் கூறும், கோவூர் கிழாரின் **புறம் 147** பாட்டையும், எடுத்துக் கொண்டு திறனாய்வு செய்துள்ளார்.[16]

திருவாளர் அய்யங்கார் அவர்கள் கூறுவது போல், புறநானூற்றுக் கொளுக்கள், வரலாற்றுச் சான்றுகளாக ஏற்கும் தகுதியடையவல்ல எனத் தள்ளிவிடத் தக்கன வல்ல; மாறாக, நற்றிணை, குறுந்தொகை, நெடுந்தொகை, புறநானூறு ஆகிய நான்கு தொகை நூல்களிலும் உள்ள 1600 பாக்களிலும் கிடைக்கும் வரலாற்று மூலங்கள் அனைத்தையும் நுண்ணிதின் ஆராய்ந்து கொண்ட உண்மை முடிவுகளின் தொகுப்பே ஆகும்.

கொளுக்கள் ஏற்கத்தக்கன அல்ல என்பதை உறுதி செய்ய திரு. அய்யங்கார் அவர்கள் எடுத்து விளக்கம் அளிக்கும் அந் நான்கு நிகழ்ச்சிகளுள், ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பதற்கிணங்க, ஒன்றை மட்டும் ஆய்ந்து, அவர் காட்டும் ஆதாரத்தின் பொருளின்மையை உறுதி செய்வோமாக.

திரு. அய்யங்கார் அவர்கள் காட்டும் சான்றுகளுள் முதலாவதான சான்று, **புறம், 76, 77**, பாக்களுக்குப் "பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடியது" என்ற கொளுவாகும்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வென்ற தலையாலங்கானப் போர் குறித்து அறிய வேண்டிய செய்திகள் :

1. போர் நிகழ்ந்த இடம் ஆலங்கானம் என்பது;
2. போரில் வெற்றி பெற்றவன் பாண்டியர் குலத்தவன் என்பது;
3. அவன் செழியன் என அழைக்கப்பட்டான் என்பது;
4. போர் மேற்கொண்டபோது அவன் நனி இளையன் என்பது;
5. போர் மேற்கொண்டு சென்ற அவன், இனமாலையாம் வேம்பும்; பகைவர் அரணை முற்றுகையிடச் செல்வதை உணர்த்தும் உழிஞை மாலையும் அணிந்து கொண்டான் என்பது;
6. அவன் பகைவர், சேரனும், சோழனும் ஆகிய வேந்தர் இருவரும், திதியன், எழினி எனு...

யூரன், இளங்கோவேண்மான், பொருநன் என்ற வேளிர் ஐவரும் என்பது;

7, வென்று அவர் முரசு கவர்ந்தான் என்பது;

8. இறுதியாகக் களவேள்வி செய்தான் என்பது.

தலையாலங்கானப் போர் குறித்துப் பாடிய புலவர்கள், அப்போரின் வெற்றித் திருமகனாம் நெடுஞ்செழியன், இடைக்குன்றூர் கிழார், கல்லாடனார், நக்கீரர், பொதும்பில்கிழார் மகனார், ஆலம்பேரி சாத்தனார், குடபுலவியனார், மாங்குடி மருதனார், ஆக புலவர் எண்மர் ஆவர்; இவர்தம் பாடல்களில் ஆலங்கானப் போர் குறித்த விளக்கங்களைத் தரும் பாடல்கள் பதினாறு. இப் பதினாறு பாக்களில் எந்த ஒரு பாட்டிலேனும், பெற வேண்டிய எட்டு விளக்கங்களையும் ஒரு சேரப் பெற்றுவிட முடியுமா என்றால் இயலாது.

தலையாலங்கானத்துப் பெருவீரன் நெடுஞ்செழியன் பாடிய பாட்டு புறம்: 72. ''நகு தக்கனரே நாடு மீக்கூறு நர்'' எனத் தொடங்கும் அப்பாட்டில், மேலே கூறிய விளக் கங்கள் எட்டும் கிடைக்கின்றனவா என்றால் இல்லை. அது மட்டுமன்று, அப்பாட்டில் வரும் ''மாங்குடி மருதன் தலை வனாக'' என்ற அந்த ஒரு சிறு தொடர் மட்டும் இல்லாமல் இருந்தால் அதைப் பாடியவனை, மூவேந்தர் குலத்தில், எக் குலத்து வந்த எந்த ஒரு பேரரசனாகவும் கொண்டு விடலாம்.

அது அவன் பாட்டுதான் என்பதை உறுதி செய்ய மாங்குடி மருதன் பாடிய மதுரைக் காஞ்சியின் துணையினை நாட வேண்டும். அதில் வரும் ''பொருப்பிற் பொருந'' (40—43) ''நெடியோன் உம்பல்'' (60—61) ''நற்கொற்கை யோர் நசைப் பொருந'' (138) என்ற வரிகள் எல்லாம் அப் பாட்டுடைத் தலைவன், பாண்டியர் மரபில் வந்தவன் எனப் பொதுவாகத்தான் உணரத் துணை புரிகின்றன.

"இருபெரு வேந்தரொடு வேளிர் சாய" (55), "ஆலங் கானத்து அஞ்சுவர இறுத்து, அரசுகெட அமர் உழக்கி, முரசு கொண்டு களம் வேட்ட" (127—130) என்ற வரிகள், அப்பாட்டுடைத் தலைவனின் பகையரசர்கள், மூவேந்தருள் பாண்டியர் அல்லாத, சேர, சோழ வேந்தர்களும், வேளிர் சிலருமாவர் என்பதையும், அவன் அவர்களை ஆலங்கானத் துப் போரில் வெற்றி கொண்டான், பகையரசர்களின் முரசி னைக் கைக் கொண்டான்; களவேள்வி செய்து புகழ் கொண்டான் என்பதையும் உணர்த்துகின்றன என்றாலும், தன்னுடைய பாட்டுடைத் தலைவன் செழியன் என்பதை உணர அது துணை புரியவில்லை; அதற்கு அவர் பாடிய, புறநானூற்றுப் பாக்களின் துணை நாட வேண்டியுளது; அவ்விரு பாக்களில், 24-ஆம் எண் பாட்டு, அவன் செழியன் தான் என்பதையும், 26-ஆம் எண் பாட்டு, அவன் பெயரை உணர்த்துவதோடு அவன் களவேள்வி செய்தான் என்பதை யும்தான் உணர்த்துகின்றனவே ஒழிய, போர்க்களம், ஆலங் கானம் என்பதையோ, பிற விளக்கங்களையோ தரவில்லை.

அவ்விளக்கம் பெறக் கல்லாடனார் துணையினை நாட வேண்டியுளது. அவன் புகழ் பாடும் கல்லாடனார் பாக்கள் இவை.

1. "செழியன்
நேரா எழுவர் அடிப்படக் கடந்த
ஆலங்கானம்" 17

2. "ஆலங்கானத்து அமர் கடந்து அட்ட
கால முன்ப" 18

3. "ஒன்றுமொழி வேந்தரை
அணங்கரும் பறந்தலை உணங்கப் பண்ணி
பிணியுறு முரசம் கொண்ட காலை
நிலைதிரிபு எறியத் திண்படை கலங்கிச்
சிதைதல் உய்ந்தன்றே நின்வேல் செழிய" 19

4. "அரைசுபட அமர் உழக்கி
உரைசெல முரசவெளவி
முடித்தலை அடுப்பாகப்
புனல்குருதி உலைக்கொளீஇத்
தொடித்தோள் துடுப்பின் துழந்த வல்சியின்
அடுகளம் வேட்ட அடு போர்ச் செழிய" [20]

இவற்றுள், எடுத்துக்காட்டு ஒன்றில், செழியன் என்ற அவன் பெயரும், அவன் பகைவர் எழுவர் என்பதும், போர்க்களம் ஆல்ங்கானம் என்பதும் உணர்த்தப்பட்டன. எடுத்துக்காட்டு இரண்டில், களம், ஆலங்கானம் என்பது மட்டுமே உணர்த்தப்பட்டது. எடுத்துக்காட்டு மூன்றில், பகைவர், வேந்தர் என்பதும், அவன், செழியன் என்பதும் உணர்த்தப்பட்டன. எடுத்துக்காட்டு நான்கில், பகைவர் முரசு கைப்பற்றப்பட்டதும், அவன் களவேள்வி செய்ததும், அவன் செழியன் என்பதும் உணர்த்தப்பட்டன.

ஆக, அப்பாக்கள் நான்கினையும் ஒருங்கு வைத்து நோக்கிய வழியே, ஆலங்கானத்துப் போர் வீரன் செழியன்; அவன் பகைவர், வேந்தர் உள்ளிட்ட எழுவர்; களம், ஆலங்கானம்; அவன், பகையரசர் முரசுகொண்டு, களவேள்வி செய்தான்; என்ற செய்திகளை அறிய முடிந்தது. அவன் இளையோன்; பகைவருள் வேந்தர் இருவர் ஒழிந்த ஐவர் யார்; அவன் களம் நோக்கிச் சென்ற கோலம் ஆகியவற்றை இவைதாமும் அறிவிக்க வில்லை.

பகைவர் எழுவருள், வேந்தர் இருவர் ஒழிந்த ஐவர், வேளிர் என்பதை உணர, மாங்குடி மருதனாரையும், [21] அந்த ஐவர் இன்னின்னார் என்பதை உணர,

"செழியன்
ஆலங்கானத்து, அகன் தலை சிவப்பச்
சேரல், செம்பியன், சினங் கெழுதிதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,

நாநரி நறவின் எருமை ஊரன்;
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன்
என்று
எழுவர் நல்வலம் அடங்க, ஒரு பகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்று களம் வேட்ட ஞான்று'' 22

என்ற நக்கீரரின் இப்பாடலை நாடவேண்டியுளது.

போரில் புண்பெற்ற படைகளின் நிலைகண்டு, அதன் நலம் பேணும் கடமையுணர்வால், வாடைப் பருவம் வந்துற வும், கணவன் வாரானாக வருந்தும் கோப்பெருந்தேவியை யும் மறந்து, போர்க்களத்துப் பாசறை வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும் செழியனின் பேராண்மை நலம் பாராட்டும் நெடுநல் வாடையில், அவனுடைய வேப்பந்தார் தவிர்த்து வேறு அடையாளம் காட்டாத நக்கீரர், மேலே கூறிய அகப்பாட்டுச் சில வரிகளில், செழியன் என்ற அவன் பெயர், ஆலங்கானம் என்ற அவன் போரிட்ட களம், சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற அவன் பகைவர் எழுவர், முரசுகொண்டு, களவேள்வி செய்த அவன் செயல் ஆகிய இத்தனை விளக்கங்களை ஒருசேரத் தந்துள்ளார் என்றாலும், அவன் (நெடுஞ்செழியன்), தன் பாட்டில் தானே கூறிய, அவன் இளையோன் என்ற விளக்கத் தையோ, நனிமிகப் பெரிய படையுடையேம் என்ற செருக் கால் போர் மேற்கொண்டு வந்த பகைவர் தம் அறியாமை யினையோ, நக்கீரரின் இப்பாட்டிலும் காண முடிய வில்லை.

''ஆலங் கானத்து அஞ்சுவர இறுத்த
வெல்கெழு தானைச் செழியன்''

என்ற பொதும்பில் கிழார் மகனார் பாட்டும், 23

"செழியன்
ஆலங்கானத்து அமர் கடந்து உயர்த்த வேல் "

என்ற ஆலம்பேரி சாத்தனார் பாட்டும், [24] செழியன் என்ற அவன் இயற்பெயர், ஆலங்கானம் என்ற அவன் வென்ற களம் ஆகிய இவ்விரண்டை மட்டும் உணரத்தான் துணை புரிகின்றனவேயல்லாது, அவன் இளையன் என்பதை உணரத் துணை புரியவில்லை.

அதுபோலவே,

"தமிழ் தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையும், கூற்றத்து ஒருமையும்
நின்னொடு தூக்கிய வென்வேல் செழிய
... ... ... ...
எழுவர் நல்வலம் கடந்தோய்"

என்ற வடபுலவியனார் பாட்டும், [25] செழியன் என்ற அவன் பெயர், ஆலங்கானம் என்ற போர்க்களம், ஆகிய இவ்விரு விளக்கங்களோடு, அவன் பகைவர் எழுவர் என மேலும் ஒரு விளக்கத்தை மட்டும்தான் தருகின்றதே அல்லது, அவன் இளையன், தாம் படையாலும் எண்ணாலும் பெரியவர் என்ற செருக்கே ஆலங்கானப் போருக்குக் காரணம் ஆயிற்று என்பதை உணர்த்த வில்லை.

"செழியன்

பீடும் செம்மலும் அறியார் கூடிப்
பொருதும் என்று தன் தலை வந்த
புனை கழல் எழுவர்" [26]

"கிண்கிணி களைந்தகால், ஒண்கழல் தொட்டு...
... ... ... ...
பால் விட்டு அயினியும் இன்று அயின்றனன்" [27]

''விழுமியம்; பெரியம் யாமே; நம்மில்
பொருநனும் இளையன்; கொண்டியும் பெரிதுஎன
எள்ளி வந்த வம்ப மன்னர்'' [28]

என்ற இடைக்குன்றூர்க்கிழாரின் பாக்களில்தான், வென்றோன் செழியன் என்பதும், தோற்றோர் எழுவர் என்பதும் கூறப்பட்டிருப்பதோடு, வேறு எப்புலவர் பாட்டிலும் வெளிப்படாத அவன் இளையோன் என்பது கூறப்பட்டுளது. அதுமட்டும் அன்று,

''இளையன் இவன் என உளையக் கூறி
... ... ... ...
படையமை மறவரும் உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது உடல் சினம் செருக்கிச்
சிறு சொல் சொல்லிய சினங் கெழு வேந்தர்''

என்ற பாட்டுடைத் தலைவன் குரலை [29]

''விழுமியம்; பெரியம் யாமே; நம்மில்
பொருநனும் இளையன்; கொண்டியும் பெரிது என
எள்ளி வந்த வம்ப மன்னர்'' [30]

என அப்படியே எதிர் ஒலிக்கவும் செய்துள்ளது.

ஒருவன்பால் அமைந்துவிடும் கல்வி, செல்வம், வீரம், விழுப்புகழ்களின் அளக்கலாகா மிகுதி, கண்... வழி, வியப்புற்று நிற்கும் நிலையில், ''இத்துணை உ... நிற்பான் யாவனோ?'' என வினா எழுப்புவது இ... அது பாட்டின் மரபும் கூட. அது, வியப்பு அடிப்ப...யாக எழும் வினாவே அல்லது, அறியாமையின் அடிப்படையில் எழும் வினா அன்று.

வல்வில் ஓரியின் வில்லாற்றல், கொடை வளங்களை அறிந்து, வன்பரணர், புறப்பாட்டு ஒன்றில் [31] ''கொலை

வன் யார் கொலோ?—ஓரி கொல்லோ? அல்லன் கொலோ?'' என வியந்து வினா எழுப்பி வாய் பிளந்து நிற்பதும், பெயர் அறியாப் படைமறவன் ஒருவனின் பேராண்மை கண்டு வியக்கும் பெயர் அறியாப் புலவர் ஒருவர், ''யார் கொலோ? அளியன்!'' எனப் பிறிதொரு புறப்பாட்டில்[32] வியப்பு அடிப்படையாக எழும் வினா எழுப்பி நிற்பதும் காண்க.

இம் மரபையொட்டி, புலவர் இடைக்குன்றூர் கிழார், புறம்:77ல், ''யார் கொல்'' என வினா எழுப்பியுள்ளார். இம் மரபு உணராத காரணத்தால், புறம்:76ல் அவன் ஒருவன், அவன் பகைவர் எழுவர் என்பதையும், அவன் ஆற்றலும் பெருமையும் அறியாது வந்துவிட்ட அப்பகைவர் களின் அறியாமையினையும், அவன், வேப்பந்தாரோடு உழிஞை மாலையும் அணிந்து சென்று, அப்பகைவர் எழு வரையும், ஒரு தானாகி நின்று வென்றதையும் விளங்கக் கூறியிருப்பதையும், புறம் 77ல் போர்க்களம் நோக்கிப் போகும் அப்போதும், அவன் இளமை மாறா நிலையினைக் கண்ணுற்று ''யார் கொல்'' என வினா எழுப்பி நிற்பதை யும் கண்டு, ''புலவருக்குத் தெரிந்தவனான, 76ஆம் புறப் பாட்டுத் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனும், புலவருக்குத் தெரியாதவனான 77ஆம் புறப் பாட்டு நனி இளையோனும், வேறு வேறுபட்ட இருவர் அல்லர், இருவரும் ஒருவனே என்பது நம்பக் கூடாத ஒன்று'' எனக் கூறி எள்ளி நகையாடியுள்ளார், திருவாளர் அய்யங்கார் அவர்கள்.[33]

தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழிய னின் புகழ்பாடும் புலவர் எண்மரும், அவனும், அப்போர் குறித்துப் பாடியிருக்கும் நற்றிணை, நெடுந்தொகை, புறநானூறு ஆகியவற்றில் கலந்து கிடக்கும், பதினாறுக்கும் மேற்பட்ட அப்பாக்களை அரிதின் முயன்று தேடிப் பிடித்து, நுணுகி, ஆய்ந்து, அப்போர் குறித்த பல்வேறு செய்திகளை

யும் அறிந்து கொண்டு தெளிவுற்ற நிலையில் அமைந்திருக்கும் கொளுக்கள், முழுக்க, முழுக்க உண்மை வாய்ந்தவை; பழந்தமிழர் வரலாற்றை வரைவார்க்கு. வலுவான சான்றாக அமைய வல்லவை; ஆகவும், அக் கொளுக்களை வரைந்தார் தம் ஆழ்ந்த அறிவினையும். அருமுயற்சியினையும், அருஞ்செயலையும் பாராட்ட மனமில்லையாயினும், அவை ஏற்கத்தக்கன அல்ல என இழிவு படுத்துவது, நல்ல வரலாற்றுத் திறனாய்வு நெறி ஆகாது.

திருவாளர் **நீலகண்ட சாஸ்திரியார்** அவர்கள், தம்முடைய **சோழர் வரலாறு மற்றும் ஆட்சி முறை பற்றிய திறனாய்வு** நூலில் (Studies is Chola History and Administration) கொளுக்கள் குறித்த, திருவாளர் பி.டி.எஸ். அவர்களின் இம் முடிவை விரிவாக ஆராய்ந்து, அது தவறான முடிவு என உறுதி செய்து, பின் வரும் தீர்ப்புக்களை வழங்கியுள்ளார்,

"தொகை நூலைத் தொகுத்த ஆசிரியர், அப்பாக்களைப் படித்தும், மரபு வழிச் செய்திகளை ஏற்றும், அந் நூலைத் தொகுத்தபோதே, அக் கொளுக்களைத் தாமே எழுதியிருக்க இயலாதா, ஒவ்வொரு பாக்களுக்குமான கொளுக்கள் அப்பாக்கள்,தொகை நூலாகத் தொகுக்கப் படுவதற்கு முன்னரே, அப்பாக்களோடு இணைந்திருக்க இயலாதா என்ற வினாக்களுக்கு விடைகாண வேண்டியது இன்றியமையாதது என்பது திருவாளர் பி. டி. எஸ். அவர்களுக்குத் தெரிய வில்லை" [34]

கொளுக்கள் வரலாற்றுச் சான்றுகளாக ஏற்கத்தக்கன அல்ல என்ற தம்முடிவிற்கு அரண் செய்ய "எல்லாப் பாக்களுக்கும் கொளுக்கள் கொடுக்கப்படவில்லை. புறம் 266-ம் எண் பாட்டோடு அது நின்று விடுகிறது" என்ற திரு. பி. டி. எஸ். அவர்களின் வாதத்திற்கு, "உண்மையில் எல்லாப் பாக்களுக்குமே கொளுக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. சில

வற்றிற்குக் கிடைக்காமைக்குப், பழைய ஏட்டுச்சுவடிகளின் சீர்கெட்ட நிலையே காரணம். இது, அந்நூல் பதிப்பாசிரி யரால், அவருடைய முகவுரையில் [35] தெளிவாக உணர்த் தப்பட்டுளது'' [36] என விளக்கம் அளித்திருப்பதின் மூலம், அவர் வாதத்தின் வலிவின்மையை உணர்த்தியுள்ளார்.

''பலநூறு ஆண்டுகால இடைவெளியில் தொகை நூல் களில், பிழைபடு இடைச் செருகல்களே இடம் பெறாது தம் பண்டைய வடிவிலேயே பாக்கள், கிடைத்திருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது அரிதினும் அரிதாம். ஆகவே, அத்தகு குறைபாடு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு, அப் பாக்களையும், அப்பாக்களோடு கொடுக்கப்பட்டிருக்கும் கொளுக்களையும் வரலாற்றுச் சான்றுகளாக ஏற்க இய லாது என அறவே மறுப்பது, வரலாற்று நூல்கள் எழுது வதை இயலாததாக ஆக்கிவிடும், ஒரு தவறான வழிகாட்டு நெறியைக் காட்டுவதாகும்'' [37].

புறநானூற்றுக் கொளுக்கள் வரலாற்றுச் சான்றுகளாக ஏற்றுக் கொள்ளத்தக்கன அல்ல எனக் கூறும் திரு. பி. டி. எஸ். அவர்களின் கொள்கைக்கு மேலும் ஒருபடி மேலே சென்று, கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் அளிக்கும் சான்றுகளை வலுவான சான்றுகளாக ஏற்றுக்கொண்டு, புறநானூறு போலும் தொகை நூல்களையும், அவற்றின் கொளுக்களையும் ஏற்க மறுக்கும் வரலாற்றுப் பேராசிரியர் சிலரும் உள்ளனர்.

அத்தகையோரின் தவறான வழிகாட்டு நெறியினை யும் வன்மையாக மறுத்துள்ளார், திருவாளர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள். இதோ அவர் கூறுவன காண்க.

**திரு. வெங்கையா** அவர்கள், ''புறநானூறு எண்ணற்ற சோழ அரசர்களின் பெயர்களை..., அறிவிக்கின்றன... ஆனால் அவை தரும் வரலாற்றுச் சான்றுகளையும் குறிப்

பிட்ட ஒரு சோழ அரசனோடு தொடர்பு படுத்தும் செய்தி களையும் ஏற்றுக் கொள்வதில் பெரிதும், விழிப்புடையவ ராக இருக்க வேண்டும்'' எனக் கூறுகிறார் என கொளுக்கள் பற்றிய அவர் கொள்கையை அறிவித்துவிட்டு, அதைக் கீழ் வரும் வரிகளால் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

''தொகை நூல்கள் தரும் செய்திகள் பால், இத்தகு கட்டுப்பாட்டினை விதிக்கும் திரு. வெங்கையா அவர்கள், அந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததற்கு, அதிகம் இல்லை என்றா லும், ஐந்து நூற்றாண்டு காலம் கழித்து, பதினொன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களில் கூறப்பட்டி ருக்கும் செய்திகளைச் சிறிதும் தயங்காமல் ஏற்றுக் கொள் கிறார்...''

''ஏதேனும் ஒரு செய்தி, பனைஓலை ஏடுகளிலோ, அல்லது அதனினும் எளிதாகப் பாழ்பட்டுப் போகும் ஒரு பொருள் மீதோ எழுதப்படாமல், கல்லின் மீதும், செப்புத் தகட்டின் மீதும் பொறிக்கப்பட்டிருக்கிறது என்பதனா லேயே, அது முழு நம்பிக்கைக்கு உரியதாம் தகுதியைப் பெற்று விடுமா என்ற வினாவையும், அத்தகு கல்வெட்டுச் செப்பேடுகளில், மிகப் பெரிய பொய்யான இடைச் செருகல் கள் இடம் பெற்று விடவும், இலக்கிய ஆவணங்களைப் பெயர்த்து எழுதும் படிவங்களில் உண்மையான மரபு வழிச் செய்திகள், அப்படியே இடம் பெற்றுவிடவும் இயலாதா என்ற வினாவையும் எவர் ஒருவரும் எழுப்பக் கூடும்...''

''கல்வெட்டுத் திறனாய்வாளர்களின், இலக்கியச் சான்றுகளை அணுகும் நிலையில் மேற்கொள்ளும் தேவை யில்லா விழிப்புணர்வும், கல்வெட்டுச் செப்பேடுகளில் இடம் பெற்றிருக்கும் மிகப்பெரிய பொய்ச் சான்றுகள்பால் காட் டும் சிறுபிள்ளைத்தன்மான நம்பிக்கையும், அவர்களின் போக்கு குறித்த முறையான ஐயப்பாட்டினை எழுப்பு கிறது''[33]

புறநானூற்றுக் கொளுக்கள், வரலாற்றுச் சான்றுக ளாக ஏற்றுக்கொள்ளத் தகுதியில்லாதன என்ற தம் கொள் கையில் திருவாளர் அய்யங்கார் அவர்களும் விடாப் பிடி யாக இருப்பவர் அல்லர்.

**367**ஆம் எண் புறநானூற்றுப் பாட்டின் கொளு இது; "சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் கானப் பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரை ஔவையார் பாடியது."

இது குறித்துத் தம் கருத்தினைக் கூறும் திருவாளர், அய்யங்கார் அவர்கள், கொளுவில் கூறப்பட்டிருக்கும் மூவேந்தர் பெயர்கள், பாட்டில் இடம் பெறவில்லை எனினும் கொளு கூறும் செய்தி நம்புதற்கு உரியதே என நான் கருதுகின்றேன்" என அவரே கூறுவது காண்க.[39]

## சான்றெண் விளக்கம்


1. மயிலை. சீனி. வேங்கடசாமி, ''சேரர்'', தமிழ் நாட்டு வரலாறு—சங்க காலம்—அரசியல், தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983, பக்—220.
2. மேலது. பக். 220
3. புறம். 158—165
4. மேலது. 158
5. மேலது. 159
6. மேலது. 164
7. மேலது 163
8. மேலது. 158—163
9. மயிலை. சீனி. வேங்கடசாமி, முன்னூல், பக். 503.
10. புறம். 163
11. மேலது. 175—389
12. மேலது. 389
13. புலவர். கா. கோவிந்தன், பி. டி. சீனிவாச அய்யாங்கார் அவர்களின் 'தமிழர் வரலாறு' மொழி பெயர்ப்பும் திறனாய்வும், இரண்டாம் பகுதி, கழகம், 1989, பக். 150—163
14. புலவர். கா. கோவிந்தன், மேலது, முதல் பகுதி, பக். 409—410

15. மேலது. பக். 417
16. மேலது. பக். 411—416
17. அகம். 209
18. புறம். 23
19. மேலது. 25
20. மேலது. 26
21. மதுரைக் காஞ்சி. 55—56
22. அகம். 36
23. நற். 387
24. அகம். 175
25. புறம். 19
26. மேலது. 76
27. மேலது. 77
28. மேலது. 78
29. மேலது. 72
30. மேலது. 78
31. மேலது. 152
32. மேலது. 257
33. P. T, Srinivasa Iyengar, History of the Tamils. AES, 1982, P. 413

34. K. A. Nilakanta Sastai, Studies in Chola History and Administration, P. 9

35. P. T. Srinivasa Iyengar, op. cit. PP. 14—18

36. K A. Nilakanta Sastri, op. cit., P 12

37. Ibid. P. 18

38 Ibid. P. 5

39. P. T. Srinivasa Iyengar, op. cit, P. 461

# 6. தொல்காப்பியர் காலம் எது?

**தொல்காப்பியர்** காலம் எது என்பதை ஆராய முற்பட்ட ஆய்வாளர்களிடையே ஒத்த கருத்து இல்லை.

தமிழ் நாட்டு வரலாற்றுக்குழு மதொகுத்து, தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்காக, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1983ல் வெளியிட்ட, **''தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்—அரசியல்''** என்ற நூலில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ள வரலாற்று ஆய்வாளர்களிடையே கூட தொல்காப்பியர் காலம் எது என்பதை திட்டவட்டமாக வரையறை செய்வதில் ஒத்த கருத்து இல்லை.

**''தமிழ் நாட்டு வரலாறு—சங்க காலம்—அரசியல்''** என்ற அந்நூலில், **'அடிப்படைச் சான்றுகள் I'** என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ள, சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை முன்னாள் தலைவர், **டாக்டர். சி. ஈ. இராமச்சந்திரன்** அவர்கள் **''தொல்காப்பியத்தின் காலம் யாது?** என்ற தலைப்பின் கீழ்—''தொல்காப்பியம் கடைச் சங்க காலத்திற்கும் முற்பட்டது எனக் கூறலாம். இதனைத் தொல்காப்பியத்தில் வரும் சொல்லாட்சிகளுக்கும், கடைச் சங்க நூல்களில் வரும் சொல்லாட்சிகளுக்குமிடையே காணப்பெறும் ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் ஒப்பிட்டு அறியலாம்'' [1] என்றும், ''இஃது இடைச் சங்க காலத்தைச் சேர்ந்த நூலாகுமென முடிவு செய்கிறோம்'' [2] என்றும், ''தொல்காப்பியத்தின் காலம்

தோராயமாகக் கி. மு. நான்காம் நூற்றாண்டெனக் கூறி அமையலாம்'' [3] என்வும், ''தொல்காப்பியர் தமது நூலை நிலந்தருதிருவின் பாண்டியன் அவையில் அரங்கேற்றினார். அப்பொழுது அவையின் தலைவராயிருந்தவர் அதங்கோட்டாசான் எனும் பேரறிஞர் ஆவர்'' [4] எனவும், ''இவ்வாறு, தொல்காப்பியம் கி. மு. நான்காம் நூற்றாண்டளவில் தோன்றியதையும், அது தோன்றுவதற்கு முன்னமே பலஅரிய நூல்கள் தமிழகத்தில் இருந்ததையும், சங்கத் தமிழரின் வாழ்க்கைப்பட்டாங்கையும் தொல்காப்பியத்தாலேயே அறிகிறோம்'' [5] என்றும் தம் ஆய்வு முடிவை எடுத்து வைத்துள்ளார்.

''தமிழ் நாட்டு வரலாறு—சங்க காலம்—அரசியல்' என்ற அதே நூலில், **'காலக் கணிப்பு'** என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ள பேராசிரியர். பொன். சுப்பிரமணியம் அவர்கள், தொல்காப்பியத்தின் காலம்பற்றி குறிப்பிடும்போது, ஓரிடத்தில் ''தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் கி. மு. 5 ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று கூறிச் சங்க காலத்தின் முன்எல்லை கி. மு. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குவதாகக் காட்டுவர்'' [6] என்றும், பிறிதோரிடத்தில், ''தொல்காப்பியத்தின் காலத்தைக் கி. மு. 3ஆம் நூற்றாண்டு என்று கூறுவாருமுண்டு'' [7] எனவும் கூறியுள்ளார். ஒருவரே, ஐந்தாம் நூற்றாண்டு என்றும், மூன்றாம் நூற்றாண்டு என்றும் கூறுவது ஆய்வு நெறியாகுமா? மேலும், 'காட்டுவர்' என்றும், ''கூறுவாருமுண்டு'' என்றுதான் குறிப்பிட்டுச் சென்றுள்ளாரே அல்லது அவர் முடிவு கூறப்படவில்லை.

''தமிழ் நாட்டு வரலாறு—சங்க காலம்—அரசியல்'' என்ற அந்த நூலில், **சோழர்'** வரலாறு எழுதியுள்ள, ஆய்வாளர், மயிலை. **சீனி. வேங்கடசாமி** அவர்கள், ''தமிழ் இலக்கியத்துள் காலத்தால் முந்தியது தொல்காப்பியம்,

சற்றேறக்குறைய கி. மு. நான்காம் நூற்றாண்டு அளவில் இந்நூல் இயற்றப்பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.'' [8] என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரே நூலில், தொல்காப்பியர் காலம் குறித்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதிய ஆய்வாளர்களிடையே கூட ஒத்த கருத்து இல்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாம்.

மேலும், திருவாளர். பி. டி. **சீனிவாச் அய்யங்கார்** அவர்கள், **''தமிழர் வரலாறு''** (History of the Tamils) என்ற தம்முடைய ஆங்கில நூலில், **Agathiyanar Couldnot have lived before the I century B C., when Tamil writing must have begun to be commonly used. A study of the Tolkappiyam Compels us to believe, that master and pupil must have lived, a century or more later''** [9] எனக் கூறி, தொல்காப்பியர் காலம், கி. மு. முதல் நூற்றாண்டு எனக் கொண்டுள்ளார். இது ஆராயப்பட்டிருக்க வேண்டாமா என்பதை ஆய்வாளர்கள் சிந்திக்க வேண்டும் திரு. பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின் **'History of the Tamils'** என்ற நூலின், என் தமிழ் மொழி பெயர்ப்பான, **''தமிழர் வரலாறு''** முதல் பகுதியில், தொல்காப்பியர் காலம் குறித்து நான் கொடுத்திருக்கும் பின் வருப் விளக்கம் [10] பற்றி வரலாற்று ஆய்வாளர்கள், அருள்கூர்ந்து தங்கள் கருத்தினைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**''தமிழர் வரலாறு (Hisory of the Tamils)** என்ற நூலின் ஆசிரியர், திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார், ''அழிந்தன போக, அழியாதுள்ள தமிழ் நூல்களில் நனி மிகப் பழமையானது, தொல்காப்பியர் இயற்றிய தொல் காப்பியம். அது பெரும்பாலும், கி. பி. முதல்அல்லது இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்காது'' [11] என ஓரிடத்தில் கூறினாலும், பிறிதோரிடத்தில், ''தமிழ் நூல்கள் பரவலாக எழுதப்பட்ட கி. மு. முத

லாம் நூற்றாண்டிற்கு முன்னர், அகஸ்தியர் வாழ்ந்திருக்க இயலாது. தொல்காப்பியம் பற்றிய ஆய்வு,' அதன் ஆசிரிய ரும், அவர்தம் ஆசிரியரும், அதற்கு ஒரு நூறு ஆண்டு அல்லது அதற்கு மேலும் கழித்தே வாழ்ந்திருக்க வேண்டும் எனக்கொள்ளவே நம்மை வற்புறுத்துகிறது'' [12] எனக் கூறு வதன் மூலம், தொல்காப்பியரை, கி. மு. முதல் நூற்றாண் டின் கடை வாயிற்கண் நிறுத்தவும் மறுத்துள்ளார்.

அதற்கு அவர் கூறும் காரணம் பின்வருமாறு :

''திருமணம் போலும் மங்கள நிகழ்ச்சிகளுக்கு உரிய நாளின் ஒரு கூறு எனும் பொருளில், ''ஓரை'' எனும் சொல் லைத் தொல்காப்பியர் ஆண்டுள்ளார். ''மறைந்த ஒழுக் கத்து ஓரையும் நாளும் துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை'' [13] ''ஓரை'' எனும் இத்தமிழ்ச் சொல், ''ஹவர்'' **(Hour)** எனும் ஆங்கிலச் சொல்லைப் போலவே, முடிந்த முடிவாக, ''ஹொர'' **(Hora)** என்ற கிரேக்கச் சொல்லி லிருந்தே பெறப்பட்டதாகும். ''ஹொர'' என்ற அச்சொல், கிரேக்க மொழியில், கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுவரை, ''ஆண்டின் ஒரு பருவம்'' என்னும் பொதுப் பொருளே **(Season in general)** உடையதாகும். ஒரு நாளின், ஒவ்வொரு கூறும், ஏழு கோள்களில் ஒவ்வொரு கோளின் ஆட்சிக் கீழ் வருவதாகக் கொள்ளப்பட்ட கி. மு. இரண்டாம் நூற்றாண் டில்தான், ''ஹொர'' என்ற அச்சொல்லுக்கு, ஒரு நாளின் இருபத்தினான்கு கூறுகளில் ஒரு கூறு உணர்த்தும் பொருள் தரப்பட்டுளது. ''ஹொர'' என்ற அச்சொல், தான் உணர்த் தும் அச்சோதிடப் பொருள் குறிப்போடு, கி. மு. முதல் இரண்டு நூற்றாண்டுகளில், கிரேக்க மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்த காந்தார நாட்டிற்குப் பயணம் செய் தது. சமஸ்கிருத நூலாசிரியர்கள், கிரேக்கர்களின் சோதி டக் கலையைக் கற்றுக் கொண்டபோது, அச் சொல் சமஸ் கிருதத்திலும் இடம் கொண்டது. பின்னர், அது, தெற்கில் பயணம் செய்து, தமிழில் நுழைந்து விட்டது. ஆகவே,

''ஓரை'' என்ற சொல், தொல்காப்பியர் காலத்தின் மேல் வரம்பாகும் கி. பி. முதலாம் நூற்றாண்டிற்கு முன்னர்த் தமிழில் இடம் பெற்றிருக்க முடியாது என்று கொண்டால், அது, ஒரு நடுநிலை மதிப்பீடு ஆகும்.'' [14]

இவ்வாறு கூறுவதன்மூலம் ''ஓரை'' என்பது தமிழ்ச் சொல். அது, தமிழ் வணிகர் மூலம் கிரேக்கம் சென்றது. 'ஹொற' எனத் திரிந்து, கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே அம் மொழியில் இடங்கொண்டு விட்டது, எனக் கொள்வதற்குப் பதிலாக, ''ஹொற'' என்ற கிரேக்கசொல், காந்தாரத்துச் சமஸ்கிருத வல்லுநர் மூலம் தமிழகத்திற்கு வந்து. ''ஓரை'' எனத் திரிந்து, கி.பி. முதல் நூற்றாண்டில், தமிழில் இடம் பெற்றது எனக் கருதுகிறார், திருவாளர் அய்யங்கார் என்பது தெளிவாகிறது.[15]

ஆனால், இவ்வாறு, தமிழ் மொழிக்குப் பிறமொழி வரவினை உறுதி செய்யும் திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களே பின்வருவனவற்றையும் கூறியுள்ளார்.

''ஆர்மீனிய நாட்டு, ''அர்ஸசிட்' மரபின் முதல் மன்னனாகிய 'வளர்ஷக்' என்பான் காலத்தில் (கி.மு. 149-127) இந்திய வணிகத் தலைவர் இருவர், யூப்ரடீஸ் ஆற்றின் மேற்குக் கரையில், ''வான்'' என்ற ஏரிக்கு மேற்கில், ஒரு புதிய குடியிருப்பை நிறுவி, ஆர்மினிய மொழியில், ''கிஸனி'', ''தெமெதெர்'' என முறையே வழங்கப் பெறும் கிருஷ்ணன், பலதேவன் ஆகியோர்க்குக் கோயில்களையும் கட்டினர். வட இந்தியாவில் கிருஷ்ணன் வழிபாடு, பெருமளவில் இடம் பெற்றுளது என்றாலும், பலதேவனையும் ஒருங்கே வைத்து வழிபடும் வழக்கம் காணப்படவில்லை. ஆனால், அவ்விரு கடவுளரையும் ''மாயோன்'' என்றும், ''வலியோன்'' என்றும் பெயர் சூட்டி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வழிபட்டனர் தமிழர். கிருஷ்ணனுக்கு எண்ணிலாக் கோயில்கள் உள்ள வட இந்தியாவில்,

பலதேவனுக்குக் கோயிலே இல்லை. ஆனால், மாயோன் கோயிலை அடுத்துக் கட்டப் பெற்ற பலதேவன் கோயில், காவிரிப்பூம்பட்டினத்திலும், மதுரையிலும், சங்க காலத்திலேயே இருந்தது. பல தேவனுக்கு உரிய கொடி பனைக் கொடி. பனைமரம் கங்கை வெளியில் வளர்வதில்லை. மணல் பரந்த தமிழ்நாட்டு ஆற்றங்கரைகளிலேயே வளரும். கூறிய இக் காரணங்களைக் கொண்டு நோக்கிய வழி, ஆர்மீனியாவில், கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இடங் கொண்டிருந்த அவ் வழிபாட்டுமுறை, தமிழ்நாட்டிலிருந்து தமிழ் வணிகர்களாலேயே கொண்டு செல்லப்பட்டது என் பது உறுதியாகிறது.''[16]

''இந்தியா, ஐரோப்பாவோடு மேற்கொண்ட வாணிகத்தில், கி. மு. 500இல், கிரேக்கர்கள் இடைத்தரகர் ஆயினர். அதன் விளைவாக, அரிசி என்ற தமிழ்ச்சொல், ''ஒரைஸா'' என்ற வடிவிலும், கருவாப்பட்டையைக் குறிக்கும் கருவா என்ற தமிழ்ச் சொல், ''கார்பியன்'' என்ற வடிவிலும், இஞ்சி வேர் எனும் சொல், ஜிஞ்சிபெரோஸ் என்ற வடிவிலும், வைடூரியம் எனும் சொல், ''பெரிலோஸ்'' என்ற வடிவிலும் கிரேக்க மொழி நூல்களில் இடம்பெற்று விட்டன.'' [17]

''கி.மு. பத்தாம் நூற்றாண்டில், மன்னன் சாலமனுக்கு ஷீபா அரசியார் அளித்தனவற்றுள், நறுமணப் பொருள்கள், விலை மதிக்கவொண்ணா மாணிக்கங்களும் இடம் பெற்றிருந்தன. சாலமனுக்குரிய கலங்கள், மூன்று ஆண்டிற்கு ஒரு முறை, பொன், வெள்ளி, தந்தம், அகில், சந்தனமரங்கள், வாலில்லாக்குரங்கு, தோகையழகுவாய்ந்த மயில்கள் முதலாம் பொருட்களை வாரிக்கொண்டு வந்தன. தமிழ் வணிகர், தமிழ்நாட்டுப் பொருட்களையேயல்லாமல், அவற்றின் தமிழ்ப் பெயர்களையும் ஆண்டு கொண்டு சென்றனர். ''அகில்'' என்ற தமிழ்ச் சொல், ''அகல்'' என்ற

வடிவிலும், "தோகை" என்ற தமிழ்ச் சொல், "துக்கி" என்ற வடிவிலும், அந்நாட்டு மொழிகளில் இடம் பெற்றிருந்தன." [18]

திருவாளர் சாய்ஸ் என்பார், தம்முடைய சொற்பொழிவு ஒன்றில், "கிறிஸ்து பிறப்பதற்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில், சுமேரிய அரசர்களின் தலைநகராய்த் திகழ்ந்து அழிந்து போன, "ஊர்" எனும் இடத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த தேக்குமரத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்றும், மெசபடோமியப் பள்ளத்தாக்கில் விளங்கிய மிகப் பழைய பெருநகராம் பாபிலோனியாவிலும், அதைச் சூழ உள்ள நாட்டிலும் வாழ்ந்த மக்கள் அணிந்த ஆடை வகைகளுள் "சிந்து" எனும் பெயருடையதொரு ஆடையும் இடம் பெற்றுளது என்றும் கூறியுள்ளார். "சிந்து" எனும் இச்சொல், தமிழின் உடன்பிறப்பு மொழிகளாகிய துளுவிலும், கன்னடத்திலும், ஆடையின் ஒரு பகுதி எனும் பொருளில் "சிந்தி" என்ற வடிவிலும், தமிழில் கொடி எனும் பொருளில், "சிந்து" என்ற வடிவிலும் வழங்கும் சொல்லின் திரிபே ஆகும். அது, "சிந்தி" என்ற வட இந்திய ஆற்றின் பெயரினின்றும் பிறந்ததும் ஆகாது. பெர்ஷியா (பாரசீகம்) வழியாகச் சென்ற வணிகர் கொண்டு சென்றதும் அன்று. கடல் வழியாகச் சென்ற தமிழ் வணிகரே, அவ்வாடையையும், அச்சொல்லையும் தமிழகத்தினின்று நேரே கொண்டு சென்று, ஆங்கு வழங்கியிருத்தல் வேண்டும். பெர்ஷிய (பாரசீகம்) வழியாகச் சென்றதாயின், அந்நாட்டு மக்கள் ஒலிப்பில் "சகரம்", "ஹ கரமாக மாறும் இயல்பிற்கு ஏற்ப, "சிந்து" என்ற சொல் "ஹிந்து"! என ஆகியிருக்க வேண்டும். ஆனால், அது, அவ்வாறு திரியாது, தமிழில் உள்ளவாறு "சிந்து" என்றே ஒலிக்கப் பெறுகிறது. ஆகவே அது தமிழ்ச்சொல்லே; தமிழ் நாட்டினின்றும் சென்றதே என்பதை உறுதி செய்யும். [19]

ஆக, இவ்வாறெல்லாம் கூறியிருப்பதன் மூலம், கிருஷ்ணனோடு, பலதேவனையும் வழிபடும், வழிபாட்டு நெறி கி. மு. இரண்டாம் நூற்றாண்டில், தமிழகத்தி லிருந்து ஆர்மீனியாவுக்குச் சென்றதையும், தமிழ்நாட்டு அரிசி, கருவாப்பட்டை, இஞ்சிவேர், வைடூரியங்கள், கிரேக்க நாட்டிற்குக் கி.மு. 500ல் சென்றதையும், அவற்றைக் குறிக்கும் "ஒரைஸா", "கார்பியன்" "ஜிஞ்சி பெரோஸ்" "பெரைலோஸ்" என்ற கிரேக்க மொழிச் சொற்கள் முறையே, அரிசி, கருவா, இஞ்சி வேர், வைடூரியம் என்ற தமிழ்ச் சொற்களின் திரிபாம் என்பதையும், தமிழ்நாட்டு மயிலும் அகிலும் பாலஸ்தீனத்திற்கு, கி. மு. பத்தாம் நூற்றாண்டில் சென்றதையும், அவற்றைக் குறிக்கும் "துக்கி", "அகல்" என்ற அம்மொழிச் சொற்கள், தோகை, அகில் என்ற தமிழ்ச் சொற்களின் திரிபாம் என்பதையும், தமிழ்நாட்டு மெல்லிய ஆடை, கிறிஸ்து பிறப்பதற்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, பாபிலோனியாவிற்குச் சென்றதையும், அதைக் குறிக்கும் "சிந்து" என்ற அம்மொழிச் சொல் "சிந்து" என்ற தமிழ்ச்சொல்லே என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளார் திருவாளர் சீனிவாச அய்யங்கார் என்பது உறுதியாகிறது.

திரு.பி.டி.எஸ். அவக்கள் ஒப்புக்கொண்டு கூறும் வேறு ஒரு வரலாற்றுச் செய்தியையும் ஈண்டு குறிப்பிடல் நலம்.

"வேதகாலம் ஏறத்தாழ கி.மு. 3000ல் தொடங்கியதாகவும், அது, ஒவ்வொன்றும் 500 ஆண்டுகளைக் கொண்டதான மூன்று யுகங்களை உள்ளடக்கியதாகவும் நான் கருதுகின்றேன். ஸ்ரீராமச்சந்திரன், வேதகாலத்தின் மூன்று பகுதிகளில், இரண்டாவது பகுதியில் இருந்தார். ஆகவே அவருடைய காலம் கி.மு. 2000 எனக் கருதுகின்றேன்... ஸ்ரீராமருக்கும், ஸ்ரீகிருஷ்ணனுக்கும் இடையில் கடந்து போன காலம் 500 ஆண்டுகள் என்பது ஒரு நல்ல மதிப்பீடு.

இது, வேதகாலத்தின் முடிவுக்கு நம்மைக் கொண்டு சேர்க்கிறது.''[20]

ஆக, கி.மு. 3000 தொடங்கி, கி.மு. 1500 வரையான காலம், வேதகாலம் என்பது, திருவாளர். பி.டி.எஸ். அவர்களின் கருத்தாம் என்பது தெளிவாயிற்று.

''கி.மு. 3000 முதல் கி.மு. 1500 வரையான காலமாகக் கருதப்பட்ட வேதகாலத்தில், தென்கோடித் தமிழகத்தின் விளைபடு பொருளாம் முத்து, வட இந்திய ரிஷிகளால் ஒப்பனைப் பொருளாகப் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது.''[21] எனக் கூறிவிட்டு, அதை உறுதி செய்ய, இருக்கு வேதத்திலிருந்து எண்ணற்ற சுலோகங்களை, அகச்சான்றுகளாக எடுத்துக் காட்டியுள்ளார், திருவாளர் அய்யங்கார்.

இது கூறிய அவர், ''அம்முத்திற்குச் சமஸ்கிருதம் இட்டு வழங்கும் பெயர் ''முக்தா'' என்பது. இது வேத இலக்கியங்களில், ஓரிடத்தில் 'விமுக்தா' என இடம் பெற்றுளது''[22] என்றும் கூறிவிட்டு, அச்சொல்லின் மூலம் குறித்து, மேனாட்டுச் சமஸ்கிருத முதுபெரும் திறனாய்வாளர்களாகிய திருவாளர்கள், மேக்டொனேல் (Macdouel) கெய்த் (Keitb), மோனியர்வில்லியம்ஸ் ( Monier Willioms ) ஆகியோர் அளிக்கும் விளக்கங்களை வலுவாக மறுத்துவிட்டு, ''முக்தா'' என்ற அவ்வடசொல், தமிழ்நாட்டு முத்து என்ற பொருளோடு, கடனாகப் பெற்று, முக்தா எனச் சமஸ்கிருதமாக்கப்பட்ட முத்து என்ற தமிழ்ச்சொல் அல்லது வேறு அன்று''[23] என்றும் கூறி முடித்துள்ளார்.

ஆக, தமிழ்நாட்டின் தென்கோடி விலைபடு பொருளாம் முத்து மட்டுமல்லாமல் அதன் பெயரும், வேதகாலத்தில், அதாவது கி.மு. 3000க்கும், கி.மு. 1500க்கும் இடைப்பட்ட காலத்தில், வடநாடு சென்று, அம்மொழி வழக்காற்

றில் இடம்பெற்று விட்டது என்பதைத், திருவாளர் பி.டி.எஸ். அவர்களே உறுதி செய்துள்ளார் என்பது தெளிவாயிற்று.

ஆக, இவ்வகையால், கி.மு. 4000 தொடங்கி, கி.மு. 200 வரையான காலத்தில் தமிழ்ச்சொற்கள், மேலை நாடுகளுக்கும் வடநாட்டிற்கும் சென்று, அம்மொழிகளில் இடம் பெற்று விட்டமைக்குத்தான் சான்றுகள் உள்ளனவே ஒழிய, அக்கால அளவில், அம்மேலைநாட்டு மொழிச் சொற்களோ, வடநாட்டுச் சொற்களோ தமிழகம் வந்து தமிழில் இடம் பெற்றமைக்கான சான்று எதுவும் இல்லை என்ற இவ்வுண்மையையும் ஏற்றுக்கொண்டுள்ளார் திருவாளர் அய்யங்கார் என்பது உறுதியாகிறது.

இவ்வுண்மைகள் வழி கொண்டால், "ஓரை" என்பது தனித் தமிழ்ச்சொல். அது, கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்கம்சென்று, அம்மொழியில், "ஹொர" என வழங்கிய அம்மொழிச் சொல், காந்தாரம் முதலாம் நாடுகள் வழியாகப் பயணம் செய்து, கி.பி, முதலாம் நூற்றாண்டில் தமிழ்நாடு வந்தடைந்து, தமிழில் "ஓரை" எனத் திரிந்து வழங்கலாயிற்று என்பது உண்மையோடு பட்டதாகாது எனக் கொள்வதே முறையாகும்.

ஆகவே, தமிழ் "ஓரை," கிரேக்க மொழி "ஹொர" என்பதன் திரிபாம் என்ற அய்யங்கார் அவர்களின் கூற்றோ, அது கொண்டு, தொல்காப்பியரைக் கி. பி. முதல் நூற்றாண்டிற்குக் கொண்டுவந்து நிறுத்தும் அவர் முடிவோ ஏற்றுக்கொள்ளத் தக்கன ஆகா.

தொல்காப்பியர், கி. பி. முதல் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்திருக்க இயலாது என்பதற்குத், திரு. சீனிவாச அய்யங்கார் கூறும் இரண்டாவது காரணம் பின்வருமாறு:-

"தொல்காப்பியப் பொருளதிகாரம் ஏழாவது இயல் 189, 190, 197 எண்ணிட்ட சூத்திரங்களில், தலைவன், தலைவியர்களின் காதல் வாழ்க்கைக்குத் துணைபுரியும் பாங்கனில், பார்ப்பனப் பாங்கனும் கூறப்பட்டுள்ளான் ஆகவே, பார்ப்பனர்கள், காதல் நெறியில் பெருந்தோழர் களாகப் பணிபுரிந்ததைத், தொல்காப்பியர் கருத்தில் கொண்டுள்ளார் எனத் தெரிகிறது. ஆனால், அது ஒரு சமஸ்கிருத நாடக மரபு."[24]

"அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை பாக்களில் பார்ப்பனர், பதினாறுக்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அங்கெல்லாம், அரிதின் பேணிப் போற்றப்பட வேண்டிய சான்றோர் என்பது போலும் வேறு நிலைகளில்தான் குறிப்பிடப்பட்டுள்ளனரே யல்லாமல், தலைவன் தலைவியர்க்குள் காதல் வாழ்க்கை யில் துணை போகும் பாங்கனாம் நிலையில் கூறப்பட்டிலர். ஆகவே, தொல்காப்பியர், இதைத் தமிழர் பழக்க வழக்கங் களை யொட்டி மேற்கொண்டாரல்லர்: சமஸ்கிருத நாடக மரபையொட்டியே மேற்கொண்டுள்ளார். ஆகவே, அவர் சமஸ்கிருத மொழியில், நாடக மரபுகள் நன்கு வளர்ந்து விட்டகாலத்திற்குச் சிறிது பிற்பட்ட காலத்திலேயே வாழ்ந் திருக்க வேண்டும்."[25]

"சமஸ்கிருத இலக்கியத்தில் நாடக மரபுக்கு வழி வகுத்தவர், அம்மொழி முதற் புலவர் 'ப்ஹாஸர்' ஆவர். அவர், கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந் திருக்க இயலாது. அச்சமஸ்கிருத நாடக மரபு, தென்னாடு அடைந்து தொல்காப்பியத்தில் இடம் பெறுமளவு, தமிழகத்தில் செல்வாக்குப் பெற, மேலும் சில நூற்றாண்டு காலம் கழிந்திருக்க வேண்டும்"[26]

இவை, திரு. அய்யங்கார் அவர்களின் வாதம்.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்; இதுவே மரபு. தமிழ்மொழி, தமிழர் வாழ்வு பற்றிய இலக்கணத்தை வகுத்தவர் தொல்காப்பியர். ஆகவே, அதில், அவர், அது எழுதுவதற்கு முற்பட்ட காலத்தில், தமிழ் மொழியில் நிலவிய, தமிழர் வாழ்க்கையில் இடம் பெற்று விட்ட மரபுகளுக்குத்தான் இலக்கண வடிவம் கொடுத்திருப்பரே யல்லாது, பிறமொழி, பிறமொழியினர், மரபுகளைக் கருத்தில் கொண்டிருப்பாரல்லர். "செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி" என்றுதான் பாயிரமும் கூறுகிறது.

பார்ப்பனப் பாங்கர்கள், தமிழகத்துத் தலைவன் தலைவியர் தம் காதல் வாழ்க்கைக்குத் துணைபுரிந்து, அது அக்காலத்துத் தமிழ்ப் பாக்களில் இடம் பெற்றிருக்க வேண்டும். அதனாலேயே, தொல்காப்பியர், அதற்கு இலக்கண வடிவம் கொடுத்திருக்கவேண்டும்.

அம்மரபு, பிற்காலத்தே வழக்கிறந்துபோக, அக்காலத்தில் எழுந்த தமிழ்ப்பாக்களில், அது இடம் பெறாது போயிருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்தே இருந்து, தொல்காப்பியரால் இலக்கண வடிவம் கொடுக்கப்பட்டுப், பின்னர் வழக்கிறந்து போனது இஃது ஒன்று மட்டுமன்று. அந்நிலைக்குத் தள்ளப்பட்டவை இன்னமும் எத்தனையோ உள்ளன. தொல்காப்பியத்திற்கு உரை கண்ட இளம் பூரணரும், நச்சினார்க்கினியாரும், அத்தகு இடங்களில், "இவ்வழக்கம் பிற்காலத்தே வழக்கிறந்தன போலும்" எனக் கூறிச் செல்வதைப் பல இடங்களில் காணலாம்.

இதைத், திருவாளர். பி. டி. எஸ். அய்யங்கார் அவர்களும் உணர்ந்துள்ளார். "தொல்காப்பியம் தனக்கு முன் இருந்த இலக்கண நூல்களுள் எதுவும் இப்போது இல்லை. தனக்கு முன், எண்ணற்ற தமிழ்ப் பாக்கள் இருந்ததை உணர்த்துகிறது. அப்பாக்களில் பெரும்பாலன, அல்லது

அறவே அழிந்து போயின. இப்போதுள்ள பழந்தமிழ்ப் பாக்களெல்லாம், தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னர்ப் பாடப்பட்டனவே. உரையாசிரியர்கள், தொல்காப்பியம் கூறும் இலக்கணத்திற்கான மேற்கோள்களை, இப்பாடல் களில் காண இயலாது, ''மேற்கோள் வந்தவழிக் கண்டு கொள்க'' எனக்கூறி விடுவதும் செய்துள்ளனர்'' என இந்நூலிலேயே[17] அவர் குறிப்பிடுதல் காண்க.

ஆக, 'பார்ப்பனப்பாங்கன் பற்றிய குறிப்பு இடம் பெற்ற பாக்கள், பண்டு பாடபெற்றிருந்தமையாலேயே தொல்காப்பியர், அதற்கு இலக்கணம் வகுத்தார். அவர் காலத்துக்கு முன்னர் வழக்கில் இருந்து, பின்னர் வழக்கிறந்து போன பலவற்றுள் இதுவும் ஒன்று ஆகலாம். ஆகவே, அது, பிற்காலப் பாக்களில் இடம் பெற்றிலது' என்று தான் கொள்ளவேண்டுமே ஒழிய, 'அது, தமிழ்ப் பாக்களில் இடம்பெறவில்லை. ஆகவே, அது தமிழர் மரபு அன்று; சமஸ்கிருத மொழியாளர் மரபு. அம்மரபு சமஸ்கிருதத்தில் வளர்ந்தது, கி, மு. 300ல். அது, தமிழகம் வந்து தமிழரிடையே செல்வாக்குப்பெற மேலும் சில நூற்றாண்டுகள் கழிந்திருக்கும். ஆகவே, அதற்குத் தம் இலக்கண நூலில் வடிவம் கொடுத்த தொல்காப்பியர், கி. பி. முதல் நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்திருக்க இயலாது' எனக் கொள்வது முறையாகாது.

பார்ப்பனப் பாங்கன் பற்றிய குறிப்பு, எட்டுத் தொகை நூல்களில் இடம்பெறவில்லை என்ற திரு. அய்யங்கார் கூற்றிலும் உண்மை இல்லை.

கணவன், பரத்தையர் தொடர்பு கொணடு ஒழுக்கம் கெட்டு அலைகின்றான் என்பதறிந்து, அவன் மீது கடுஞ்சினம் கொண்டிருப்பாள் ஒரு கற்பு நிறை மனைவிபால் சென்று, அவள் சினம் போக்கிக் கணவனை ஏற்றுக்

கொள்ளச் செய்வான் வேண்டி, அவள் பால், அவள் கணவனின் புகழ்களை அடுக்கடுக்காக எடுத்துக் கூறும் அந்தணப் பாங்கன் ஒருவன் கலித்தொகையில், காட்சி அளிக்கின்றான்;''[18] ''வெறிது நின் புகழ்களை வேண்டார் இல் எடுத்து ஏத்தும் அறிவுடை அந்தணன்'' ஆன இவன், திரு. அய்யங்கார் அவர்களின் கண்களில் பட்டிலன்.

ஆனால், தன் உள்ளம் கவர்ந்த ஒருத்தியை, அதே போல் அவள் உள்ளத்தைத் தன்பால் பறிகொடுத்துத் தவிக்கும் ஒருத்தியை அடைய மாட்டாக் காதற் பெருந் துயரால் கலங்கிக் கருத்திழந்து கடமை மறந்து கிடந்தான் ஓர் இளைஞன். அவனுக்கு ஒரு பார்ப்பனத் தோழன், பார்ப்பன குலக்கோலமாம் தண்டு கமண்டலத்தோடு காட்சி அளிப்பவன்; விரதநாட்களில் உண்ணாது இருந்து விரதம் காத்துப் பின்னரே உண்ணும் ஒழுக்க நெறியில் நிலைத்து நிற்பவன். எழுதப்படாதது என்ற பெருமைக்கு உரியதான நால்வேதங்களைமுறையாகக் கற்றுணர்ந்தவன்.

அவன், தன் நண்பன் காதல் நோயால் கருத்திழந்து கடமை மறந்து கிடப்பது காணப்பொறாது அவனுக்குச் சிலபல அறிவுரைகளை வழங்கினான். ஆனால், காதல் மயக்கத்தில் ஆழ்ந்து பேரய்விட்ட இளைஞன், பார்ப்பன நண்பனின் அறிவுரையினை ஏற்க மறுக்கும் முகத்தான் நால்வேதம் கற்ற அவன் அறிவுத் திறனைப் பாராட்டி விட்டு, ''நண்பனே! நீ இவ்வாறெல்லாம் எனக்கு அறிவுரை கூறுவதை விடுத்து, நீ கற்ற அந்த வேதத்தில், என்னையும், என் காதலியையும் போலப் பிரிந்து துயருற்றுக் கிடக்கும் இளம் காதலர்களை ஒன்று படுத்தும் திறம் வாய்ந்த மாமருந்து ஏதேனும், இருப்பின், அது அறிந்து தெரி வித்து, நாங்கள் இருவரும் ஒன்றுபடத் துணைபுரிவாயாக; அதுவே நண்பனுக்குச் செய்யக் கூடிய நல்ல துணை'' எனக் கூறியதான கருத்தமைந்த பாடல் ஒன்று குறுந்தொகையில் உள்ளது.

''பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே!
செம்பூ முருக்கின் நல்நார் களைந்து
தண்டொடு பிடித்த, தாழ்க மண்டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே!
எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ? மயலோ இதுவே'' [29]

இப்பாடலில் உலாவரும் அப் பார்ப்பனப்பாங்கனைத் திருவாளர் பி. டி. எஸ். அவர்கள் பார்த்துள்ளார். தம் முடைய நூலில், அவனைப் படம் பிடித்தும் காட்டியுள் ளார். ஆனால், அப்பாட்டின் கருப்பொருள், இடித்துரைத்த பார்ப்பனப்பாங்கனின் அறிவுரையினை ஏற்க மறுத்து மாறாகத், தன் காதல் கைகூடத் துணை நிற்குமாறு தலைவன் வேண்டுவதே ஆகவும், திரு. அய்யங்கார் அவர் கள், அதை அக்கருத்தோடு நோக்காது அது மணமாகாத பல்கலைவல்ல, ஒரு பார்ப்பன இளைஞனைப் படம் பிடித் துக் காட்டுகிறதேயல்லாது, காதலுக்குத் துணைபோகும் பாங்கன் பணி குறித்து எதுவும் காட்டவில்லை எனக் கூறித் தட்டிக் கழித்துவிட்டுள்ளார். இது, அவர் கருத்துக் குற்றமே அல்லது வேறு அன்று. [30]

''தொல்காப்பியர். கி. பி. முதல் நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்திருக்க இயலாது என்பதற்கான சான்று களை, மேலே கூறியவாறெல்லாம் காட்ட முயன்றிருக்கும் திருவாளர். பி. டி. சீனிவாச அய்யங்கார், தொல்காப்பியர், கி. மு. ஏழாம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவராவர் எனக் கூறப்படும் ஒரு கருத்து நிலவுவதை அறிந்திருந்தும், அதை மறுத்து ஒரு சொல்லும் கூறினாரல்லர்.

''பெரும்பாலான ஐரோப்பிய திறனாய்வாளர்கள் பாணினி, கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்

என்ற தப்பான கொள்கையிலிருந்து விடுபட்டிலர். திருவாளர்கள். கோல்டுஸ்டக்கர், அவர்களும், ஆர். வி. பந்தார்கார் அவர்களும், அவருடைய காலம், கி. மு. ஏழாம் நூற்றாண்டு என்பதற்கான எண்ணற்ற சான்றுகளைக் கொடுத்துள்ளனர்'' [31]

''கி. மு. ஏழாம் நூற்றாண்டில் புகழ் பெற்றிருந்தவராக நான் கருதும் பாணினி, நர்மதை ஆற்றிற்குத் தெற்கில் உள்ள நாடு எதையும் குறிப்பிடவில்லை'' [32]

''பாணினிக்குச் சில நூற்றாண்டுகள் கழித்து, பெரும்பாலும் கி. மு. நான்காம் நூற்றாண்டில் காத்தியாயனர் வாழ்ந்திருந்தார். [33]

மேலே கூறியிருப்பன அனைத்தும், திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின் கருத்துகளாம். இவ்வாறெல்லாம் கூறுவதன் மூலம், பாணினி, கி. மு. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதே தம் கொள்கையாம் என்பதை உறுதி செய்துள்ளார் திருவாளர் அய்யங்கார் அவர்கள்.

திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்காருக்கு முற்பட்டவரும், அவருடைய 'தமிழர் வரலாறு' (History of the Tamils) என்ற நூலுக்கு முற்பட்டதான தமிழ் ஆராய்ச்சி' (Tamil Studies) என்ற நூலின் ஆசிரியரும் ஆகிய, திருவாளர் எம். சீனிவாச அய்யங்கார் அவர்கள், தொல்காப்பியர், கி. மு. 350க்கும் முற்பட்ட காலத்தவராவர் எனக் கூறி, அதை உறுதி செய்யும் இரண்டு வலுவான சான்றுகளைக் கொடுத்துள்ளார்.

''தொல்காப்பியப் பாயிரம், 'தொல்காப்பியர் இந்திரன் இயற்றிய ஐந்திரம் என்ற இலக்கண நூலை அறிந்தவர்; அதை முதல் நூலாகக் கொண்டு தம் தொல்

காப்பியத்தை இயற்றியவர்' எனக் கூறுகிறது. ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'' என்பது பாயிரம். சமஸ்கிருத இலக்கணத்திற்கு முழு முதல் நூலாகக் கருதப்படுவதும், ஊழிக்கால அளவை உறுதி செய்யத் துணைபுரிவதுமாகிய பாணினியின் இலக்கண நூல் இருக்கும்போது, தொல்காப்பியர் அதைப் பயின்று, தாம் இயற்றிய தமிழ் இலக்கணத்திற்கு, அதை முதல் நூலாகக் கொள்ளாதது ஏன்? என்ற கேள்விக்குத், தொல்காப்பியர் காலந்துத் தென்னாட்டு இந்துக்களுக்குப் பாணினி, அறிமுகம் ஆகாதிருந்திருக்க வேண்டுமென்பது உண்மையானாலல்லது, விடை காண்பது இயலாது. தம்முடைய இலக்கண நூலில், பாணினி, குறிப்பிடும் முன்னோர்கள் அறுபத்து நால்வரில் இந்திரனும் ஒருவர். ஆகவே, அவ்விந்திரன், பாணினிக்கு முற்பட்ட காலத்தே வாழ்ந்தவராதல் வேண்டும். அவ்வகையால், தம்முடைய தொல்காப்பியத்திற்கு, முதல் நூலாகப் பாணினியத்தைக் கொள்ளாது, அப்பாணினிக்கு முற்பட்டவராய இந்திரன் இயற்றிய ஐந்திரத்தைக் கொள்ளும் தொல்காப்பியர், பாணினிக்கு உரிய காலமாகச், சிறந்த வரலாற்றுப் பேராசிரியர்களால் வகுக்கப்பட்ட கி. மு. 350க்கு முன்னர் வாழ்ந்த வராதல் வேண்டும்''[35] என்று கூறுகிறார் திருவாளர் எம். சீனிவாச அய்யங்கார். இது ஒரு காரணம்.

''லளஃகான் முன்னர் யலவும் தோன்றும்''-1:24
(தொல்-எழுத்து. 24)

''ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே''—1;27
(தொல்-எழுத்து:27)

''மஃகான் புள்ளி முன் வவ்வும் தோன்றும்''—1;28
(தொல்-எழுத்து:28)

என்ற சூத்திரங்களிலிருந்து, தொல்காப்பியர் காலத்தில் 'ல்ய, ள்ய், ஞ்ய: ந்ய, ம்ய, வ்ய. ம்வ' என்பன போலும் மெய்ம் மயக்கங்களை இடையில் கொண்ட சொற்கள் வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது, அச்சூத்திரங்களுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், "இங்ஙனம் ஆசிரியர் சூத்திரம் செய்தலின் அக்காலத்து ஒரு மொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்றாம், அவை இக்காலத்து இறந்தன' எனக் கூறியுள்ளார். இவை போலும் சொல் எதுவும், இன்றைய தமிழ் இலக்கியங்களில் இடம் பெறவில்லை.

கி. பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததான திருக்குறளிலும், அவை இடம் பெற்றில. ஆகவே, அத்தகைய சொல்லாட்சி, திருக்குறள் காலத்துக்குக் குறைந்தது, 300 ஆண்டுகளுக்கு முன்னரே வழக்கில் இருந்திருக்க வேண்டும், இக்காரணங்களால், தொல்காப்பியர், கி. மு. 350க்கு முற்பட்ட காலத்திலேயே வாழ்ந்திருக்கவேண்டும்''[35] என்றும் கூறியுள்ளார். இது அவர் காட்டும் இரண்டாவது காரணம்.

திருவாளர். எம். சீனிவாச அய்யங்காரவர்களின் இந்நூலைத் திருவாளர். பி.டி. சீனிவாச அய்யங்காரவர்கள் பார்த்துப் படித்துள்ளார். அதிலிருந்து சில பகுதிகளைத் தம்முடைய நூலில் மேற்கோளாகவும் காட்டியுள்ளார். திருவாளர், எம். சீனிவாச அய்யங்சார், அவருடைய தமிழ் ஆராய்ச்சி (Tamil Studies) என்ற நூலின் 287ஆம் பக்கத்தில் மணக்கிள்ளி குறித்துக்கூறியிருப்பதை ஏற்றுத் தம்முடைய தமிழர் வரலாறு (History of The Tamils) என்ற நூலின் 5 12ஆம் பக்கத்தில், "மணக்கிள்ளியை, நெடுஞ்சேரலாதனின் உடன் பிறந்தாள் கணவனாகக் கொண்டு, அவிழ்க்க இயலா முடியைத், தைரியமாக அவிழ்க்க முயன்றுள்ளார், திரு. எம். சீனிவாச அய்யங்கார்''[36] எனக் கூறியிருப்பது காண்க.

திறனாய்வு நிலையில், ஒரு பொருள் பற்றி, ஒருவர், ஒரு முடிவினை நிலைநாட்ட முயலும்போது, அதற்குத் துணை நிற்கும் சான்றுகளை அடுக்கடுக்காக எடுத்து வைப்பதைக் காட்டிலும், அம்முடிவுக்கு மாறாக எடுத்து வைக்கப்படும் சான்றுகளைத் தக்க காரணம் காட்டி மறுக்க வேண்டியது தலையாய கடமையாகும். தருக்க முறையில், இதைப், 'பிறன்கோள் மறுத்துத் தன்கோள் நிறுவுதல்' என்ப.

தொல்காப்பியர், கி. பி. முதல் நூற்றாண்டிற்கு முற்பட்டவராகார் என்பதை நிலைநாட்ட முயலும் திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள், தொல்காப்பியர், கி. மு. 350க்கு முற்பட்டராவர் என்பதை நிலைநாட்ட, திரு. எம். சீனிவாச அய்யங்காரவர்கள் எடுத்து வைக்கும், மேலே கூறிய வலுவான இரு சான்று களை மறுக்கவில்லை. திரு. எம். எஸ். அவர்கள் அம்முடிவு கொண்டுள்ளார் என்பதை அறிந்திருந்தும் அதை மறுக்காமை மட்டுமன்று; அவ்வாறு ஒரு கருத்து நிலவு கிறது என்றுதானும் குறிப்பிடவில்லை. அதை மறுப்பதற் கான காரணத்தைத் திரு. பி. டி. எஸ். அவர்களால் காண இயலவில்லை என்பதே அதற்குப் பொருளாம்.

தொல்காப்பியரைக், கி. பி. முதல் நூற்றாண்டிலேயே நிறுத்த, திரு. பி. டி. எஸ். அவர்கள் தேடிப் பிடித்த, தமிழ் "ஓரை"யும் அவர்க்குத் துணை புரியவில்லை; தலைவன் தலைவியர்தம் காதல் வாழ்க்கைக்குத் துணை போகும் பார்ப்பனப் பாங்கனும், திரு. பி. டி. எஸ். அவர்களைக் கைவிட்டு விட்டான். தொல்காப்பியர், கி. மு. 350க்கு முற்பட்டவர் என்ற எம். எஸ். அவர்களின் வாதத்தின் முன் நிற்கவும் மாட்டாது தலைமறைவாகி விட்டார் திரு. பி. டி. எஸ்.

## சான்றெண் விளக்கம்

1. டாக்டர். சி. ஈ, இராமச்சந்திரன், "அடிப்படைச் சான்றுகள் - 1", தமிழ் நாட்டு வரலாறு - சங்க காலம் - அரசர்கள், தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983, பக்கம்-2.
2. மேலது. பக்-3
3. மேலது. பக்-4
4. மேலது. பக்-6
5. மேலது. பக்-6
6. பொன். சுப்பிரமணியம், "காலக் கணிப்பு," தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம் -அரசர்கள்; தமிழ் வளர்ச்சி இயக்ககம். 1983. பக்-131.
7. மேலது. பக்-131.
8. மயிலை. சீனி. வேங்கடசாமி, "சேர்மூர்", தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசர்கள், தமிழ் வளர்ச்சி இயக்ககம். 1983, பக்-256
9. **P. T. Srinivasa Iyengar, History of the Tamils, AES, 1982, P-216**
10. புலவர். கா. கோவிந்தன், தமிழர் வரலாறு-முதல் பகுதி. கழகம், 1989. பக். 131-151
11. **P. T. Srinivasa Iyengar, op.cit., P-70**
12. **Ibid. P-216**
13. தொல். பொருள். களவு. 44

14. P. T. Srinivasa Iyengar. op. cit. P. 216
15. புலவர். கா. கோவிந்தன்; முன்னூல், பக். 133
16. P. T. Srinivasa Iyengar, op cit. pp 202-204
17. Ibid pp 193-194
18. Ibid pp 129-130
19. Ibid. pp 38-39
20. Ibid Introduction. P vii (57)
21. Ibid. P-22
22. Ibid P-23
23. Ibid. P-24
24. Ibid. P-217
25. Ibid. PP 217-218
26. Ibid. P. 218
27. Ibid P. 70
28. கலி. மருதக்கலி. 7;17-18
29. குறுந். 156
30. P. T. Srinivasa Iyengar, op. cit. P. 218
31. Ibid. P. 116
32. Ibid. P. 123
33. Ibid P. 135
34. M. Srinivasa Iyengar, Tamil Studies, P. 117
35. Ibid. pp. 117-118
36. P. T. Srinivasa Iyengar, op. cit. p. 512

# 7. பிட்டங் கொற்றன், குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவனால், வென்று காயப்படுத்தப்பட்டானா?

பிட்டங் கொற்றனைப் பாடிய புலவர்களில், அகநானூற்றில் பாடிய புலவர்கள், மருதன் இளநாகனார்[1], ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்[2], ஆகிய இருவரும், அவன், வானவன்—படைத்தலைவன் என்பதையும், அவன் பெயர் பிட்டன் என்பதையும் உணர்த்தியுள்ளனர்.

பின்னவர் மட்டும், அவன் குதிரை மலைக்கு உரியவன் என்பதையும் உணர்த்தியுள்ளார். அத்துடன் 'அவன் வாட்போர் என்றும் பொய்த்துப் போவது இல்லை; பரிசில் விரும்பி வருவார்க்கு, அவர் விரும்பும் அணிகள் பல அளிப்பன்' என அவன் கொற்றம் கொடைகளையும் கூறியுள்ளார்.[3]

முன்னவர், அவன் வானவன் மறவன்-என்பதையும், அவன் பெயர் பிட்டன் என்பதையும் உணர்த்தியதோடு, 'அவன் கையில் எப்போதும் வலைக்கப்பட்ட விற்படையும் பகை மன்னர்களை அழிக்கவல்ல திருந்திய வேற்படையும் இருக்கும்' என, அவன் கொற்றத்தையும் பாடியுள்ளார்.[4]

புறநானூற்றில் பிட்டனைப் பாடிய புலவர்கள், காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்[5], உறையூர் மருத்துவன் தாமோதரனார்,[6] வடம வண்ணக்கண் தாமோதரனார்,[7] கருவூர்க் கந்தப்பிள்ளை,[8] ஆகிய நால்வர் ஆவர்.

அவர்களில், காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், தம்முடைய புறம் 169வது பாட்டில், 'பகைவர் மீது படை எடுத்துச் செல்லும் போதும், படையின் முன் வரிசையில் நிற்பன். பகைப்படைத் தன்னைத் தாக்க வரும் போதும், படையின் முன் வரிசையில் நிற்பன்; படைப் பயிற்சி பெறுவார் எறியும் அம்புகளாலும், வேல்களாலும் பலமுறை தாக்குண்டும் நிலை குலைந்து போகா, முருக்க மரத்தால் செய்யப்பட்ட கம்பமாகிய இலக்கு போல, பகைப் படை எறியும், அம்புகளாலும், வேல்களாலும் தாக்குறினும் நிலைகுலையாதவன்' என அவன் கொற்றத்தை விளங்கப் பாராட்டியுள்ளார்.

எனினும் அவன் பெயரைக் குறிப்பிடவில்லை. புறம் 169ன் கொளுவில் மட்டுமே அவன் பெயர் பிட்டங் கொற்றன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புறப் 171, பாட்டில், 'அவன் தீன் பால் பரிசில் வேண்டி இரப்பார் பல முறைவரினும், அவர் விரும்புவன அனைத்தையும் அளிப்பன்; ஆகவே, அவன் காலில் முள்ளும் தைத்தல் கூடாது. பரிசிலர் வாழ, அவன் என்றும் வாழ்வனாக, என அவன் கொடை நலத்தைப் பாடியுள்ளார். இப்பாட்டிலும், அவன் பெயரை மூலத்தால் அன்றிக் கொளுவால் மட்டும் அறிய முடிகிறது.

உறையூர் மருத்துவன் தாமோதரனார், 'அவன் மலை நாடாண்டவன். அவன் பெயர் குட்டன்; அவன், பரிசிலர்க்கு எளியவனே அல்லது, பகைவர் எவ்வளவு பெரிய படை கொண்டு எத்துணை முறை வந்து தாக்கினும், கொல்லன் உலைக்களத்தில், சம்மட்டி எத்துணை வலுவாக, எத்தனை முறை தாக்கினும் நிலை குலைந்து போகாப் பட்டடைக் கல் போலும் திண்ணியன்' என அவன் கொடை வளம், கொற்றவன்மைகளைப் பாராட்டியதோடு, "அவனை அஞ்சுகாதீர்கள்" எனை அவன் பகைவர்களை எச்சரித்தும் உள்ளார்.[9]

வடம வண்ணக்கன் தாமோதரனார், 'அவன் பெயர் பிட்டன்; அவன் தலைவன் கோதை. பிட்டன், அமர் பல வென்ற வேல் உடையான். சிறந்த கொடையாளி; அதே போல் அவன் தலைவன் கோதையும் அவனே போன்றவன்; அவர்கள் இருவரும் பகைவர்களை வென்று கொண்டு வரும் பொருட்களை அளிப்பதால்தான் இரவலர், உலைகள் கொதிப்பதில் ஒய்வு கொள்வதில்லை; விறலியர் அணிகள் பூண்டு கொள்கின்றனர்: ஆகவே, பிட்டன், கோதை, அவன் பகைவர், ஆகிய அனைவரும் வாழ்வாராக என வாழ்த்தியுள்ளார்.[10]

கருவூர்க் கந்தப்பிள்ளை, பிட்டன் பெயரைக் குறிப்பிடாமல், 'அவன் குதிரை மலைக்கு உரியவன்; என்பதை மட்டும் குறிப்பிட்டு விட்டு, அவன் கொடைவளம், அவன் நாட்டு மக்கள் கொடை விளங்கப் பாடியுள்ளார். அத்துடன் வடித்துக் கூராக்கப் பெற்ற அம்புகளைக் கொண்ட அவன் விற்படைப் பெருமையையும் பாராட்டியுள்ளார்.[11]

புறநானூற்றுப் பாடல்கள் ஐந்தின் கொளுவிலும் அவன் பெயர் '**பிட்டங் கொற்றன்**' என்பது மறவாமல் கூறப்பட்டுள்ளது.

ஆக, இப்பாக்களால், அறியப்படும் அவன் வரலாறு; 'அவன் பெயர் பிட்டங் கொற்றன்; அவன் ஆண்டது குதிரை மலை நாடு; அவன் சேரர் படைத்தலைவன், எவராலும் வெல்ல மாட்டா வன்மையாளன்; வையகம் போற்றும் வள்ளல் பெருந்தகை' என்ற இவை மட்டுமே.

ஆனால், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவினரால் தொகுக்கப்பெற்று, தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்காக, தமிழ்நாடு அரசு வெளியீடாக, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983ல் வெளியிட்ட, ''**தமிழ்நாட்டு வரலாறு சங்க காலம்—அரசியல்** என்ற நூலில், '**சோழர்**' வரலாறு

எழுதியுள்ள ஆய்வாளர் **மயிலை—சீனி—வேங்கடசாமி** அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில், '**கிள்ளி வளவன்-2 (குராப்பள்ளித் துஞ்சியவன்)** என்ற தலைப்பின் கீழ், "கொங்கு நாட்டிலிருந்த கருவூரை குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் தாக்கினான். போரில் பிட்டை (பிட்டன்) என்பவன் படுகாயமடைந்தான்...கருவூரில் தாக்கப்பட்ட அரசன் யார் என்பதற்கு வெளிப்படையான சான்று இல்லை என்றாலும், உறுதிமிக்க சான்று உள்ளது. அது பிட்டன் போரில் காயப்பட்டான் என்று குறிப்பிடப் படுவதே ஆகும். பிட்டன் வானவனின் படைத் தலைவன்... எனவே பிட்டன் போரிட்ட போது கருவூரில் இருந்த அரசன் மாந்தரஞ்சேரல் என்பது பெறப்படுகிறது...[11] **கிள்ளிவளவன் —1. (குளமுற்றத்துத் துஞ்சியவன்)** கருவூரைத் தாக்கிய போது வானவன் (மாந்தரஞ் சேரல் இரும்பொறை) கோட்டைக் கதவை அடைத்துக் கொண்டு உள்ளேயே இருந்தான். அடைத்துக் கொண்டு உள்ளே இருக்கும் அரசனோடு போர் புரிவது அழகன்று என்று புலவரால் அறிவுறுத்தப்பட்ட சோழன் முற்றுகையைக் கைவிட்டான்.

எனினும், வானவன் கருவூர்க் கோட்டைக்குள் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை. தன் படைத் தலைவன் பிட்டனிடம் கருவூரை ஒப்படைத்துவிட்டு, பாழி நகருக்குச் சென்று தங்கி பெரும் படை ஒன்றைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். நிலைமை அறிந்த கிள்ளிவளவன்—1 அவனைப் பாழிநகரிலே தாக்கினான்; பாழிக் கோட்டையை அழித்தான். மாந்தரஞ் சேரல் தன் மற்றொரு கோட்டையான வஞ்சிமுற்றக் கோட்டைக்குத் தப்பிவிட்டான்.

கிள்ளிவளவன்-1 (குளமுற்றத்துத் துஞ்சியவன்) பாழிக் கோட்டையைத் தாக்கிக் கொண்டிருந்தபோது கருவூரில் அப்போரின் எதிரொலியாக மற்றொரு போர் மூண்டது. அந்தப் போர் பிட்டனுக்கும், கிள்ளி வளவன்-2 (குராப் பள்ளித் துஞ்சியவன்) என்பவனுக்கும் இடையே நடை

பெற்றது. கிள்ளி வளவன்-2, பிட்டனைப் படுகாயம் அடையும்படி செய்தான்.

பாழியிலிருந்து தப்பி வந்த மாந்தரஞ் சேரல் வஞ்சி முற்றக் கோட்டையில் இருந்தபோது கிள்ளிவளவன்-1 கிள்ளி வளவன்-2 ஆகிய இருவரும் தாக்கினர். மாந்தரஞ் சேரல் கொல்லப்பட்டான்"[13]— என்றெல்லாம் கூறப் பட்டுள்ளன.

இதற்கெல்லாம் ஏதேனும் அகச்சான்று காட்டப் பட்டுளதா என்றால் இல்லை. காட்டப்பட்ட புறநானூற்றுப் பாடல்கள் **புறம்-58; புறம்-373** ஆகிய இரண்டு மட்டுமே.

**புறம்:58** காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனாரால் பாடப்பெற்றது. அதில் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனும், பாண்டியன் வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் பகைமறந்து நட்பு கொண்டிருந்தது கண்டு பாராட்டியுள்ளார். இவர், புறநானூற்றுப் பாடல்கள் இரண்டில்,[14] பிட்டங் கொற்றனைப் பாடியவர். அவற்றில், 'அவனைப் 'பகைவரால் அழிக்கப்படாதவன்; பகைப்படை தாக்குதல்களால் நிலைகுலைந்து போகாத வன்; உலகம் போற்றும் உயர்பெரும் கொடையாளி; ஆகவே, அவன் காலில் முள் குத்தினும் எம்மால் தாங்கிக் கொள்ள முடியாது' என அவன் கொற்றங் கொடை களையே பாராட்டியுள்ளார்.

ஆய்வாளர். மயிலை-சீனி-வேங்கடசாமி அவர்கள் கூறியிருப்பது போல், பிட்டங் கொற்றன், கருவூர்க்குப் படைத் தலைமை பூண்டு, குராப்பள்ளித் துஞ்சியவனால் படுகாயப்பட்டிருந்தால், 'பிட்டன் காலில் முள்ளும் தைக்கா திருக்குமாக' என வேண்டிக்கொள்ளும் புலவர், அவன் படுகாயம் பட்டதற்குக் கண்ணீர் சொரிந்து கலங்கியன்றோ இருப்பர்; ஆனால், அது அவர் செய்யவில்லை; ஆகவே, அகச்சான்று எதுவும் இன்றிக் கூறப்பட்ட அச்செய்தி நடவாத ஒன்று என்பதே உறுதி.

கூறப்பட்டிருக்கும் மற்றொரு அகச்சான்று; **புறம் : 373** அது, குராப்பள்ளித் துஞ்சியான் கருவூரை வெற்றி கொண்டதைப்பாராட்டிக் கோவூர் கிழார் பாடியது. அதில், கருவூர், கொளுவில்தான் இடம் பெற்றுளது. மூலத்தில் குராப்பள்ளியான் கொங்கு நாட்டை வென்றதையும்;[15] வஞ்சியை வென்றதையும்[16] கூறியுள்ளாரே அன்றி, அவன், கருவூரை வென்றதைக் கூறவில்லை. அப்பாடலில் வந்திருக்கும்,

"...பிட்டை ஊறு உவப்ப
மைந்தர் ஆடிய மயங்கு பெருந்தானை"[17]

என்ற தொடரில், இடம் பெற்றிருக்கும் பொருள் தெளிவில்லா **"பிட்டை"** என்ற சொல் ஒன்றைக் கொண்டே அவ்வளவு கற்பனைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

கோவூர் கிழாரை அறிந்தவர்கள், அவர் போர் தொடுத்து நிற்கும் அரசர்கள் பால் மாறி மாறிச் சென்று, பகை மறந்து, போரைக் கைவிடுங்கள் என அறிவுரை வழங்கும், 'போர் ஒழிக்கும்' புலவரே அல்லது, போரை ஊக்குவிக்கும் புலவர் அல்லர் என்பதையும்; தம் பாட்டுடைத் தலைவர்கள் பெயரைத் தெளிவாக உணர்த்த வல்லவரே அல்லது, தெளிவிலாச் சொல் ஒன்றால் குறிப்பிடுபவர் அல்லர் என்பதையும், கொடையாளிகளைப் பாராட்டும் பேருள்ளமும், அக்கொடையாளிகள் இறந்து விட்டால், கண்ணீர் விட்டுக் கலங்கும் இரக்க உள்ளமும் உடையவரே அல்லது, பிட்டனைப் போன்ற கொடையாளியின் தோல்விக்குப் பாராட்டு வழங்க வல்ல பண்பு கெட்டவர் அல்லர் என்பதையும் அறிவர். ஆகவே அவர் பாட்டில் வந்திருக்கும் அவ்வொரு சொல் கொண்டு, கூறப்பட்டவை அனைத்தும் கற்பனை அல்லது வரலாற்றோடுபட்ட உண்மை அன்று என்பதை உணர்க.

மேலும், வஞ்சிப் போரில் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனோடு போரிட்டவன், திருவாளர், மயிலை.

சீனி. வேங்கடசாமி அவர்கள் கூறுமாறு,[18] மாந்தரஞ்சேரல் இரும்பொறை அன்று; இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆவன். இதை மாறோக்கத்து நப்பசலையார் பாடிய புறப்பாட்டொன்று[19] உறுதி செய்கிறது.
அப்பாட்டு இது.

"இமயம் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டும் நின்
பீடுகெழு நோன்தாள்"

இப்பாட்டில், "தொலைய" என்ற சொல் வந்திருப்பினும், அது இறந்து போக என்னும் பொருள் தருவதாகாது. "தோற்க" என்றே பொருள் தரும்: சேரமான் மாந்தரம் சேரல் இரும்பொறையும், சோழன் இராச சூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் பொருதவழிச் சேரனுக்குத் துணையாகப் போரிட்ட தேர்வண் மலையனைப் பாராட்டி வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடிய பாட்டில்,[20]

"...வென்றோனும் நின்கூறும்மே
.......................................
வெலீ இயோன் இவன். என
.......................................
தோற்றோன் தானும் நிற்கூறும்மே
தொலை இயோன் இவன்..."

என வரும் தொடரில் இடம் பெற்றிருக்கும் "தொலை இயோன்" என்ற சொல், தோல்வியுறச் செய்தவன் என்ற பொருள் தருவதல்லது, இறக்கச் செய்தவன் என்ற பொருள் தராமை உணர்க.

மேலும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், இறந்தது, சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியோடு, திருப்போர்ப்புறம் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் என்பதே உண்மை: பரணரும்,[21] கழாத்தலையாரும்[22] பாடிய புறநானூற்றுப் பாடல்களைக் காண்க.

மேலும், வஞ்சிப் போரில் பங்கு கொண்டவன் குளமுற்றத்தான் என்று மட்டும்தான் கூறப்பட்டுளதே அன்றி, அப்போரில், அவனுக்குத் துணையாகக் குராப் பள்ளியானும் சென்றான் என்பது குறிப்பிடப்படவில்லை.

ஆக, இவ்வுண்மைகளாலும், அந்நூலில்[28] பிட்டங் கொற்றனைப் பற்றிக் கூறப்பட்டன எல்லாம், வரலாற்று உண்மைகளுக்கு அப்பாற்பட்ட, பொருந்தாக் கூற்றுக்களாம் என்பது உறுதிசெய்யப்பட்டது.

## சான்றெண் விளக்கம்

1. அகம் 77
2. மேலது. 143
3. ''வானவன் மறவன்
   நசையின் வாழ்நர்க்கு நன்கலம் சுரக்கும்
   பொய்யா வாய்வாள் புனைகழல் பிட்டன்
   மைதவழ் உயர்சிமைக் குதிரைக் கவாஅன்''
   -அகம் 143.
4. ''வானவன் மறவன், வணங்கு வில் தடக்கை.
   ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்
   பொருந்தா மன்னர் அரும்சமத்து உயர்ந்த
   திருந்நிலை எஃகம்''
   -அகம்-77,
5. புறம்-169, 171
6. மேலது-170
7. மேலது-172
8. மேலது-168
9. ''மலைகெழு நாடன் கூர்வேல் பிட்டன்
   குறுகல் ஓம்புமின் தெவ்விர்; அவனே
   ... ... ... ... ... ... ... ...
   நசைவர்க்கு மென்மை அல்லது பகைவர்க்கு,
   இரும்பு பயன் படுக்கும் கருங்கைக் கொல்லன்
   உலைக்கல் அல்ல வல்லாளன்''
   -புறம்-170.

10. ஏற்றுக உலையே; ஆக்குக சோறே;
பாடுவல் விறலியர் கோதையிம் புனைக்
... ... ... ... ... ... ... ...
வன்புல நாடன் வயமான் பிட்டன்
ஆரமர் கடக்கும் வேலும், அவன் இறை,
மாவள் ஈகைக் கோதையும்
மாறுகொள் மன்னரும் வாழியர் நெடிதே!''
-புறம்-172.

11. ''ஊராக் குதிரைக் கிழவ[ கூர்வேள்
... ... ... ... ... ... ... ... ...
வடிநவில் அம்பின் வில்லோர் பெரும''
-புறம்-168.

12. மயிலை. சீனி. வேங்கடசாமி, ''சோழர்'', தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல், தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983, பக்-138

13. மேலது. பக். 139

14. புறம்: 169, 171

15. ''கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே''
-புறம். 373

16. ''வஞ்சி முற்றம் வயக் களனாக
அஞ்சா மறவர் ஆட் போர் பழித்துக்
கொண்டனை பெரும...''
-புறம். 373

17. மேலது. 373

18. மயிலை. சீனி. வேங்கடசாமி, முன்னூல், பக். 139

19. புறம். 39

20. மேலது. 125

21. மேலது. 63, 369

22. மேலது. 62

23. மயிலை. சீனி வேங்கடசாமி, முன்னூல், பக். 138-139

# 8. ''கேள்வி'' என்ற சொல், தன்னளவில் இசை எனும் பொருள் தருமா?

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவினரால் தொகுக்கப் பெற்று, தமிழ்நாட்டு அரசு வெளியீடாக, தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்காக, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1983ல் வெளியிட்ட ''**தமிழ்நாட்டு வரலாறு - சங்க காலம் அரசியல்** என்ற நூலில் '**காலக் கணிப்பு**' என்ற இயலில்,[1] ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ள ஆய்வாளர் '**சங்கம் இருந் தமைக்கான அகச் சான்றுகள்**' என்ற தலைப்பின்கீழ்,

''ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை''

என்ற தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழி யன் பாடிய புறப்பாடலைக் குறிப்பிட்டு,[2] ''இந்தப் பாட லில் புலவர்கள் பாடினார்கள் என்று குறிப்பிடப் படுவது, தமிழை வளர்த்த சங்கத்தை குறிக்கிறது என்பதை உணர லாம். இது போலவே தமிழின் இலக்கணப் பாங்கை ஆராய்ந்த சங்கங்களும், இசைத் தமிழை ஆராய்ந்த சங்கங் களும் இருந்தன என்பதை உணர்த்தும் சான்றுகளும் உள் ளன'' என்று கூறியுள்ளார்.[3]

அடுத்து, ''மேலே நாம் கண்ட சான்றில்,[4] சங்கத்தின் தலைமைப் புலவரான மாங்குடி மருதன், 'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி'' என்னும் அடைமொழி கொடுத்துச் சிறப் பித்துக் கூறப்பட்டுள்ளார். 'உயர்ந்த கேள்வி' என்பதற்கு

22 கேள்விகவ் (சுருதிகள்) கொண்ட இசைப்பாங்கு என்று அறிஞர்கள் விளக்கம் கண்டுள்ளனர்.[5] இந்த வகையில் மாங்குடி மருதன் இசையில் சிறந்து விளங்கினார் என்பது பெறப்படுகிறது''[6] என்றும்; ''இந்த மாங்குடி மருதனார் நாம் முன்பு குறிப்பிட்ட தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைச் சிறப்பித்துப் பாடு கையில்' பெரியகற்று இசை விளக்கி'[7] என்றும் குறிப்பிட்டுள்ளார். பாண்டிய அரசன் இந்தப் புலவரை 'இசையில் வல்லவர்' என்று குறிப்பிட்டிருப்பதையும், இந்தப் புலவர் பாண்டிய அரசனை 'இசை விளங்கும்படி செய்தான்' என்று குறிப்பிட்டிருப்பதையும் எண்ணிப் பார்க்கும்போது, இசைத் தமிழ் வளர்க்கப்பட்டதைத் தெளிவாக உணர முடிகிறது. இந்த வகையில் பாண்டியனது சங்கத்தில் இசைத் தமிழும் வளர்க்கப்பட்டது என்று நாம் கொள்ளலாம்'' எனவும் தம் முடிவுகளை அறிவித்துள்ளார்.[8]

'கேள்வி' என்ற சொல், தன்னளவில் 'இசை' எனும் பொருள் தருமா? இதற்கு விளக்கம் காண, 'கேள்வி' என்ற சொல் இடம் பெற்றுள்ள இலக்கியத் தொடர்கள் சிலவற்றைக் காண்போம்.

1. ''ஆறு எழுத்து அடுக்கிய அருமறைக் **கேள்வி**''[9]
2. ''வேய்வை போகிய விரல் உளர் நரம்பின்
 **கேள்வி** போகிய நீள்விசித் தொடையன்''[10]
3. ''அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்குபுரி நரம்பின்
 பாடுதுறை முற்றிய பயன்தெரி **கேள்வி**''[11]
4. ''புரி அடங்கு நரம்பின்
 தொடையமை **கேள்வி** இடவயின் தழீஇ''[12]
5. ''**கேள்வி** அந்தணர்''[13]
6. ''சொல், பெயர். நாட்டம், **கேள்வி**, நெஞ்சம்
 ஐந்துடன் போற்றி''[14] [என்று

7. "உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தணர்"[15]

8. "வேள்வியிற் கடவுள் அருத்தினை; கேள்வி
உயர்நிலை உலகத்து ஐயர் இன்புறுத்தினை"[16]

9. "கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது
வேள்வி வேட்டனை"[17]

10. "உயர்ந்தோர் ஆய்ந்த
கெடுவுள் கேள்வியுள் நடுவாகுதலும்"[18]

11. "விரிந்து அகன்ற கேள்வி,"[19]

12. "வெறுத்த கேள்வி விளங்குபுகழ் கபிலன்"[20]

13. "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன்"[21]

14. "சில சொல்லால் பல கேள்வியர்"[22]

15. "கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்"[23]

16. "கேள்வி மலிந்த வேள்வித் தூண்"[24]

17. "பல் கேள்வித் துறை போகிய
தொல்லாணை நல்லாசிரியர்"[25]

18. "முடித்த கேள்வி முழுது உணர்ந்தோர்"[26]

19. "நீடிக்கிடந்த கேள்விக் கிடக்கையின்
இணை நரம்பு"[27]

20. "ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியின்
ஓரேழ் மாலை"[28]

21. "மறவுரை நீத்த மாசறு கேள்வி
அறவுரை"[29]

22. "ஐந்து கேள்வியும் அமைந்தோன்"[30]

23. "செவி உணவின் **கேள்வி** உடையார்"[31]

24. ஈண்டிய **கேள்வியர்**."[32]

25. "நுணங்கிய **கேள்வியர்**"[33]

மேலே காட்டிய மேற்கோள்கள் இருபத்து ஐந்திலும்,

2. "வேய்வை போகிய விரல்உளர் நரம்பின்
**கேள்வி** போகியநீள் விசித் தொடையன்"[34]

3. "அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்குபுரி நரம்பின்
பாடுதுறை முற்றிய பயன் தெரி **கேள்வி**"[35]

4. "புரி அடங்கு நரம்பின்
தொடையமை **கேள்வி** இடவயின் தழீஇ"[36]

19, "நீடிக்கிடந்த **கேள்விக்** கிடக்கையின்
இணை நரம்பு"[37]

20. "ஈரேழ் தொடுத்த செம்முறைக் **கேள்வியின்**
ஓரேழ் மாலை"[38]

ஆகிய ஐந்து இடங்களில் மட்டுமே **கேள்வி** எனும் சொல், **இசை** எனும் பொருள் தருகிறது. அந்த ஐந்து இடங்களிலும், அச் சொல், இசைக் கருவிகளோடு தொடர்பு படுத்திக் கூறப்பட்டிருப்பது தெளிவு. ஏனைய இடங்களில் எல்லாம், அது, **மந்திரம்** அல்லது **அறிவு** என்ற பொருளையே தருகிறது என்பது தெளிவு.

அவ்வாறாகவும், அச் சொல், **தனித்துக்** கிடந்தே, ஏனைய பொருள்களையெல்லாம் நீக்கி விட்டு, "**இசை**" எனும் பொருள் ஒன்றையே குறிப்பதாகக் கொண்டு, "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன்" என்ற தொடரில் வரும், **அறிவு** எனும் பொருளே தருவதாகிய "**கேள்வி**" எனும் சொல், "**இசை**" எனும் பொருள் உடையதாகக் கூறி, மதுரை மாநகரில் இசைத் தமிழ் வளர்க்கும் சங்கமும் இருந்தது எனத், "தமிழ்நாட்டு

வரலாறு-சங்க காலம்-அரசியல்'' நூலில், காலக்கணிப்பு,[39] கட்டுரையாளர் கூறியிருப்பது எவ்வாறு பொருந்தும்.

மேலும், மாங்குடி மருதன் தலைமையில் இசை ஆராயும் சங்கம் அமைக்கப்பட்டது எனக் கூறியவர், மாங்குடி மருதனின் பாட்டுடைத் தலைவனாகிய, நெடுஞ் செழியனும் இசைக்கலையைப் பரப்பினான் எனக் கூறி, அதற்குச் சான்றாக, ''பெரிய கல்விகளைச் கற்று புகழை விளக்கி'' எனப் பொருள் தருவதாய ''பெரிய தற்று இசை விளக்கி''[40] என்ற தொடரில் வரும் 'இசை' எனும் சொல்லுக்கு, 'புகழ்' எனும் பொருளை விடுத்து, இசை எனும் பொருள் கோடலும் எவ்வாறு பொருந்தும்?

சங்கம் தமிழ் வளர்த்தது என்றால், அது இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் வளர்த்தது என்பதுதானே பெறப்படும். அங்ஙனமாகவும், இசைத் தமிழையும் வளர்த்தது என எடுத்தோதத் தேவை இல்லை; எடுத்து ஓதுவதாயின், நாடகத் தமிழை வளர்த்ததற்கும் சான்று காட்டி இருக்க வேண்டும், 'காலக் கணிப்பு'க் கட்டுரை யாளர் அது காட்டியுள்ளாரா என்றால், இல்லை.

## சான்றெண் விளக்கம்

1. பொன். சுப்பிரமணியம், "காலக் கணிப்பு", 'தமிழ்நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல்'-தமிழ்வளர்ச்சி இயக்ககம், 1983-பக், 93-94.
2. புறம்-72
3. பொன். சுப்பிரமணியம், முன்னூல், பக். 93
4. புறம்-72
5. கு. கோதண்டபாணி பிள்ளை-பழந்தமிழ் இசை-பக்கம்-109
6. பொன். சுப்பிரமணியம், முன்னூல்-பக்-93
7. மதுரைக் காஞ்சி-767
8. பொன். சுப்பிரமணியம், முன்னூல்-பக்-94
9. திருமுருகு-186
10. பொருநர்-17-18
11. சிறுபாண்-227-8
12. பெரும்பாண்-15-6
13. மேலது-315
14. பதிற்று-21:1-2
15. மேலது-64;4-5
16. மேலது-70:18-19
17. மேலது.74:1-2

18. பரி. 2:24-25
19. மேலது-3:48
20. புறம்-53:12
21. மேலது-72-13-14
22. மேலது-360:2
23. மேலது-361:4
24. மேலது-400:19
25. பட்டின; 169-170
26. சிலம்பு-1:19
27. மேலது-3:89-90
28. மேலது-3:70-71
29. மேலது-13:34-5
30. மேலது-26:26
31. குறள்-413
32. மேலது-417
33. மேலது-419
34. பொருநர்:17-18
35. சிறுபாண்:277-8
36. பெரும்பாண்:15-6
37. சிலம்பு:3:89-90
38. மேலது-3:70-71
39. பொன். சுப்பிரமணியம், முன்னூல், பக். 93-94
40. மதுரைக் காஞ்சி-767

# 9. பெருநற்கிள்ளி-கால நிரல் அமைப்பு முறை சரியானது தானா?

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவினரால் தொகுக்கப் பெற்று, தமிழ்நாடு அரசு வெளியீடாக, தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்காக, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1983-ல் வெளியிட்ட **'தமிழ்நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசியல்'** என்ற நூலில், **'சோழர்'** வரலாற்றை திருவாளர். மயிலை, சீனி, வேங்கடசாமி அவர்கள் எழுதியுள்ளார். (பக்கம். 249-342).

அவர் தம்முடைய கட்டுரையில், **'பெருநற்கிள்ளி மரபினர்'** என்ற தலைப்பில், "பெருநற்கிள்ளி என்னும் பெயர் கொண்ட அரசர்களின் பெயர்கள் நான்கு வெவ்வேறு அடைமொழிகளுடன் காணப்படுகின்றன:

1. போரவைக் கோப்பெருநற்கிள்ளி (**பெருநற்கிள்ளி-1**)
2. முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி (**பெருநற்கிள்ளி-2**)
3. வேல்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி (**பெருநற்கிள்ளி-3**)
4. இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி (**பெருநற்கிள்ளி-4**) என்பன அந்தப் பெயர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பெருநற்கிள்ளி எனும் பெயருடையார் நால்வர். அவர்களிடையே வேறுபாடு காண, அவர்கள் முறையே

**இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி**
**போரவைக் கோப் பெருநற்கிள்ளி**
**முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி**
**வேல்பஃற டக்கை பெருவிறல்கிள்ளி**

எனப் புலவர்களால் தெளிவாக, அறிமுகப்படுத்த சிறப்பு அடைகள் கொடுக்கப்பட்டுள்ளனர். அங்ஙனமாகவும், போர்ரவைக் கோ முன்னவன், முடித்தலையான் இரண்டாமவன், வேற்பஃறடக்கை மூன்றாவமன், இராசசூயம் வேட்டவன் நான்காமவன், எனப் பொருள் கொள்ளத் தக்க நிலையில், பெருநற்கிள்ளி-1 (பக்-268, 275) பெருநற்கிள்ளி.2, (பக்கம்-268, 275) பெருநற்கிள்ளி-3, (பக்-268, 276) பெருநற்கிள்ளி,-4 (பக்-268, 321)-என வகுத்திருப்பது தேவைதானா என்பதை ஆய்வாளர்கள் எண்ணிப் பார்த்தல் நலம்.

மேலும், பெருநற்கிள்ளி எனும் பெயருடையார் நால்வர் இருக்க, அவர்களுள், போரவைக் கோப்பெருநற்கிள்ளி, முடித்தலைக் கோப்பெருநற்கிளி, வேல்பஃறடக்கை பெருநற்கிள்ளி ஆகிய மூவர்களை, மேலே கூறியவாறு, பெருநற்கிள்ளி-1 (பக்-271-275), பெருநற்கிள்ளி 2 (பக்-275-276), பெருநற்கிள்ளி-3 (பக்-276-277) என்ற வரிசையில் அடுத்தடுத்துக் கூறியிருக்கும் கட்டுரையாளர், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியை மட்டும், வேற்பஃறடக்கையானுக்குப் பிறகு, கோப்பெருஞ் சோழன் முதல், குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன் ஈராக, பத்து அரசர்களைக் கூறிவிட்டு, அதன்பின் (பக்-321) கூறியிருக்கிறார். இந்தக் காலநிரல் அமைப்பு முறை சரியானதுதானா? ஆராய்ச்சியாளர் சிந்தித்தல் நல்லது.

# 10. சங்க கால அரசியல் அமைப்பு

தமிழ்நாடு, இயற்கை சூழ்நிலைக்கு ஏற்ப, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பிரிந்திருந்தது. அப்பகுதிகளில் வாழும் மக்களும், அவர்கள் செய்யும் தொழில் நிலைக்கு ஏற்ப, வேட்டுவர், ஆயர், உழவர், பரதவர், எயினர் எனப் பிரிந்தே வாழ்ந்தனர்.

**கோன் :**

இவர்களுள், ஆடு, மாடு, எருமை முதலாம் விலங்குகளைக் கொன்று தின்பதை விடுத்து அவற்றை ஓம்பி, ஒன்று பலவாகப் பெருக்கினால், அவை தரும் பால், தயிர், வெண்ணெய் முதலாம் பயன்கொண்டு வாழலாம் என்பதை அறிந்து, அவ்வாடு மாடு, எருமைகளை முதன் முதலாகப் பேணி வளர்க்கத் தலைப்பட்டவர் முல்லை நிலத்து ஆயரே ஆவர். இவ்வகையால் அவர்கள் ஈட்டி வைத்திருந்த ஆனிரைச் செல்வங்களுக்கு அண்டை நிலத்தவர்களால் அழிவு நேராவாறு காக்கவல்ல ஒருவன் அவர்களுக்குத் தேவைப்பட்டான். அதனால், அத்தகைய ஆற்றல் வாய்ந்த ஒருவனைத் தமக்குள்ளே தேர்ந்து தலைவனாகக்கொண்டனர். இவ்வாறு, தொடக்க நிலையில், ஓரினத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவனே, காலம் செல்லச் செல்ல, ஊராளும் அரசனாகவும், நாட்டாளும் பேரரசனாகவும் உருப்பெற்றான். அரசனைக் குறிக்கும், கோ, கோன் எனும் பெயர்கள், ஆயர்குலப் பெயர்களாதலும் அறிக.

தமிழகம் முழுவதும் தனி ஒருவன் ஆட்சிக் கீழ் என்ற நிலை, சங்க காலத்தில் உருவாகவில்லை. சேரர், சோழர்,

பாண்டியர் என்ற மூவினம் தமிழ்நாட்டை ஆட்சி புரிந்திருந்த அதே காலத்தில், அவர்களின் ஆட்சி எல்லைக்கு உள்ளாகவே, அதியர், ஆவியர், ஓவியர், கொங்கர், கோசர், மலையர், மழவர், திரையர், தொண்டையர், விச்சியர், வேளிர் போலும் வேறு இனத்தவரும் சிறுசிறு அரசமைத்து ஆண்டு வந்தனர்.

**முடியாட்சி :**

முடியாட்சியே, சங்ககால அரசியல் முறையாம். தந்தைக்குப்பின் மகன் என்ற வழிவழி அரச உரிமையே அன்று இருந்தது. முன்னோர்களைக் கூற்றுவன்கொண்டு சென்றானாக, முறைப்படி வந்த பழைய அரச உரிமை—"மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப், பால்தர வந்த பழவிறல் தாயம்"—என்ற புறநானூற்று அடிகளைக் காண்க. இம்முறைக்கு ஒரோவழி இடையூறு நிகழ்வதும் உண்டு. உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி என்பான் இறந்தானாக, அவன் மகன் கரிகாற் பெருவளத்தான் அரசு கட்டில் ஏறுவதே முறையாகவும், அவன் மிகவும் இளையனாக இருந்தமையால், அவனுடைய தாயத்தார் அவனைச் சிறையில் அடைத்துவிட்டுத் தாமே அரியணையில் அமர்ந்து விட்டனர். பின்னர், கரிகாலன் சிறையினின்றும் வெளிப்பட்டு, அவரை வென்று அழித்துவிட்டுப் பின்னரே தனக்குரிய அரசைப் பெற்றான். உடன்பிறந்தார் இருவர், அரச உரிமைக்காகத் தமக்குள்ளே போராடி நிற்பதும் நிகழ்ந்துளது. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்ற சோழ அரசர்களின் போர் நிகழ்ச்சிகளைப் புறநானூறு கூறுவது காண்க.

**நல்லாட்சி :**

குழந்தைக்கும் தந்தைக்கும் இடையேயுள்ள பிணைப்பு போன்ற அன்புப் பிணைப்பு, அக்கால மக்களுக்கும் மன்னனுக்கும் இடையே நிலவியது. நாட்டு மக்கள், தம் உயிர்

ஓம்பும் நெல்லையும், நீரையும் உயிராக மதியாமல், மன்ன னையே தம் உயிராக மதித்தனர்; அது போலவே, மன்ன னும், மக்களுக்குத்தானே உயிர் என மதித்து அரசோச்சி வந்தான். தன் நாட்டையும், மக்களையும், தன்குட்டியை பிறர் அணுகவும் அஞ்சுமாறு காக்கும் புலிபோல், பகை அச்சம் நீக்கிக் காத்து வந்தான். பாரம் ஏற்றிய வண்டி, பெருமணலுள் சிக்கிக்கொண்டபோதும் தளராது, தன் உடல் உரமெலாம் ஒருங்குகொண்டு ஈர்த்து இடம் சேர்க் கும் எருதுபோல், ஆட்சிக்கு இடையூறு நேர்ந்தபோதும் கலங்காது, தன் ஆற்றலால், அது போக்கி நல்லாட்சி நடத்தி வந்தான்.

பிறப்பால் ஆகும் உயர்வு தாழ்வினும், பெற்ற கல்வி யால் ஆகும் உயர்வு தாழ்வே உரம் உடையது எனக் கல்விச் சிறப்பை உணர்ந்து, அக்கல்வியை, ஆசிரியன் உவப்பன எல்லாம் செய்து தான் கற்றதோடு, மக்களையும் கற்கு மாறு அறிவுரை கூறி வந்தான்.

உணவே மக்களுக்கு உயிர் என்பதை உணர்ந்து, அவ் வுணவு பெருக, நிலவளமும், நீர்வளமும் கண்டான்; காடு களை அழித்துக் கழனிகளாக்கினான். விதைத்துவிட்டு, விதைத்த விதை முளைக்க உதவும் நீருக்கு மழை வேண்டி நிற்கும் நிலையுள்ள விளைநிலம் பரந்து கிடப்பினும் பயனில்லை; ஆகவே நீர் வளத்தைப் பெருக்க வேண்டும்; அந்நீர் வளம் பெருகச் செய்தவரே தம் பெயர் விளங்கச் செய்தவராவர் என்பதை உணர்ந்து ஆங்காங்கே குளம் தொட்டு வளம் பெருக்கினான்.

கற்றறிந்த புலவர் பெருமக்கள் தன்னையும், தன் நாட்டையும், பாராட்டிப் பாடுவது தனக்குப் பெருமையாக வும், அவர்கள் அவ்வாறு பாடாது கழிவது தனக்குச் சிறுமை யாகவும் கருதினான், அதனால் அப்புலவர்கள், உவக்கு மளவு பொன்னையும் பொருளையும் வாரி வழங்கினான்;

நல்லரசு நடைபெற அவர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு அவ்வழி அரசு நடாத்தினான்.

**அமைச்சு ;**

தன் ஆட்சி நல்லாட்சியாக நிலவுவதற்கு வேண்டும் அறிவுரைகளை வழங்க வல்ல அமைச்சர்களை அவன் பெற்றிருந்தான். சுற்றம் என்ற பெயரால் அவர்கள் அழைக்கப் பெற்றனர். பால் புளிப்பினும, பகல் இருளினும், நால் வேதநெறி திரியினும், அறநிலையில் திரியாதவர் என்ற பாராட்டினைப் பெற்ற அச்சுற்றம் சூழ அரசன் விளங்குவது; கடல் நடுவே தோன்றும் ஞாயிறுக்கும், விண்மீன்களுக்கு இடையே தோன்றும் வெண்திங்களுக்கும் ஒப்பாகும் எனக் கூறிப் பாராட்டுவர்.

**ஐம்பெருங் குழு**

அரசனுக்கு அறிவுரைகள் கூற, அமைச்சர்களே யல்லாமல், நாற்பெருங் குழு, ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பன போலும் அரசியல் அமைப்புக்களும் இருந்தன.

**அறங்கூறவையம்**

வேந்தற்கு வெற்றி தருவது வேற்படை முதலாம் நாற்படை அன்று; அது தருவது, அவன் கை வளையாச் செங்கோல் என்பதை அறிந்திருந்தான் அரசன்; வலியுரான் நலிவு எய்தி முறை வேண்டி வந்தார்க்கும், வறுமையான் வருந்தித் தம் குறைகூறி நின்றார்க்கும் காட்சிக்கு எளியனாகி நடுவு நிலை பிறழாது நீதி வழங்கிவந்தான்.

அறத்தின் காவலன் அரசனே எனினும், நாட்டில் ஏற்படும் அத்தனை வழக்குகளையும் அவனே கேட்டு நீதி வழங்குவது இயலாது ஆதலின், பேரூர்கள் தோறும் அறங்கூறவையம் இடம்பெற்றிருந்தன. அச்சம், அவலம், ஆர்வம், செற்றம், உவகை ஆகிய உள்ளுணர்வுகளுக்கு அடிமையாகாமல், துலாக்கோல் போல் பிறழாது நின்று

நீதி வழங்கும் நல்லோர்களை, அமர்த்தி நாட்டில் நீதி நிலவக் கண்டான்.

**குடிபுரவு**

நிலவரியும், சுங்கவரியும், அரச பண்டாரத்தின் வருவாயேயாகும். மக்களைப்புரத்தல் காரணமாக வாங்குவ தால், வரி,குடிபுரவு என அழைக்கப்பட்டது. குடிபுரவு ஒரு வரு வாய் எனினும், அரசன் அது ஒன்றையே எதிர்நோக்கி இருத் தல், அவன் ஆண்மைக்குஅழகன்று என்ற உணர்வுடையவன் அக்கால அரசன்; வரியை முறையறிந்து வாங்கின், அது கோடி கோடியாகக் குவியும். அது விடுத்துக் குடிகளை வருத்திக் கொள்ள முனையின், குடிகளும் கெட்டு அழிவர், அரசன் வருவாயும் தடையுறும் என்பதையும் அறிந்திருந் தான். வரி தண்டுவது முறையே எனினும், சில காரணம் கருதி நிலங்களுக்கு வரி நீக்கம் அளிப்பதும் அன்று இருந்தது. வாணிகம் கருதி துறைமுகங்களில் வந்து குவியும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பொருள்கள் மீது சுங்கவரியும் வசூலிக்கப் பட்டது. சுங்கவரி உல்கு என அழைக்கப்பட்டது.

**ஊர்க்காவல்**

படை அச்சம் நீங்க, எல்லைகளை நாற்படையால் காக்கும் அரசன், கள்வராலும், ஆறலைக்கள்வராலும், பேரூர், சிற்றூர்களிலும், பெருவழிகளிலும், களவாடலும், கொள்ளை அடித்தலும் நிகழாவாறு, பேரூர், சிற்றூர்களி லும், பெருவழிகளிலும், இரவு பகல் இரு பொழுதும் கண்ணயராது கடனாற்றும் காவலரை நியமித்திருந்தான்.

**நல்லாட்சி**

இவ்வாறு, அக்கால ஆட்சிமுறை, முடியாட்சியே எனி னும், குடிநலமே தன் முடி நலம் என்ற உயர்உள்ளம் உடையனாகி, குடிகளின் அச்சம் அகற்றி, அவர்கள் பசி அறியாப் பெருவாழ்வு வாழ உதவும் நல்லாட்சி மேற் கொண்டிருந்தான், சங்ககாலத் தமிழ் அரசன்.

# 11. சங்ககாலப் போர் முறை

சங்க காலத்து ஆடவரும் மகளிரும் இயல்பாகவே மறப்பண்பு உடையவராக விளங்கினர். சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் ஆகிய ஐந்து படைக்கலங்கள் பொறித்த அணியையே, தங்கள் பிள்ளைகளின் கழுத்தில் அணிவித்தனர். தானே கொன்ற புலியின் பற்களை அணியாக்கி அணிவதில் பெருமிதம் கொண்டனர். விழாக்காலங்களில், தமக்குக் களிப்பூட்டும் காட்சிகளாகக் கோழிச் சண்டை, ஆட்டுக்கடாச் சண்டை, மாட்டுக்கடாச் சண்டைகளையே கொண்டனர்; விற்போரிலும், வாட்போரிலும் தம் இளைஞர் வல்லராதற்குத் துணைபுரியும் பயிற்சிக் கூடங்கள் ஊர் தோறும் காட்சி அளித்தன.

### வீர மறவர்

போர் என்ற உடனே ஆடவர் தோள் பூரிக்கும்; நடுவூர் மன்றத்தே கிடக்கும் போர் முரசு, காற்றால் அலைப்புண்ட மரக்கிளை மோதி ஓசை எழுப்பினும், அதுபோர் அழைப்பு என எண்ணித் துள்ளும் அவர் உள்ளம். போரில் புறங்காட்டி ஓடாது நின்று போர் புரிந்து மாண்டு போகும் மக்களைக் காணின், அக்காலத்தாயர் மகிழ்வர்; மகன் போரில் தோற்றுப் புறங்காட்டி ஓடி விட்டான் எனக் கேட்பின், அவனுக்குப் பால் ஊட்டிய தன் மார்பை அறுத்தெரியவும் துணிவர். மக்களைப் பெற்று வளர்த்தல்தன் கடனெனின்; போரில் எதிர்ப்பட்ட மத யானைகளையும் வெட்டி வீழ்த்தி வெற்றி பெறல் மக்கள் கடனாகும் என மதித்தனர். முன்னைப் போர்களில் முறையே தமையனையும், தன்

கணவனையும் இழந்துவிட்ட ஒருத்தி, மறுநாளும் போர்ப் பறை கேட்டு, தன் குடிவிளங்க ஒரே மகனை, அதுவும் ஆடும் பருவத்தனாகிய மகனை அழைத்து, குளிப்பாட்டி, நல்ல ஆடை அணிவித்து, அவன் தலையை வாரி முடித்து, வேலைக் கையில் கொடுத்துப் போர்க்களம் போகவிட்டாள்.

"போர்ப்படு காயமே புகழின் காயம்", "போர்ப் புண், புண் அன்று; அது புகழின் கண்"; "போர்ப் புண் பெறாது கழிந்த நாள், தம் வாழ்நாளில் பயன் ஏதும் இன்றிக் கழிந்த வீண் நாள்" என்று உணர்வுடையவராதலின், இறந்து பிறக்கும் குழந்தைகளையும் வாளால் வெட்டி, வாள் வடு உண்டாக்கியே புதைப்பர்.

**மண்ணாசை**

"ஆசைக்கோர் அளவில்லை, அகிலமெல்லாம் கட்டி ஆளினும், கடல் மீதினும் ஆணை செலவே நிற்பர்" என்ற வாறு, அளவுக்கு மீறிய மண்ணாசையே, போருக்கான தலையாய காரணம். இந்நாடு அனைவர்க்கும் பொது என்ற சொல்லை அக்கால அரசர் காது பொறுக்காது; ஆளும் நாட்டெல்லை சிறிது என்ற உணர்வு அவர் உள்ளத்தை உறுத்திக் கொண்டே இருக்கும்: அரசுரிமை காரணமாகவும் போர்கள் நிகழ்ந்தன: உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி இறந்தபோது, முறைப்படி அவன் மகன் கரிகாற் பெருவளத்தானே அரசுரிமை பெறவேண்டிய வனாகவும், அவன் நனி மிக இளையனாகவே, சிலர் அவனைச் சிறையில் அடைத்துவிட்டுத் தாமே ஆளத் தொடங்கியதும், கரிகாற் பெருவளத்தான் சிறையினின்றும் வெளியேறிப் போர்புரிந்து, தாயத்தாரை வென்று அரியணை ஏறியதும், அரசுரிமை நிலை நாட்ட மேற் கொண்ட போர்களாம்.

நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே நிகழ்ந்த போரும் அரசுரிமைக்கான போராம். தந்தை இறந்த பின்னர், ஆளலாம் என அடங்கியிராது, அவர் உயிரோடிருக்கும் போதே, தான் ஆட்சி உரிமை அடைய வேண்டும் என்ற பேராசையில் தந்தை மீதே போர் தொடுத்து எழுந்த நிகழ்ச்சியும் உண்டு. வேற்றரசன் மகள் மீது வேட்கை கொண்டு, அவளை மணம் செய்து தா என்ற தன் வேண்டுகோளை, மகளைப் பெற்ற மன்னவன் மறுத்தபோது, அவளைப் பெறுவான் வேண்டி அவள் தந்தை மீது போர் தொடுத்துப் போவதும் ஒரு போர்க் காரணமாகும்.

## ஆனிரை கவர்தல்

சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர், தமக்குரிய அடையாள மாலைகளாகிய, பனை, ஆத்தி, வேம்புகளால் ஆன மாலையுடன், தாம் மேற்கொண்டு செல்லும் போரின் காரணம் குறிக்கும் வெட்சி முதலாம் மாலைகளையும் அணிந்து செல்வர். தாம் போர் தொடுத்திருப்பதைப் பகையரசர்க்கு உணர்த்தும் முன் அறிவிப்பாக, அப்பகைவரின் ஆனிரைகளைக் கவர்ந்து வருவர். போருக்குப் போகு முன் நிமித்தம் (சகுனம்) பார்ப்பதும், நல்ல நாளில், அரசரும், படைத்தலைவரும் புறப்பட இயலாதாயின், வாள், குடை முதலாயினவற்றை முன்னர்ப் போக விடுவதும் வழக்கமாம்: பகைவர் படை ஆற்றலினும், தன் படை ஆற்றல் பெரிதாதல் வேண்டும் எனும் நினைவால், தனக்குத் துணையாகக், குறுநிலத் தலைவர்களைப் பெறுவதும் உண்டு.

## முற்றுகை

பகைவர் படையினும், தன் படை பெரிது என்ற நிலை ஏற்பட்ட போதும், பகைவரை எளிதில் வெற்றிக் கொள்வதற்கு ஏற்புடைய காலம் வரும்வரை காத்திருந்து, வெற்றி

பெறுவதற்கு ஏற்புடைய இடமாகத் தேர்ந்து சென்று பகைவரைத் தாக்குவர். போர் தொடுத்துச் செல்லும் படை, பகை நாட்டுள் புகுந்ததும், ஆங்குள்ள ஊர்களைத் தீயிட்டு அழிப்பதும், வயல்களில் விளைந்துள்ள உணவுப் பயிர்களை அழிப்பதும், காவற்காடுகளை வெட்டி வீழ்த்துவதும், உண்ணுநீர் நிலைகளைப் படை கொண்டு கலக்கிச் சேறாக்குவதும் ஆகிய அழி செயல்களைச் செய்யும். அது அறிந்து அந்நாட்டுப் படை எதிர்த்து வந்து தாக்கிய வழி கடும் போர் நிகழும்.

அப்போரில் படையெடுத்து வந்தவன் தோற்பின், அவனை, அந்நாட்டுப் படைத் தன் நாட்டு எல்லைக்கப்பால் துரத்தி அடிப்பதும், சில சமயம், அவன் நாட்டுத் தலைநகர் வரையும் துரத்திச் சென்று அடியோடு அழித்துத் திரும்புவதும் உண்டு. மாறாக, படை எடுத்து வந்தவன், தன்னைத் தடுத்து நிறுத்த வந்த அந்நாட்டுப் படையை அந்நாட்டு எல்லையில் வெற்றி கொண்டதோடு நில்லாமல் அந்நாட்டின் தலைநகர் வரை சென்று அறவே அழித்து விடுவதும் உண்டு.

படை வலியால் குறைந்தவன், தனக்கு ஏற்புடைய காலமும், பிறர் படைத் துணையும் வரும் வரை, தன் கோட்டைக்குள்ளே அடங்கியிருப்பதும், அந்நிலையில், படையெடுத்து வந்தவன், அக்கோட்டைக்குள் இருப்பார்க்கு, உணவும் பிறவும் புறத்தே இருந்து போகாதவாறு அக்கோட்டையை முற்றியிருப்பதும், முற்றுகை பலநாள் நீடித்து, அகத்தே அடங்கி இருப்பார்க்கு உணவு முதலாயின கிடைக்காது, தட்டுப்பாடு ஏற்பட்ட வழி, புறத்தே இருப்பானுக்குப் பணிந்து போவதும், அதற்கு மாறாக அகத்தே அடங்கி இருப்பான் பணியாது நிற்க, மேலும் முற்றுகை நீட்டிப்பின், அகத்தே அடங்கி இருப்பானுக்கு வேறு படைத் துணை வருதல் கூடும் என்ற நிலை ஏற்படும்போது, வாளா

முற்றியிருப்பதைக் கைவிட்டு, காவற் காட்டை அழித்தும், அகழியைத் தூர்த்தும், புற மதிலையும், அக மதிலையும் அழித்தும், அரணுக்குள் புகுந்து போரிட்டு வெற்றி பெறுவதும் உண்டு; அதே போல், அகத்தே அடங்கி இருப்பவன், தன் படை ஆற்றல் பெருகிவிட்டது என்ற நிலை பெற்றவுடனே அடங்கி இருப்பதைக் கைவிட்டு அரணுக்கு வெளியே வந்து முற்றியிருப்பானை அழித்து வெற்றி கொள்வதும் உண்டு.

**வாகை**

வெற்றி பெற்ற வேந்தர்கள், பகை நாட்டுக் காவல் மரத்தை வெட்டி, அம் மரத் துண்டங்களை, அந்நாட்டு மகளிரைக் கொண்டு ஈர்த்துச் சென்று, போர் முரசு செய்து கொள்வது, தோற்ற மன்னரின் மணிமுடியை அழித்து வீரக் கழலாகச் செய்து தன் காலில் அணிந்து கொள்வது, தன் அரசியல் சின்னங்களைத் தோற்ற அரசனின் கோட்டை மதில் வாயில் கதவுகளில் பொறிப்பதும், பகை நாட்டில் கொள்ளையடித்த பொருள்களைப் படையாளர்களுக்கும் புலவர்களுக்கும் பகிர்ந்து அளிப்பது போலும் அழிசெயல்கள் போரை அடுத்து நிகழும்.

ஆனிரை கவரவும், கவர்ந்த ஆனிரைகளை மீட்கவும் நிகழும் போர்கள், நாட்டு எல்லைப் பகுதிகளிலும், மண்ணாசை கொண்டு மாற்றான் நாட்டைத் தன் நாடாக்க மேற் கொண்ட போரும், அம் மண்ணாசை கொண்டு வந்தானை வென்று தன் நாட்டை இழக்காமல் காக்க மேற் கொண்ட போரும், அகநாடுகளிலும், அரண் அழிக்கவும், அரண் காக்கவும் நிகழும் போர்கள், நாட்டின் தலைநகர் களிலும், மண், பொன், மகள் காரணமாக அல்லாமல், தன் படைச் செருக்கைக் கடல் கடந்த நாட்டவரும் உணர்ந்து பாராட்ட வேண்டும், என்ற காரணமாக நிகழும் போர்கள், கடலை அடுத்த நிலங்களிலும் நிகழும்.

## புலவர் பண்பு

போர் விளைவிக்கும் நாட்டழிவு கண்டு கலங்கும் நல் உள்ளம் வாய்ந்த பழந்தமிழ்ப் புலவர்கள், போர் நிகழா முன்பே, இரு அரசர்களையும் கண்டு அறிவுரை கூறிப் போரைக் கைவிடச் செய்வதும், போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலையிலும், இருவர்க்கும் அறிவுரை கூறி, போர் மேலும் தொடராவாறு செய்வதும் ஆகிய போர் ஒழிப்புப் பணிகளும் அக்காலை நிகழ்ந்தன.

போருக்காம் பல்வேறு காரணங்களையும், போரின் பல்வேறு நிலைகளையும், போரின் முடிவுகளையும், தொல்காப்பியப் புறத்திணை இயலும், புறப்பொருள் வெண்பா மாலையும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளன.

## மக்கட் படையின் சிறப்பு

உலக நிகழ்ச்சிகளில் போர் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. அதனால் நாட்டின் தலையாய உறுப்பாக நாற் படை அமைந்து விட்டது. உலகாளும் அரசர்க்கு உறுதுணை புரியும் அரிய பண்புகள் ஆறனுள்ளும், படையே தலையாய சிறப்புடையது என்ற கருத்தில், படைக்கு முதலிடம் கொடுத்து,

> "படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு"

என எடுத்துரைத்துள்ளார் வள்ளுவர். நாட்டின் அமைதிக்கு நற்றுணை புரிவது அந்நாற் படையே என்பதை உணர்ந்துள்ளமையால் உலக அரசுகள் அனைத்துமே, அரசியல் பண்டாரங்களின் பெரும் பகுதியைப், படை அமைப்புக்குச் செலவிட்டு வருகின்றன.

படை அமைப்பும், அப்படையேந்தும் படைக்கலங்களும் காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் வேறுபடக் காண்

கிறோம். மலைப் பாறைகளையும், மரக்கிளைகளையும், படைக் கலங்களாகக் கொண்டு போரிட்ட வான்ரப்படை, கரடிப் படைகளை ஒரு காலத்தில் கண்டோம். வாளையும், வேலையும், வில் அம்புகளையும் படைக் கருவிகளாகக் கொண்டு போரிட்ட தேர்ப் படை, யானைப் படை, குதிரைப் படைகளைப் பிறிதொரு காலத்தில் கண்டோம்.

இவ்வாறு படையும் படைக்கலங்களும் வேறுபடினும், களத்தில் மக்கள் நின்று போரிட்ட நிகழ்ச்சியை முச்சங்க காலத்திலும் கண்டோம், அதற்கு முந்திய காலத்திலும் கண்டோம், இராமாயண, பாரத இதிகாச காலங்களிலும் கண்டோம். படை வரிசையுள் இடம் பெறுவன வானரம், கரடி, யானை, குதிரை போலும் உயிருடைப் பொருள்களே ஆயினும், அவற்றை இயக்க மக்கள் வேண்டப்பட்டன ராதலின், படை வரிசையுள் தலையாய இடம் பெற்றுத் திகழ்ந்தது மக்கட் படையே.

# 12. பழந்தமிழ்ப் பேரூர்ப் பண்பு

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; உழுவார் உலகத்தார்க்கு ஆணி; உலகம் ஏர்ப்பின்னது என்ற உணர்வு வரப் பெற்றவர் தமிழர். அதனால், அவர்கள் தம் வாழ்க்கை வளர்க்கும் விழுமிய துணையாக வயல் வளத்தைக் கொண்டார்கள். உழவுத் தொழில் ஒன்றை மட்டுமே ஓம்பி வாழும் மக்கள், அவ்வுழு நிலங்களை அடுத்து வாழவே விரும்புவர். நிலத்துக்கு உரியவன், அந்நிலத்தை ஒவ்வொரு நாளும் சென்று பார்த்து வரல் வேண்டும். அவன் அதில் தவறுவனாயின், தன்னைப் பராமுகமாக மதிக்கும் கணவனோடு ஊடிக்கொள்ளும் காதல் மனைவி போல், நிலமும் அவனோட்டு ஊடிக்கொண்டு நிறை பயன் அளிக்க மறுத்து விடும்.

> ''செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து
> இல்லாளின் ஊடி விடும்''—

இந்த உண்மையை உணர்ந்தவர்கள் ஆதனின் தமிழகத்து உழவர்பெரு—மக்களின் குடியிருப்புக்கள், அன்னார் விளை நிலங்களுக்கு அணித்தாக இடம் பெற்ற சிற்றூர்களாகவே அமைந்து விட்டன.

அதனால், தமிழகத்தில் பேரூர்கள் பெருக வாய்ப்பில்லாமல் போய் விட்டது. அரசியல் தலைமை, வாணிக வாய்ப்பு என்ற இவை போலும் காரணங்கருதி, ஒரு சில பேரூர்களே தோன்றின. ஆனால், அவ்வாறு தோன்றிய பேரூர்கள் ஒரு சிலவே என்றாலும், அவை, நவ நாகரீக-

வளர்ச்சியின் இருப்பிடங்களாய்த் திகழ்ந்தன. நாகரீக வாழ்விற்குத் தேவைப்படுவன என்னென்னவோ அவை அனைத்தையும் அப்பேரூர்கள் பெற்றிருந்தன.

**பேரூர்ப் பண்பு :**

ஒரு பெரிய நகரம்; தன்னை நோக்கி வருவார்க்கு, அவர்கள் சிறிது சேய்மைக் கண் வரும்போதே, நகரம் நெருங்கிவிட்டது என்பதை ஒரு சில குறிப்புக்களால் அறிவித்து விடும். இரவாயின். பேரூர்த் தெருவுகளிலும்; அத்தெருவுகளின் இருமருங்கிலும் வானளாவ உயர்ந்திருக்கும் மாடங்களிலும் ஏற்றப்படும் எண்ணற்ற விளக்குகளின் ஒளிகளெல்லாம் ஒன்று திரண்டு ஒளிப்பிழம்பாகி உயரத்தே படர்ந்து, சேய்மைக்கண் வருவார்க்கும் நகரம் நெருங்கிவிட்டது என்பதைத் தெரியக் காட்டும். பகலாயின், அப்பேரூரில், எழும் பல்வேறு ஒலிகளும் ஒன்று கலந்து, கடல் அலையொலிபோல் பேரொலியாகி, அந்நகர் நோக்கிச் செல்வாரின் கண்களுக்கு அந்நகர் காட்சி அளிப்பதற்கு முன்பே, அவர் காதுகளில் புகுந்து, நகர் நெருங்கி விட்டது என்பதைப் பறைச் சாற்றும். பல்வேறு மணங்கள் அவர்களுக்கு நல்வரவு கூறும். பேரூர்களுக்கு உரியவை எனப் பாராட்டப் பெறும் இப்பண்புகளைத் தமிழகத்துப் பேரூர்கள் குன்றவறப் பெற்றிருந்தன.

மதுரை இன்னமும் எத்தனை காவதம் உளது? என்று கேட்ட கோவலனுக்கு, "சந்தன மணம் ஒன்றே நாறும் பொதியத் தென்றல் போலாது, அகில், சந்தனச் சாந்துகளும், குங்குமக் குழம்பும் கலந்த மணக் கலவையில் திளைத்து, மல்லி, முல்லை, மாதவி, கழுநீர், சண்பகம் ஆகிய மலர்களின் மணத்தை வாரிக்கொண்டு, அட்டிற் சாலைகளின் தாளிப்புப் புகை, அங்காடிகளின் பணியாரம் சுடு புகை, செல்வர்கள் தங்கள் ஆடை அணிகளுக்கு மணம் ஊட்ட எழுப்பும் அகிற்புகை, வேதியர் வேள்விப்

புகை ஆகிய பல்வேறு புகைகளின் ஊடே புகுந்து, நாறும் இம்மணம் எம் மணம் என எவரும் நுகர்ந்து உணராதவாறு, பல்வேறு மணங்களும் ஒருங்கே மணக்க மதுரைத் தென்றல் வந்து வீசுவதை நீ உணரவில்லையோ? மதுரை அணுகி விட்டது''[1] என பாணர் கூறியதும், மதுரை நோக்கிச் செல் லும் கவுந்தி, கோவலன், கண்ணகி, ஆகிய மூவர்களையும், அரண்மனையிலும், ஆலயங்களிலும் எழும் முரசொலியும், அந்தணர் ஓதும் நான்மறை ஒலியும், மாதவர் ஓதும் மந்திர ஒலியும், போரில் வெற்றி பெற்ற வீரர்களைப் பாராட்டும் வெற்றி விழா ஒலியும், போர்க்களிறுகளின் பிளிற்றொலி யும், குதிரைகளின் கனைப்பொலியும், பாடித்திரியும் பொருநர்களின் பறையொலியும், போலும் பல்வேறு ஒலிகள், கடல் ஒலிபோல் கலந்து ஒலித்து எதிர்கொண்டன[2] எனக் கூறப்படுவதும், தமிழ்நாட்டு பேரூர்களின் பெருமை யினைப் பறை சாற்றிப் புகழ்வது காண்க.

## பேராற்றங்கரைப் பேரூர்கள்

பேரூர்கள், பெரும்பாலும், பேராறுகளின் பாய்ச்சலால் வளம்பெறும் பள்ளத்தாக்குகளில், அப்பேராறுகளின் கரைகளிலேயே தோன்றும் என்பது உலகெங்கும் கண்ட உண்மையாகும். ஆறுகள், நில வளத்துக்கு, நிலைத்த துணைபுரிதலோடு, நகரங்களுக்கு, நல்ல அரணாகவும் அமையும் என்பதை அறிந்தமையால், மக்கள், பேரூர் களைப் பேராற்றங்கரைகளிலேயே அமைத்தார்கள். பழமை யால் பெருமையுற்ற எகிப்து நாட்டு நாகரீக நகரங்கள், நைல்நதியின் கரையிலும், மெசபடோமிய நகரங்கள் டைகிரஸ், யூப்ரடஸ் ஆறுகளின் கரைகளிலும், மொகஞ்சதரோ, அரப்பாவில் கண்ட திராவிட நாகரீக நகரங்கள் சிந்து நதிக்கரையிலும் இடம் பெற்றிருந்தமை உணர்க.

இதே போல், தமிழ்நாட்டின் தலையாய நகரங்களெல்லாம், பேராற்றங்கரைகளிலேயே இடம்பெற்றன. சேரநாட்டுத் தலைநகராம் கருவூர், பொருநைக் கரையிலும், சோழநாட்டுத் தலைநகர்களாம், புகாரும், உறையூரும், காவிரிக் கரையிலும், பாண்டியர் தலைநகராம் மதுரை வைகைக் கரையிலும், தென்பாண்டித் தலைநகராம் நெல்லை, தாம்பிரபரணிக் கரையிலும், பல்லவர் தலைநகராம்காஞ்சி, பாலாற்றங்கரையிலும், இடம்பெற்றிருந்தன.

**அரண்**

ஒரு நாடும், அந்நாட்டின் தலையாய நகரங்களும், நீரரண், நில்வரண், மலையரண், காட்டரண் என்ற இயற்கை யரண்கள் நான்கையும் பெற்றிருத்தல் வேண்டும். என்பதை உணர்ந்திருந்த தமிழ் மக்கள், அந்நால்வகை அரண்களையும் இயற்கையில் பெற இயலா இடங்களில் அமைந்த நகரங்களுக்கு, அவ்வரண்களைத் தம் முயற்சியால் செயற்கையில் ஆக்கி அளிக்க எண்ணினார்கள். அவ்வாறு எண்ணிய அவர்கள், அந் நால்வகை அரண்களுள், மலையரண், தம்மால் ஆக்குதல் இயலாது என்பதால், அது ஒன்றைக் கைவிட்டு, ஏனைய மூவரண்களையும் ஆக்கி அளித்தார்கள். நகரங்களைச் சூழக்காடுகளை வளர்த்தார்கள். காட்டரணை அடுத்து ஆழ்ந்த அழிகளைத் தோண்டினார்கள். காட்டை அழித்து, அகழியைத் தூர்த்துப் பாய்ந்து வரும் பகைவர் படைகளைப் பாழ் செய்யும் தம் படை வீரர் இருந்து போரிட, அகழிக்கும், மதிலுக்கும் இடையில் பெரு நிலப்பரப்பை வைத்தார்கள். அப்பெரு நிலப்பரப்பைப் புறநகர் என அழைத்தார்கள். புறநகரை அடுத்து மதில் எழுப்பினார்கள். மதிலின் அகத்தே, அரண்மனை அமைத்தார்கள்; அப்பகுதியை அகநகர் என்றார்கள்.

**பேரூர் அமைப்பு**

ஆறு, ஆற்றைக் கடந்தால் காவற்காடு, காவற்காட்டைக் கடந்தால் அகழி, அகழியைக் கடந்தால்

புறநகர், புறநகரைக் கடந்தால் மதில், மதிலைக் கடந்தால் அகநகர் என்ற இதுவே பழந்தமிழ்ப் பேரூர்களின் அமைப்பு முறையாகும். இது, கவுந்தியும், கோவலனும், கண்ணகியும், வையையாற்றைத் தெப்பத்தில் கடந்து, தென்கரை அடைந்து, காவற்காடு சூழ்ந்த அகழியைக் கடந்து, புறநகர் புகுந்து தங்கினார்கள் எனக்கூறும் சிலப்பதிகாரச் சான்றால் உறுதியாவது உணர்க.[3]

### காவற் காடு

மரம் செடி கொடிகள் மண்டி, ஒன்றோடொன்று பின்னிக் கிடப்பதால், காடு, மக்களும் மாவும் எளிதில் கடந்து செல்லாவாறு இடையூறு பயக்கும். அதனால் அரசர்களின் நாற்படை அதை ஊடறுத்துக் கொண்டு போவது அறவே இயலாது. அதனால், அரசர்கள், காட்டை ஓர் இயற்கை அரணாகக் கொண்டனர். ஆனால், காட்டை அழித்தே நாடு அமைக்கவேண்டிய சூழ்நிலையில், நாடு வளர வளரக் காடுகள் அழிவுற்றன. இயற்கை அரணாக அமைந்திருந்த காடுகள் அழிந்து போகவே, பேரூர்களைச் சூழச் செயற்கைக் காடுகளை வளர்த்தார்கள். அதனால், ஒரு நாட்டின் மீதோ, அல்லது ஒரு பேரூரின் மீதோ படையெடுத்துச் செல்லும் பகைவர், முதற்கண் அக்காவற்காடுகளை அரும்பாடுபட்டு அழிக்கவேண்டியதாயிற்று. காவற்காடு, மிளை, இளை என்ற பெயர்களாலும் அழைக்கப் பெறும்.

### அகழி :

காவற்காட்டை அழித்து விடுவது எளிது; ஆனால் கடல்போல் காட்சி தரும் அகழியைக் கடப்பது அரிது; அதனால், அரண்களுள் நீர் அரண் நனி மிகச் சிறப்புடையது. நீர் அரண், வற்றாப் பேராறுகளாலும், கடலானும் ஆகும். ஆற்றுநீர் பாய்வதால், நன்செயும், புன்செயும்

பெறும் வளத்தோடு. அவ்வாறுசுள் அரணாகப் பயன்படல் கருதியே, அக்காலப் பேரூர்கள் பெரும்பாலும் ஆற்றங் கரைகளில் இடம் பெற்றன. அத்தகைய ஆறோ, கடலோ இல்லாத இடங்களில் அமைந்த நகரங்களைச் சூழ ஆழமான பெரிய நீர் நிலைகளைத் தோண்டி வைத்தார்கள். அத்தகைய பெரிய நீர் நிலைகளே அகழாம், அது கிடங்கு என்றும் அழைக்கப்பெறும். கிடங்கு, அளந்து காணமாட்டா ஆழமும் அகலமும் வாய்ந்தது. மண் உள்ளளவும் தோண்டப்பட்டது; கல்லை அகழ்ந்தும் காணப்பட்டது. வற்றாப் பெருநீர் நிலைகளில் மட்டுமே வாழும் இயல்பினவாய முதலைகள் வாழுமளவு ஆழம் வாய்ந்தது. மதிலை, மோதும் பேரலைகள் தோன்றி வீசுமளவு கடல்போலும் பரப்புடையது எனப் புலவர்கள் அகழின் ஆழத்தையும் அகலத்தையும் பாராட்டியுள்ளார்கள்.

அரணாகப் பயன்பட்டதோடு, அகழி, அறிதொரு வகையானும் பயன்பட்டது. பேரூர்களில் பெய்யும் மழை நீரும், நகரமக்கள் தத்தம் மனைகளில் கழித்து விடும் கழிநீரும் போக்கிடம் அற்று நகரப் பெருந் தெருக்களில் தேங்கி, மக்களுக்குப் பிணி விளைக்கும் பெருங்கேடாய் மாறிவிடாமல், அந்நீர் சென்றடையும் இடமாய் அமைந்து அகழி, அந்நகர்களின் நல்வாழ்விற்கும் நற்றுணை புரிந்தது.

மனைகளில் மகளிர் நீராடிக் கழிக்கும் கலவை நீரும், பொதுக் குளங்களில் மூழ்கி எழுவார் ஆடிக் கழிக்கும் சந்தனம் மணக்கும் நீரும், விழா நாட்களில் விழாவிற்கு வருவார் மீது வீசும் வாசனை நீரும், அந்தணர், ஆன்றோர் களை வழிபடும் அடியார்கள், அன்னார் அடிகளை வழிபட்டுக் கழுவிக் கழிக்கும் நீரும், வண்ணமும், சுண்ணமும் போலும் மணப்பொருள் ஆக்குவார், அம்மணப்பொருள் களை அரைத்துக் கழித்து விழும் நீரும், ஒன்று கலந்து சுருங் கைகள் வழியே ஓடி அகழியை அடையும்; அதனால் அகழி

நீரும் மணம் நாறும்; அவ்வகழி வாழ் மீன், முதலை இனங்களும் தம் புலால் நாற்றம் ஒழித்து நறுமணம் நாறும்; செந்தாமரை, செங்கழுநீர் போலும் பகற்பூக்களும், ஆம்பல் போலும் இராப் பூக்களும் மலர்ந்து மணக்கும் அகழி, வானவில் வனப்பைக் காட்டும் என மணிமேகலை கூறுவது காண்க.

**புறநகர் :**

அகழியைக் கடந்தால் அடைவது புறநகர். பகைவர் படை, காவற்காட்டை அழிப்பதையும், அகழியைத் தூர்ப்பதையும், அந்நகரைச் சூழ வாழும் அந்நாட்டு மக்களை அலைப்பதையும் தடுத்து நிறுத்துவது, அரணகத்துப் படையால் ஆகாது ஆதலின், அரண்மதிலையும், அகழியையும், காவற்காட்டையும் காக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட புறப்படையின் பாசறைக் கூடம், இப்புறநகரிலேயே இடம் பெற்றிருந்தது. காவற்படையின் பாசறை இடமாக விளங்கும் இப்புறநகர், போரில் கைப்பற்றிய பகையரசர்களையும், தம் நாட்டுக்கு வரும் வேற்று நாட்டு வேந்தர்களையும் வைத்துப் பேணும் வேளாவிக்கோ மாளிகை போலும் மாளிகைகளுக்கும் இடம் அளித்தது.

நகரின் கழுநீர் பாய்ந்து வளம் பெற்ற அப்புறநகர், நெல் விளையும் நன்செய்களையும், மணம் நாறும் மலர்ச் சோலைகளையும், பறவைகளின் ஒலி அடங்காப் பொய்கை, ஏரி முதலாம் பெரிய நீர் நிலைகளையும், வாழை, தென்னை, கமுகு முதலாம் வளத்தோட்டங்களையும், வேழக்கோல் வேய்ந்த தண்ணீர்ப் பந்தல்களையும் கொண்டு இயற்கை எழில் காட்டித் திகழ்ந்தது. நாகரீக வளம் மிக்க நகர வாழ்வின் ஆரவாரத்தை வெறுக்கும் ஆன்றோர்களும், அறவோர்களும், அறிவுடைப் பெரியோர்களும், அமைதியின் இருப்பிடமாய் அப்புற நகரையே தம் வாழிடமாக வரைந்து கொண்டனர். அப்புறநகர் வாழும் உரிமை

அத்தகையோர்க்கல்லது வேறு எவர்க்கும் இல்லை. அதனால், அவர்கள் இருந்து அறிவாராய்ச்சி பண்ணுவதற்கு வாய்ப்பளிக்கும் பள்ளிகளும் பொது மேடைகளும் அப்புற நகரில் இடம் பெற்றிருந்தன.[4]

ஆன்றோர்கள் இருந்து அறிவாராய்ச்சி பண்ணுவதற்கேற்ற இடங்களோடு, அன்னார் வழிபாடு ஆற்றுதற்குரிய ஆலயங்களும் அப்புற நகரில் எழுப்பப்பட்டன; அறவோர்களும், ஆன்றோர்களும் வழிபாடாற்ற எழுந்த அவ்வாலயங்களில் உறையும் தெய்வங்களை அந்நகர் மக்களும் சென்று வழிபட்டனர்.[5]

## மதில்

காவற்காட்டு மரங்களை வெட்டி அழித்தும், அகழியைத் தூர்த்தும், புணைகளைத் துணை கொண்டு கடந்தும், கிடங்கையும், காவற்காட்டையும் காத்து நின்ற புறநகர்ப் படையை வெற்றி கொண்டும் பாய்ந்துவரும் பகைவர் படையால் பாழுறா வண்ணம் நாட்டை நின்று காப்பது மதில் ஒன்றே. அதனால், அம் மதில் பகைவர் படையால் எளிதில் பாழுற்றுப் போய் விடாமல், நெடிது நின்று தாங்கவல்ல வன்மையுடையாதல் வேண்டும் என்பதில் பழந்தமிழ் வேந்தர்கள் விழிப்பாயிருந்தார்கள். அம் மதில்கள் ஏணியிட்டு ஏறமாட்டா உயர்வும், அகழ்ந்து கடக்கலாகா அடி அகலமும்; எவற்றாலும் அழிக்கலாகாத் திண்மையும் உடைய்தாதல் வேண்டும். அரணகத்தே அடங்கியிருக்கும் படைவீரர் ஆங்கிருந்தவாறே போரிட்டுப் பகைவர் படையைப் பாழ்பண்ண வாய்ப்பளிக்கும் வகையில் அம்மதில் தலையகலம் உடையதாதலும் வேண்டும், என்ற மதிலமைப்பு முறைகளைப் பழந்தமிழர் பண்டே அறிந்திருந்தனர்.

[1]"உயர்வு அகலம், திண்மை, அருமை, இந்நான்கின் அமைவு அரண் என்று உரைக்கும் நூல்"

என அரணுக்கு வள்ளுவர் வகுத்த இலக்கணம் காண்க.

மேலும், அரணைக் காப்பது, படைவீரரால் இயலாது போகும் நிலையிலும், அரண் காக்கப் படுதல் வேண்டும் ஆதலின், அந்நிலையில், அது மதில் ஒன்றினாலேயே ஆகும் என்பதறிந்து, அம்மதில் அகத்தே அரிய பொறிப்படைகள் பலவற்றைப் பொறுத்தி வைத்தார்கள். தானே வளைந்து அம்பு ஏவும் வில், குரங்கு வடிவாய் இருந்து, சேர்ந்தாரைப் பற்றிக் கடிக்கும் பொறி; கல் உமிழும் கவண்; சிவக்கக் காய்ந்து, சேர்ந்தார்கள் மீது சிதறித் துன்புறுத்தும் நெய் உலை; செம்பை உருக்கிப் பகைவர் படைமீது பாய்ச்சும் செம்புருக்கு உலை; மதிலைப் பற்ற அணுகும் பகைவர் மீது ஊற்ற, இரும்பை உருகக் காய்ச்சி வைத்திருக்கும் இரும்பு உலை; கவணிற்கு வேண்டும் கற்களைக் கொண்டிருக்கும் கூடைப்பொறி; தூண்டில் போலும் தோற்றம் உடைய தாகி, மதிலை அடைவாரைப் பற்றி வலிக்கும் தூண்டிற் பொறி; மதில் உச்சியை அடைந்து விட்ட பகை வரைக் கழுத்தில் மாட்டி, இறுக்கி உயிர் போக்கும் தொடக்கு; ஆண்டலைப் பறவை வடிவாய் இருந்து, பகை வீரர்களைக் கண்ணுற்றதும் பறந்து பாய்ந்து அவர் தலைகளைக் கொத்தி மூளையைப் பறிக்கும் பொறி; மதில்மீது ஏறினாரை மறித்துத் தள்ளும் இரும்புக் கவைக் கோல்; கழுமரம்; அம்புக் கட்டு; அம்பிருக்கும் அறைகள்; குறியவும், சிறியவுமான அம்புகளை விரைந்து எய்யும் சிறு சிறு பொறிகள்; மதிலைப் பற்றும் கைகளைக் குத்தித் துன்புறுத்தும் ஊசிப் பொறி; மீன் கொத்திப் பறவை உருவுடையதாகி, விரைந்து பாய்ந்து பகைவீரர் கண்களைக் கொத்திப் பறிக்குப் சிச்சிலிப் பொறி, பகைவீரர்கள் மீது பாய்ந்து அவர் உடல்களைத் தம் கோடுகளால் குத்திக் கிழிக்கும் பன்றி உருவப் பொறிகள்; பகை வீரர் தலை களைத் தாக்கி உயிர் போக்கும் தடிப் பொறி; கோல், குந்தம், வேல், இவை, அரண் மதில்களில் தமிழ் அரசர்கள் அமைத்து வைத்திருந்த அரிய பொறிப் படைகளாகும்.

**வாயிலும் கதவும்**

பேரூர் வாழ் மக்கள், புறத்தே போய் வரவும், பிறரெல்லாம் பேரூர்க்கு வந்து செல்லவும் வழி செய்வது வாயில். வாணிகம் கருதி வரும் பல்வேறு வண்டிகளும், பல்வேறு நாட்டு மக்களும், வேந்தர்களின் நாற்படைகளும் வழங்குவதற்கேற்ப, பேரூர் வாயில் அகலமும், உயர்வும் உடையதாக அமைக்கப்பட்டது. தேர்ப் படைகள், தம்மீது ஏற்றிய வெண் கொற்றக் குடைகளும், வெற்றிக் கொடிகளும் சிறிதும் தாழாது நின்று நிழல் செய்து பறக்கும் நிலையிலேயே உட்புகுதற்கேற்ற உயர்வுடையவாகவும், பெருவெள்ளம் பாயும் பேராற்றுப் படுகை போலும் அகலம் உடையவாகவும் அவ்வாயில்கள் அமைக்கப்பட்டன.

பேரரசின் தலைநகராகவும், பெரிய வாணிக நிலையமாகவும் விளங்கிய அப் பேரூர்களுள், பகை நாட்டு ஒற்றர்களும் வீரர்களும் தம் உருவு கரந்து புகுந்து அழிவு வேலைக்கு அடிகோலவும் கூடும் ஆதலின், வாயில்கள், வீரர்களால் காக்கப்பட்டன! வாயில் காவலர், உட்புகுவார் ஒவ்வொருவரையும், ஒவ்வொரு பொருளையும் ஐயமறத் தெளிந்த பின்னரே உட்புக விடுவர். தமிழ் நாட்டுப் பழம் பெரும் நகரங்களின் வாயில்களைக் காத்து வந்த யவன வீரர்களையும், அவர்தம் காவல் சிறப்பையும், ''கடிமதில் வாயில் காவலிற் சிறந்த அடல் வாள் யவனர்'' எனப் புலவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

வாயில் முகப்பில், காற் சிலம்பு, தழையாடை, பந்து, பாவை முதலாம் மகளிர்க்குரிய ஆடை, அணி, ஆடும் கருவிகளைக் கட்டி நாலவிட்டு வைப்பர். அவை, அப்பேரூரை முற்றி அழித்துக் கைப்பற்றிக் கொள்ளும் கருத்தோடு வந்து வளைத்துக் கொள்ளும் பகையரசர்களுக்கு, ''வேந்தர்காள்! இவ்வரணை வெற்றி கொள்வது உங்களால் இயலாது! ஆகவே அவ்வெண்ணத்தைக் கைவிட்டு அமையுங்கள்; அது

கேளாது, போரிடுவதே உங்கள் விருப்பமாயின், போரில் நீங்கள் தோற்பது உறுதி; தோற்றால், உங்கள் காலில் வீரக் கழலைக் களைந்து விட்டுச் சிலம்பைப் பூட்டுவோம்; மார்பில் போர்க் கவசத்தை மாற்றிவிட்டு தழையாடை சுற்றுவோம்; கைகளில் வாளையும், வேலையும் அகற்றி விட்டு, மகளிரோடு ஆடி மகிழுங்கள் எனப் பந்தும், பாவையும் திணித்து உங்களை மகளிராக்கி மானம் இழக்கப் பண்ணுவோம்'' என அறிவித்து அரண் வாழ் மக்களின் ஆண்மைக்கு எடுத்துக் காட்டாய்த் திகழும்.

தமிழ் நாட்டுப் பேரூர்கள், எண்காவத நீள இடையளவுடைய பேரூர்கள் ஆதலின், அப்பேரூர் வாழ்மக்கள் அனைவரும் ஒரே வாயிலில் புகுவதும், கழிவதும் இயலாது ஆதலின், நாற் புறங்களிலும் வாயில் அமைத்திருந்தார்கள். ஆனால், அவ்வாயில்கள் நான்கும், உயர்வு அகலங்களால் ஒரு தன்மைய அல்ல. நாட்டின் நாற்படைகளும், வணிகப் பொதியேற்றிய வண்டிகளும் வந்து புகும் வாயில் ஒன்று மட்டுமே பெருவாயிலாம்; ஏனைய மூன்றும், மக்கள் மட்டுமே வழங்கு வதற்கேற்ற சிறு வாயில்களாம். அவை, வாயில் என வழங்கப்படா; நூழை என அழைக்கப்படும். ''நோக்கரும் குறும்பின் நூழையும் வாயிலும்'' என்ற தொடர் காண்க.

வாணிகம் கருதியும், வேறு காரணம் கருதியும் மக்கள் இரவு பகல் எப்போதும் வந்து செல்வராதலின் அடையா நெடு வாயில்களாக விளங்கும் பேரூர் வாயில்கள், போர்க் காலத்தில். பகைவர் படை உட் புகுந்துவிடாதவாறு அடைக்கப்படும். அவ்வாறு அவ்வாயில்களை அடைக்க உதவும் கதவுகள் பகைவர் யானைப்படை மோதினும் அழிவுறாத் திண்மையுடையவாக ஆக்கப்பெற்றன. பலகைகள் ஒன்றோடொன்று நன்கு இணையவும், தாள்கள் தனியே செய்து பொறுத்தப் பெறாமல், கதவுகள் ஆக்கப் படும் போதே உடன் கடைந்து அமைக்கப்பெறும். கதவு,

காற்றாலும், மழையாலும், காயும் வெயிலாலும் கெட்டுப் போகாவாறு நெய் பூசப்பெறும். அவற்றில் செதுக்கப் பெறும் அன்னம், மான்போலும் அழகிய வடிவங்கள், அக் கால அரசர்களின் கலையார்வத்தைக் காட்டுவனவாம்.

கதவுகளுக்குக், கலையார்வம் காட்டும் இவை போலும் ஓவியங்கள் ஒரு பால் அழகு செய்ய, அக்கதவுகள், அந் நாட்டு அரசர்களின் அடையாளச் சின்னங்களையும், அவர் களின் வெற்றிப் புகழ் காட்டும் சின்னங்களையும் பெற்றுத் திகழும். சேரநாட்டுத் தொண்டி நகரத்து வாயிற் கதவில், சேரர் பகைவன் மூ.ப.ன் என்பானுடைய பற்களும், சோணாட்டு மத்தி என்பானுக்குரிய வெண்மணி வாயில் என்ற மாநகரத்து வாயிற் கதவில் அவன் பகைவன் எழினி என்பானின் பற்களும் பறித்துப் பொறுத்தி வைக்கப் பெற்றி ருந்த செய்தியைப் புலவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

## இடை நகர்

வாயிலைக் கடந்து நகருள் புகுந்ததும் முதற்கண் வருவது இடைநகர். நாற்புறமும் மதில்சூழ, நடுவே இருக்கும் நகரம், ஒரே நகராய்த் தோன்றினும், அது இடைநகர், அங்காடி, அகநகர் என்று மூன்று பிரிவுகள் உடையதாய் அமைந்திருக்கும். மதிலுக்கும், அங்காடிக்கும் இடைப்பட்ட பகுதி இடைநகரம். இடை நகர்க்கும் அகநகர்க்கும் இடைப் பட்ட பகுதி அங்காடி ஆகும். அங்காடி சூழ, நகரின் நடுவே அமைந்திருந்த பகுதி அகநகராகும்.

உடல் உழைத்து உயிர் ஓம்பும் தொழிற் மேற்கொண்ட வறியோர்களின் வாழிடமாகவும், உயர்ந்தோரால் ஒழுக்கக் குறைபாடுடையவர் என ஒதுக்கப்பட்டோரின் வாழிட மாகவும் அகநகர் இடம்பெற்றது. இடைநகரின் முதல்வீதி வாயில் காவலரின் வாழிடமாம். அவ் வீதியை அடுத்து

இருந்தது பரத்தையர் தெருவு. பரத்தையர் வீதிகளை அடுத்து, மீன், உப்பு, கள், அப்பம், பிட்டு, வெற்றிலை போலும் வறியோர்கள் வாங்கத்தக்க விலை மலிந்த பொருள்களில் வாணிகம் புரிவார் வாழ்ந்திருந்தனர். அன்னார் வாழிடங்களை அடுத்து, மாடமாளிகைகளைக் கட்டித் தரும் சிற்பி, தச்சர், கொல்லர், கலங்கள் வனைந்து தரும் செம்பு கொட்டி, பட்டாலும், மயிராலும், பருத்தி நூலாலும் ஆடைகள் நெய்து தரும் நெசவாளர், மாலை கட்டிகள், காலக்கணிகள், பண் இசைக்கும் பாணர், சங்கறுத்து வளையல் பண்ணுவோர், முத்துக் கோப்போர், பவளத்துக்குத் தொளையிடுவார் ஆகியோர்களின் வாழி டங்கள் இடம் பெற்றன.

**அங்காடி**

இடைநகர், வறியரும் அகநகர்ச் செல்வரும் ஒருங்கே வந்து வாணிகம் செய்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், அவ்விரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட இடத்தில் அங்காடி அமைந்திருந்தது, அங்காடி, காலை முதல் மாலைவரை தொழில் புரியும் நாளங்காடி, மாலை தொடங்கி விடியும் வரை தொழில் புரியும் அல்லங்காடி. என இரண்டாகப் பிரிந்து விளங்கின. நாளங்காடியில், மக்கள் வெயில் வெப்பத்தால் வருந்தாவாறு நிழல்தரும் மரங்களை வரிசை வரிசையாக வளர்த்திருந்தனர். வாங்கவும் விற்கவும் வந்து கூடும் மக்கள் எழுப்பும் பேரொலி, கடலலைபோல் நீங்காது ஒலித்துக்கொண்டேயிருக்கும். குதிரை வண்டி முதலிய வண்டி வகைகள், கொடிஞ்சி முதலிய தேர் உறுப்புக்கள், கவசம், கையுறை, அங்குசம் முதலிய போர்க்கருவிகள், அரியாயோகம் முதலிய மருந்து வகைகள், வாசவுண்டை, வெண்கவரி, ஓவிய வரைபடங்கள், செம்பாலும், வெண்கலத்தாலும் உருவாக்கப்பட்ட புதுக் கலங்கள், வண்ணமலர் மாலை வகைகள், வாளால் அறுத்துச் செய்யப்

பட்ட வளையல்கள், தந்தத்தைக் கடைந்து செய்யப்பட்ட விந்தைப் பொருள்கள், புகை வகைகள், சாந்து வகைகள், போன்றவை நாளங்காடியில் கிடைக்கும் வாணிகப் பொருள் களாம்.

ஊர்தி, உடை, போலும் மக்கள் தேவைகளும், கணை, கவசம் போலும் மன்னர் தேவைகளும் நாளங்காடியின் வாணிகப் பொருள்களாம் என்றால், உணவிற்கு வேண்டும் காய், கனி, கிழங்கு வகைகள் அல்லங்காடியின் வாணிகப் பொருள்களாம். மா, பலா முதலிய கனி வகைகளும், வாழை, வழுதுணம் முதலிய காய் வகைகளும், கீரை வகை களும், இறைச்சி கலந்து ஆக்கிய அரிசிச்சோறும், அவித் தெடுத்த வள்ளிக்கிழங்கும் அல்லங்காடியில் விற்பனையாகும் வாணிகப் பொருள்களாம். அல்லங்காடியில் வாணிகம் இரவுக் காலத்தில் நிகழுமாதலின், ஆங்குக் கடைதொறும் விளக்குகள் ஏற்றப்பெறும். அவ்விளக்குகள் அளிக்கும் பேரொளியால், இரவு பகலாகிக் காட்டும். நுண் மணலில் வீழ்ந்து கிடக்கும் வெண்சிறு கடுகையும் விளக்கமாகக் காட்டவல்ல பேரொளி அல்லங்காடி எங்கும் வீசிக் கொண் டிருக்கும்.

**அகநகர்**

அரசரும், அமைச்சர்முதலாம் அவன் ஆட்சிக் குழுவின ரும், நாற்படைத் தலைவரும், மறையோரும், உழவரும், வணிகரும் வாழும் மாடமாளிகைகளும்; மன்றமும், மலர்ச் சோலையும், பொதியிலும், பொய்கையும், செய்குன்றும் ஒருங்கே கொண்ட சிறந்த இடம் அகநகர். நாளங்காடிக்கு அணித்தாக வாணிக நிலையங்கள் இடம்பெற்றன. அறுவை வாணிகர் வீதி, பொன்வாணிகர் வீதி, நவமணி வணிகர் வீதி முதலாயினவே அப்பெரு வாணிக நிலையங்களாம். வணிகர் வீதிகளைக் கடந்தால், நான்மறையாளர் வீதி;

அதை அடுத்து அமைச்சர் வீதி; அதற்கு அப்பால் படைத் தலைவர் முதலாம் அரசியல் பணியாளர் வீதிகள். இவை அனைத்தையும் கடந்து சென்றால், நகரின் இடையே நடு நாயகமாய் இடம் பெற்றிருப்பது அரசன் பெருங்கோயில்.

அரண்மனையைச் சூழ்ந்து, அரசர்கள் சென்று வரலாகும் அணிமைக்கண், செய்குன்றும், நன்னீர்ப் பொய்கையும், இளமரக்காவும் இடம்பெற்றன. களிறுகளை யும், குதிரைகளையும் ஓடவிட்டுப் பழக்கும் பெருவெளிகள் இருப்பதும் ஆண்டே: மன்றங்களும், பொதியில்களும், அறச்சாலைகளும் அவ்வக நகரிலேயேஇடம் பெற்றிருந்தன.

## தெருவமைப்பு

இரண்டு பக்கத்திலும் வானளாவ உயர்ந்த மாடங்கள் விளங்க, அகன்று தோன்றிய அகநகர் வீதிகள், உயர்ந்த இருகரைகளுக்கிடையே பரந்து ஓடும் பேராற்றின்காட்சியை நினைவூட்டும். அரசரும், அரசர்நிகர் செல்வரும், வாழும் அகநகர் வீதிகளில், வாணிகர்கள், வண்ணக்குழம்பு, சுன்னப் பொடி, சந்தனச்சேறு, மணம் நிறைமலர், புகைதரு பொருள் கள் ஆகிய பொருள்களைக் கொண்டு சென்று விற்பர்.

அரசர் பிறந்த நாள், அவர் அரியணை அமர்ந்தநாள், அவர் அமரில் வெற்றி கொண்டநாள், முதலாயின குறித்தும், ஆதிரை, உத்திரம் முதலாம் தெய்வத் திரு நாட்கள் குறித்தும் அகநகர் வீதிகளில் விழா கொண்டாடப் படும். விழாக்காலங்களில் வீதிகள் நன்கு ஒப்பனை செய்யப்படும். கோயில் விழாக் குறித்தும், கொற்றவன் வெற்றி குறித்தும், வாணிகம் வளம்காட்டல் குறித்தும், புலமைநலம் பாராட்டல் குறித்தும் நகரவீதிகளில் ஏற்றி வைக்கும் கொடிகள் ஆடி நிழல் அளித்து அணி செய்யும்.

**மன்றமும் பொதியிலும் :**

பேரூர்களின் நடுவே பேணி வளர்த்து வைத்திருக்கும் நிழல்தரும் ஆல், மருந்தாகிப் பயன்தரும் வேம்பு, சுவைமிகு கனி தரும் மா, பலா, விளாம், இலந்தை, முதலாம் மரத் தடிகளில் அமைந்திருக்கும் மேடைகளே மன்றங்களாம். அரசனைப்பாடிப் பரிசில் பெறும் கருத்தோடு வரும் பாணர், கூத்தர், பொருநர், புலவர் போலும் புதியவர்கள், வழிநடை வருத்தம் தீர ஓய்வு கொள்வது அம்மன்றங்களில்தான். நகரமக்கள் ஆட்டுக்கிடாய்ச் சண்டை, கோழிச் சண்டை, முதலாயின விட்டுக் கண்டு களிப்பதும் ஆண்டே; அம் மன்றங்கள்தான், ஊர்ச்சிறுவர்களின் விளையாடரங்குகள். உழைக்கும் பருவம் கடந்து போன நிலையில் வட்டாடிப் பொழுது போக்கும் முதியோர்களின் பொழுது போக்கு இடங்களும் அம்மன்றங்களே. அம்மன்றங்கள்தான் அறங்கூர் அவைகளாகவும் பணிபுரிந்தன.

**சோலையும் செய்குன்றும் :**

அரசனும், அவன் உரிமைச் சுற்றமும் மட்டுமே கண்டு களிக்கும் காவற்சோலையும், மக்கள் மனம் களிக்கச்சென்று உலாவரும் மலர்ச் சோலைகளும் பழந்தமிழ்ப் பேரூர்களில் இடம் பெற்றிருந்தன. அரசர்க்கு உரிய சோலைகள் உய்யானம் என்றும், மக்கட்கு உரிய சோலைகள் உவவனம் என்றும் அழைக்கப்பட்டன.

மன்னர் குலத்தவரின் புனலாட்டு வேட்கையைத் தணிப்பதற்கான நீர் நிலைகளும், அப்பெரு நகரங்களில் இடம் பெற்றிருந்தன. நாற்புறங்களிலும் மணம் தரும் மலர் மரங்கள் வளர்ந்து நிழல் செய்ய, இடையே, நீரை வேண்டும்போது வேண்டுமளவு நிறைக்கவும் போக்கவும் வல்ல பொறிகள் அமையப்பெற்ற பொய்கைகள் தோண்டப்பட்டிருந்தன; அவ்விடம் இலவந்திகைச் சோலை என

அழைக்கப்படும். மன்னர்களின் மலைவளம் காணும் வேட்கையை நிறைவேற்றித்தர, கல்லும் மண்ணும் இட்டும், மரம் செடி கொடிகள் வளர்க்கப் பெற்றும், தண்ணீர் அருவி என ஓட ஒழுகப் பெற்றும் கட்டப்பெற்ற செய்குன்றுகள் அகநகர்க்கு அழகு செய்து நின்றன.

**கோயில்கள் :**

பழந்தமிழ் மக்கள் தம் செல்வ வாழ்வின் செருக்குணர்த்தும் நிலையங்களாகக் காட்சி அளிக்கும் பழந்தமிழ் நாட்டுப் பேரூர்கள், அம்மக்களின் மன அமைதிக்கு, விழுத்துணை புரியும் ஆலயங்களையும் கொண்டிருந்தன. சமயத்துறையில் சமரசம் நிலவிய காலம் சங்க காலமாதலின், அக்காலப் பேரூர்களில், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலாம் பல்வேறு சமயங்களும் இடம் பெற்றிருந்தன; அதனால் அப் பேரூர்கள், சிவன், முருகன், திருமால், பலதேவன், ஞாயிறு, திங்கள், இந்திரன்போலும் கடவுளர்களுக்கும், இந்திரன் ஊர்தி வெள்ளை யானை, அவன் படைக்கலம் வச்சிராயுதம், அவன் காவல் மரம் கற்பகம் ஆகியவற்றிற்கும் எடுத்த கோயில்களாலும், புத்த பீடிகை, அருகத்தானங்களாலும் பெருமை பெற்றிருந்தன

பழந்தமிழ் நாட்டுப் பேரூர்களின் பண்பும் பெருமையும் இவையாம்!

## சான்றெண் விளக்கம்

1. சிலப்பதிகாரம் :

புறஞ்சேரி இறுத்த காதை: 13:115-134

''காழ் அகில் சாந்தம், கமழ்பூங் குங்குமம்,
நாவிக் குழம்பு, நலம் கொள் தேய்வை,
மான்மதச் சாந்தம், மணம் கமழ் தெய்வத்
தேமென் கொழுஞ் சேறு ஆடி; ஆங்கு,
தாதுசேர் கழுநீர், சண்பகக் கோதையொடு,
மாதவி, மல்லிகை, மனைவளர் முல்லைப்
போதுவிரி தொடையல் பூ அணைபொருந்தி;
அட்டிற் புகையும், அகல் அங்காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையும்,
மைந்தரும் மகளிரும் மாடத்து எடுத்த
அந்தீம் புகையும், ஆகுதிப் புகையும்,
பல்வேறு பூம்புகை அளைஇ; வெல் போர்
விளங்கு பூண் மார்பிற் பாண்டியன் கோயிலின்
அளந்து உணர்வு-அறியா ஆர்உயிர் பிணிக்கும்
கலவைக் கூட்டம் காண் வரத் தோன்றி;
புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின்
பொதியில் தென்றல் போலாது, ஈங்கு
மதுரைத் தென்றல் வந்தது; காணீர்!
நனிசேய்த்து அன்று அவன் திருமலி மூதூர்;
தனி, நீர் கழியினும் தகைக்குநர் இல் என''

2. மேலது : 13:135-148

அருந் தெறல் கடவுள் அகன் பெரும் கோயிலும்,
பெரும் பெயர் மன்னவன் பேர் இசைக் கோயிலும்,

பால்கெழு சிறப்பின் பல் இயம் சிறந்த
காலை முரசக் கனைகுரல் ஓதையும்;
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்;
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்;
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோர் எடுத்த நாள் அணி முழவமும்!
போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்;
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்,
பணைநிலைப் புரவி ஆலும் ஓதையும்;
கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்;
கார்க் கடல் ஒலியின், கலிகெழு கூடல்
ஆர்ப்புஒலி எதிர் கொள''

3. மேலது : 13:189-196

''மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்
தேமலர் நறும் பொழில் தென்கரை எய்தி,
''வானவர் உறையும் மதுரை வலம் கொளத்
தானனி பெரிதும் தகவுடைத்து என்றாங்கு
அருமிளை உடுத்த அகழி சூழ் போகி,
... ... ... ... ... ... ... ... ...
போர் உழந்தெடுத்த ஆர்எயில் நெடுங்கொடி
''வாரல்'' என்பன போல் மறித்துக் கைகாட்ட
... ... ... ... ... ... ... ... ... ...
அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர்:, புக்கனர்''

4. மேலது: 13:191:195

''புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீர் ஏரியும்
காய்க்குலைத் தெங்கும் வாழையும் கமுகும்
வேய்த்திரள் பந்தரும் விளங்கிய இருக்கை,
அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர்''

மணிமேகலை :

"தேவகுலமும் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையும் மிடைந்து
நற்றவ முனிவரும் கற்றடங்கினரும்
நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
எங்கணும் விளங்கிய எயிற்புறம்"

சிலப்பதிகாரம் :

அடைக்கலக் காதை : 15:107-108
"அறத்து உறை மாக்கட்கு அல்லது, இந்தப்
புறச்சிறை இருக்கை பொருந்தாது"

5. மேலது : 15:115-118
"அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர் பூங்கண் இயக்கிக்குப்
பாண்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்
ஆயர் முதுமகள் மாதரி"

## கருவிநூற் பட்டியல்

### இலக்கியம்

1. அகநானூறு
2. கலிங்கத்துப் பரணி
3. கலித்தொகை
4. குலோத்துங்க சோழன் உலா
5. குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்
6. குறுந்தொகை
7. சிலப்பதிகாரம்
8. சிறுபாணாற்றுப் படை
9. திருமுருகாற்றுப் படை
10. தொல்காப்பியம்
11. நற்றிணை
12. பட்டினப் பாலை
13. பதிற்றுப் பத்து
14. பரிபாடல்
15. புறநானூறு
16. பெரும்பாணாற்றுப் படை
17. பொருநர் ஆற்றுப் படை
18. மதுரைக் காஞ்சி
19. விக்கிரம சோழன் உலா.

## தமிழ்

1. டாக்டர். இராமச்சந்திரன், சி.ஈ.,
அடிப்படை சான்றுகள்-I தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம் - அரசியல். தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983

2. புலவர். கோவிந்தன், கா. திருமாவளவன், கழகம், 1951 சோழர், கழகம்-1953 சேரர், கழகம், 1955. தமிழர் வரலாறு-மொழி பெயர்ப்பும் திறனாய்வும், கழகம், 1989.

3. டாக்டர். திருநாவுக்கரசு, க.த.,
"குறுநில மன்னர்கள்". தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்-அரசர்கள், தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983.

4. வேங்கடசாமி, மயிலை, சீனி, "சோழர்", "சேரர்" தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்- அரசர்கள். தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1983

## English

.1 Nilakanta Sastri, K.A., Studies in Chola History and Administration.

2. Dr. Ramachandran, C.E., "Tirumavalavan" Madras University Journal, Humanities, Vol. 34. No. 1.

3. Srinivasa Iyengar, M. Tamil Studies

4. Srinivasa Iyengar, P.T. History of the Tamils, AES, New Delhi-1982.

5. Epigraphia Indica

6. Indian Antiquary

7. South Indian Inscriptions

**பின் இணைப்பு :**

# என் கடன் பணி செய்து கிடப்பதே! என் தமிழ்ப்பணி

**புலவர் கா. கோவிந்தன்**

1932 : செய்யாறு உயர்நிலைப் பள்ளியில் 8-வது வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறேன். தமிழாசிரியர், உயர்திருவாளர், மகாவித்துவான் வீரபத்திரப் பிள்ளை அவர்கள். எங்கள் ஊரில் பானு கவியார் என்ற பெரும் புலவர், துறவியார் இருந்தார். வடலூர் வள்ளலார் இயற்றிய அருட்பா குறித்து எழுந்த "அருட்பா மருட்பா," வாதத்தில், அருட்பாவாத நெறியாளரோடு நின்று வாதிட்ட வன்மையாளர். எங்களூரில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு வேதபுரீஸ்வரர், திருஞான சம்பந்தர் அவர்களால், ஆண்பனை பெண்பனையாகப் பாடப் பெற்ற பெருமைக்குரிய பெருமான். அவர் துணைவியார் பாலகுஜாம்பிகையார் அந்த அம்மையார் மீது "இளமுலை நாயகிப் பிள்ளைத் தமிழ்" என்ற பொருள் செறிந்த நூலைப் பாடியவர் பானு கவியார். அத்தகு பெரும் புலமை வாய்ந்த பானுகவியாரை வாதத்தில் வென்றவர் திரு வீரபத்திரப்பிள்ளை அவர்கள்.

அவர் வேலூரில், இன்று வெங்கடேசுவரா 'மேல் நிலைப்பள்ளி' என அழைக்கப் பெறும் அன்றைய ஸ்ரீமகந்து

---

* புலவர் அவர்கள் கடைசியாக எழுதிய கட்டுரை.

தேவஸ்தான உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று விட்டார். அவர் இடத்திற்குக் காவேரிப்பாக்கம் உயர்நிலைப் பள்ளியில் பணி புரிந்திருந்த திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் வந்து சேர்ந்தார். தென் ஆர்க்காடு மாவட்டம் மயிலத்துக்கு மேற்கில் பத்து கி. மீ- தொலைவில் உள்ள ஔவையார் குப்பம் என்ற ஊரில், அவ்வூர்க் கணக்கு எழுதி வந்த திரு. சுந்தரம் பிள்ளை அவர்களின் மகனாகப் பிறந்தமையால் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை என அழைக்கப்பட்டவர்.

மகாவித்துவான் வீரபத்திரப் பிள்ளை அவர்கள் எங்கே, இவர் எங்கே எனச் சில நாள் இவரை மதிக்காமலே இருந்த மாணவர்களில் நானும் ஒருவன். ஆனால் ஔவை அவர்களின் பாடம் நடத்தும் முறை புதுமையானது. அன்று நடத்த வேண்டிய பாடத்திற்கான குறிப்புகளை முன்பாகவே தேர்வு கொண்டல்லது பாடம் எடுக்க மாட்டார், பாக்களை இசையோடு பாடுவார்; சொல் பிரித்து பொருள் விளங்கப் பாடுவார்; புதிய பாடம் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் பழைய பாடத்தை மாணவர் எந்த அளவு புரிந்து கொண்டுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள சில பல கேள்விகளைக் கேட்பார்.

அம்முறையில் ஒரு நாள் அரிச்சந்திர புராணத்தில் வரும் "அவமே புறம் அறைந்தமை" என்ற தொடரில் வரும் "அறைந்தமை" என்ற சொல்லுக்குச் சொல்லிலக்கணம் கூறுமாறு கேட்டார். அதுவரை இலக்கணம் என்றால், இலக்கணத்திற்குப் பாடமாக வைத்திருக்கும் நூலில் ஒரு பக்கம் இரண்டு பக்கங்களை ஒப்பிப்பதோடு சரி; அதனால் சொல்லிலக்கணம் என்பது என்ன எனப் புரியாமல் விழித்தோம். அவர் "இடவழுவமைதி தனித்தன்மைப் பன்மை" என்பதுதான் இதன் சொல்லிலக்கணம் என்றார்.

எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை, 'இடமாவது, வழுவாவது அமைதியாவது, தனித்தன்மைப் பன்மையாவது,"

என விழித்தோம். அதன்பிறகு, இவரிடம் நல்ல தமிழ் அறிவு இருக்கிறது என்பதை உணர்ந்து மதிக்கத் தொடங்கினோம்.

வகுப்பில் ஒருநாள் "என்னிடம் தமிழ் கற்க விரும்பும் மாணவர்கள் எழுந்து நிற்கலாம்" என்றார். எல்லோரும் எழுந்து நிற்கவும், உடனே அவர், என்னிடம் படிப்பதானால், மாதம் ஐந்து ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும்! அதற்கு ஒப்புக் கொள்பவர் மட்டுமே நிற்கலாம் என்றார். நான், மா. கந்தசாமி, வ. வேதபுரி, பி. குப்புராவ், ஆகிய நால்வர் மட்டுமே நின்றோம். மாலையில் வீட்டிற்குச் சென்றோம் பணத்தோடு! தமிழ் கற்க எந்தஅளவு ஆர்வம் இருக்கிறது என்பதைக் கண்டுகொள்ளவே, ஐந்து ரூபாய் சம்பளம் என்றேன், சம்பளம் எதுவும் வேண்டாம் தமிழ் கற்றுத் தருகின்றேன் என்றார்.

வகுப்பு தொடங்கிற்று. திரு. உலகநாதம்பிள்ளை அவர்கள் இயற்றிய "கன்றும் கனி உதவும்" என்ற உரை நடை நூலைக் கொடுத்து, அதை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கப் பணித்தார். பாரி மகளிர் வரலாறு கூறும் சிறந்த உரைநடை நூல் இது. அது முடிந்ததும். "கார் நாற்பது", 'களவழி நாற்பது" என்ற எளிய பொருள் விளக்கம் பெறவல்ல, அதே நிலையில் ஆழமான பொருள் நிறைந்த நூல்களைக் கற்றுத் தந்துவிட்டுப் பின்னர் ஒரு நாள் தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம், ஒரு நாள் திருக்குறள் பரிமேலழகர் உரை எனச் சொல்லித் தந்தார்.

பாடம் தொடங்குமுன் :

திருவிளங்கு பல்மொழியும் சீர்விளங்கு
புலவர் பலர் சிறப்பத் தோன்றி
உருவிளங்கு பாக்கள் பல உரைகள்
பல ஆக்குதநல் உளவாம் வாய்மை

மருவிளங்கு தமிழ்மொழியின் மருங்கு
எழுந்தது என விளங்கும்
திருவிளங்கு வள்ளுவனார் திருக்குறள் கண்டவர்
அடியைச் சிரமேற் கொள்வாம்.

என்ற பாடலை எல்லோருமாகப் பாடுவோம்.

1934-இல் பள்ளி இறுதி வகுப்பை முடித்ததும் அவர் தந்த பயிற்சியின் துணையால் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்களை நானே படிக்கத் தொடங்கினேன்.

1935-இல் ''காவிரி'' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதி, தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடாகிய ''தமிழ்ப் பொழி''லுக்கு அனுப்பினேன். அது வெளிவந்த பிறகே ஆசிரியர்க்குத் தெரியும். இதுவே என் எழுத்துப் பணியின் தொடக்கம்.

ஊரில் ''வாகீச பக்த ஜன சங்கம்'' என்ற பெயரில் ஒரு தமிழ்ச் சங்கம் இருந்தது. அது மேலே கூறிய திருக்கோயில் திருவிழா நடைபெறும் தைத் திங்களில் பத்து நாட்கள் உபயச் சொற்பொழிவு நடத்தி வந்தது. ஔவை அவர்கள் பங்கு கொண்டதும், அது புதுநடை போடத் தொடங்கி விட்டது. தமிழ்நாட்டில் உள்ள திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் உள்ளிட்ட பல சமயப் புலவர்கள் வந்து சொற்பொழிவு ஆற்றுவார்கள். அவர்கள் பேசியன எல்லாம் கேட்ட எனக்கும் ''நாமும் ஏன் பேசக் கூடாது'' என்ற உணர்வு எழவே, ஆசிரியர் அறிவுரையோடு ''சைவ இளைஞர்கள் முன்னிற்கும் கடமைகள்'' என்ற தலைப்பில் பேசினேன். அதுவே என் முதற் பேச்சு.

எங்கள் ஊரில் ''பானு கவி மாணவர் தமிழ்ச் சங்கம்'' என்ற பிறிதோர் அமைப்பும் இருந்தது. கம்ப இராமாயணத்தை ஆழ்ந்து படிக்காமலே பட்டிமன்றம், வழக்காடு மன்ற மேடைகளில் நின்று கொண்டு வெறும் சொல் சாலம் காட்டுவார் போல் அல்லாமல் ஆழமாகப்

படித்து "வாலி வழக்கு" என்பது போலும் அரிய நூல்களைப் படைத்த அமரர் திரு. புரிசை முருகேச முதலியார் போன்றவர்கள் பானு கவியாரின் மாணவர்கள், அவர்கள் உருவாக்கியது அச்சங்கம். அதிலும் நான் பங்குகொண்டவன் தான்; ஆண்டுதோறும் திருவத்திபுரத்திற்கு வந்து செல்லும் ஞானியார் அலர்கள் அயர்ந்து உறங்கத் தொடங்கும்போது, அவர் உறங்கும் வரை அவர் கால்களைப் பிடித்துவிடும் பழக்கமுடைய என்னை, ஒருமுறை அவர் தலைமையில் "மணிவாசகர் அளித்த இரு வாசகம்" என்ற தலைப்பில் பேசுமாறு பணித்துவிட்டார்கள். சங்க இலக்கியங்களை ஓரளவு கற்றவனே அல்லது, சமய இலக்கியம் படித்தவன் அல்லன். ஆனாலும் திருக்கோவையாரில் ஒரு சில பாக்களைப் பள்ளியில் படித்தவன்.

என் தந்தையார் மார்கழி மாத விடியற் போதில் படிக்கும் திருவாசகப் பாக்களைக் கேட்டுக் கேட்டுச் சில பாடல்களை நினைவில் வைத்திருப்பவன். அதனால் தன் மகள் அவள் விரும்பும் இளைஞனோடு அவனூர் சென்றுவிட்ட போது, அவர்களைத் தேடிச் சென்ற தாய், எதிரே வந்த ஓர் இள ஆணையும் ஓர் இள மகளையும் அணுகி, உங்களைப் போன்ற இருவர் இவ்வழியில் செல்வதைக் கண்டீர்களா எனக்கேட்க, அதற்கு அந்த இளைஞன், ஒன்று இருவரையும் பார்த்தேன் அல்லது இல்லை எனக் கூறியிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக "என்னைப் போன்ற இளைஞனைப் பார்த்தேன்" எனக் கூறி விட்டுத் தன் பக்கத்தில் நிற்கும் தன் காதலியைப் பார்த்து, "இந்த அம்மா, வேறு யாரோ ஒருவரைப் பற்றி கேட்கிறார்களே! அவர்களைப் பற்றி உனக்குத் தெரியுமா?" எனக் கேட்டதாக வரும்,

"ஆளி அன்னானைக் கண்டேன், அயலே தூண்டா
விளக்கனையாய்? என்னையோ அன்னை
சொல்லியதே"

என்ற பாட்டைப் பாடிவிட்டு, எதிரில் இருவர் வர, ஆணை மட்டும் பார்த்துப் பெண்ணைப் பார்க்காத அக்கால இளைஞரின் நாகரீகம் எங்கே? அழகிய இளமகளிரை— எங்கெல்லாம் காணலாம் என அலைபாயும் உள்ளத்தோடு, மகளிர் கல்லூரி வாயில்களிலும், திரையரங்குத் திடல்களிலும் காத்துக் கிடக்கும் இன்றைய இளைஞரின் நாகரீகம் எங்கே எனக் கேட்டு முடித்தேன்.

அடுத்து "தந்தது உன் தன்னை, கொண்டது என் தன்னை" என்ற—திருவாசகத் தொடரை எடுத்துக் கொண்டு, தருதல் என்றால், கொடுப்பவன் தாழ்ந்து, வாங்குவோன் உயர்ந்து நிற்கும்போது ஆள வேண்டிய சொல், இங்கு தந்த உன் தன்னை' என கூறியதன் மூலம், சிவனைத் தாழ்ந்தவனாகவும், தன்னை உயர்ந்தவனாகவும் மதித்துள்ளாரே மணிவாசகர், இது ஏன் என்ற கேள்வியைக் கேட்டுவிட்டுப் பேச்சை முடித்துக் கொண்டேன்.

தலைமையுரையில், ஞானியார் அவர்கள் "கோவிந்தன் பேசிய நேரம் சிறிய நேரம் என்றாலும், என் சிந்தனைக்கு மட்டுமல்லாமல் அனைவர் சிந்தனைக்கும் அரிய வேலை கொடுத்து விட்டான்" எனக் கூறிப் பாராட்டினார்.

மற்றுமொரு நிகழ்ச்சி: நான் வித்துவான் பட்டம் பெறாத நேரம். ஆசிரியர்பால் பின்னர் தமிழ் கற்க வந்த கோமான் ம. வீ இராகவன் அவர்கள், அந்த ஆண்டு வித்துவான் தேர்வு எழுதியிருந்தார். அந்நிலையில் திருவத்திபுரத்திற்கு வருகை தந்த, எங்கள் ஆசிரியரின் ஆசிரியர் கரந்தைக் கவியரசு ஆர். வெங்கடாசலம்பிள்ளை அவர்கள், இராகவன் தேர்வில் நன்றாக எழுதியுள்ளார் எனக் கூறினார். அது கேட்ட ஔவை அவர்கள் என்னைச் சுட்டிக் காட்டி, "இவன் அவனைவிடத் தெளிவாகப் படித்தவன்" என்று கூறிச் சென்றுவிட்டார்.

கவியரசு அவர்கள் என்னை அருகில் அழைத்து அணைத்துக் கொண்டு, இலக்கியத்திலும், இலக்கணத்திலு

மாகச் சில கேள்விகளைக் கேட்டார். கூடுமானவரை நல்ல விடையே கூறினேன். என் அறிவு எனக்குத் தானே தெரியும். மேலும் அவர் கேட்டால் விழிக்க வேண்டி நேரும். ஆசிரியர் நற்சான்றிற்கு மாசு நேரக் கூடும் என்பதால் கவியரசை விட்டு ஓடி விடத் திட்டமிட்டு அவரிடம் ஓர் ஐயம் எழுப்பினேன். "தொல்காப்பியர் எழுவாய் வேற்றுமைக்கு பெயர் தோன்று நிலையே" என்றார். அதாவது சொல் எவ்விதத் திரிபும் இல்லாமல் இருப்பது. அவ்வாறு கூறிய அவரே 'நீயீர்' என்ற எழுவாய்ச் சொல்லுக்கு இலக்கணம் கூறும் போது "நும்மின் திரிபெயர்" என்று கூறியுள்ளார். இது முன் கூறிய இலக்கணத்திற்கு முரண் ஆகாதா? நும்மின் திரி பெயராகிய நீயீர் என்பது பிற வேற்றுமைகளை ஏற்கும் போது மீண்டும் நும் எனத் திரிந்து, "நும்மை நும்மால்" என ஆவானேன் என்ற இரு ஐயங்களை எழுப்பினேன். அவர் சிந்திக்கத் தொடங்கி விட்டார். விட்டால் போதும் என ஓடிவிட்டேன்.

பள்ளியில் மற்றொரு தமிழாசிரியர் திரு. பாலசுந்தர நாயகர் அவர்கள் வித்துவான் தேர்வில் வெற்றி பெற்றார். அதற்கு ஒரு பாராட்டு விழா நடத்த தலைமை ஆசிரியரின் அனுமதி கேட்டோம். அவர் மறுத்து விட்டார். பானுகவி மாணவர் கழகமும் விழா நடத்த முன்வரவில்லை. அதனால், ஔவைத் தமிழ் மாணவர் கழகம் என்ற புதிய கழகத்தைத் தொடங்கி அவருக்கு மிகப் பெரிய பாராட்டு விழாவினை நடத்தினோம்.

ஓராண்டு கழிந்தது: 1936 இல் முதலாண்டு விழா நடத்த முடிவு செய்தோம். விழாத் தலைமைக்கு மறைமலை அடிகளாரை அழைக்க முடிவு செய்தோம். ஆசிரியர் ஔவை அவர்கள் அவருக்கு கடிதம் எழுத, அடிகளார் ஒரு நாளைக்கு 100 வெண்பொற்காசுகள் (அதாவது ரூபாய்) தர வேண்டும் என்றும் உணவு இவ்வகையில் இருக்க வேண்டும் என்றும் பதில் எழுதி விட்டார்.

எங்களிடம் அவ்வளவு தொகை இல்லை; ஆனாலும் மறைமலையாரை அழைக்கும் ஆசையும் குறையவில்லை. ஒருநாள் ஆசிரியர் அவர்களிடமும் சொல்லாமல் பல்லாவரம் சென்று, அரைக்கிலோ கற்கண்டு, 2 சீப்பு வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, மலர்மாலை இவற்றை வாங்கிக் கொண்டு, அடிகளார் மாளிகை சென்று ஒரு தட்டு வாங்கி அதில் இவற்றை வைத்து எடுத்துக் கொண்டு அவரிடம் சென்று அவர் கையில் தட்டைக் கொடுத்து விட்டுக் காலில் வீழ்ந்து வணங்கினேன். (நான் வணங்கிய முதல்வர் அவர்தான்)'

வாழ்த்தி எழுந்திருக்கப் பணித்துவிட்டு: யார்? வந்தது ஏன் என வினவினார்: அழைக்க வந்தேன் என்றேன். ஔவைக்குக் கடிதம் எழுதி விட்டேனே என்றார். கையில் இருப்பது 200 வெள்ளிக்காசுகள் தாம் என்றாலும் தாங்கள் வந்து விழாத் தலைமை தாங்க வேண்டும் என வேண்டிக் கொண்டேன். ஒப்புக் கொண்டார்.

1936 மே 24, 25, 26 ஆகிய நாட்களில், திருவத்திபுரம் எங்கள் தெருவில், கோயிலை அடுத்து, தெருவை அடைத்து பெரிய பந்தல் போட்டு விழா நடத்தினோம்.

வித்துவான் பட்டம் பெற்றபின்னர், பி. ஓ. எல். பட்டம் பெற வேண்டும் என்ற ஆசை எழுந்தது. கல்லூரி சென்று படிக்காமல் வீட்டிலிருந்தே தேர்வு எழுதுவதானால் 3 ஆண்டு ஆசிரியராகப் பணி புரிந்திருக்க வேண்டும்; தேர்வுக்கு மனுச் செய்யும் போது ஆசிரியராக இருக்க வேண்டும் என்பது பல்கலைக் கழக விதி; அதனாலும், இரண்டாம் உலகப் போர் காரணத்தால் அறிஞர் அண்ணா உள்ளிட்ட கழகத்தவர் அனைவரும் போரில் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷியா அணிக்கு ஆதரவான பிரசாரம் செய்ய முனைந்து விட்டனர், அதனாலும், வேலூரில் என் பழைய தமிழாசிரியர் சென்ற அதே பள்ளியில் ஆசிரியராக 1942-இல் சேர்ந்தேன். 1944 வரை பணி புரிந்தேன். அங்கும் தமிழ்ப்பணி தொடர்ந்தது.

பி.ஓ.எல். தேர்வில் முதல்பகுதி பி. எஸ். வகுப்பிற்குரிய ஆங்கில இலக்கியம், இரண்டாம் பகுதி தமிழ் வித்துவான் தேர்வு, மூன்றாம் பகுதி திராவிட மொழி ஒப்பிலக்கணமும் தென்னிந்திய வரலாறும் (ஆங்கிலத்தில்) இரண்டாம் பகுதியை முன்னரே முடித்து விட்டேன். முதல் பகுதியையும் முடித்து விட்டேன். மூன்றாம் பகுதியில் தென்னிந்திய வரலாற்றுக்குரிய நூல்களாகிய திரு நீலகண்ட சாஸ்திரியாரின் சோழர் வரலாறு, பாண்டியர் வரலாறு, திரு. கோபாலன் அவர்களின் பல்லவ வரலாறு, திரு.பி.டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின் தமிழர் வரலாறு ஆகிய ஆங்கில நூல்களை வாங்கிக் கொண்டேன். கால்டுவெல் ஒப்பிலக்கணத்தை இலண்டனில் உள்ள தம்நண்பர் மூலம் வாங்கித் தந்தார் ஆசிரியர்.

அவற்றைப் படிக்கும் போது கால்டுவெல் ஒப்பிலக்கணத்தையும், பி.டி. எஸ். அவர்களின் தமிழர் வரலாற்றையும் தமிழில் மொழி பெயர்த்தால் பி.ஓ.எல் படிக்கும் மாணவர்களுக்குப் பயன்படும் என எண்ணினேன்,

வேலூரில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவர், தாமரைச் செல்வர், அமரர் சுப்பையா பிள்ளை அவர்கள், சென்னையில், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில், 22-2-42-இல் நடைபெறும் நற்றிணை மாநாட்டில் பாலை என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுமாறும், ஆற்றும் சொற்பொழிவை அப்படியே எழுதித் தருமாறும் வேண்டினார். நானும் அது செய்தேன்.

அம்மாநாட்டினைத் தொடர்ந்து திரு சுப்பையா அவர்களின் நட்பு தொடர்ந்தது. இலக்கியம் தொடர்பான நூல்களை எழுதித் தருமாறு அன்புக் கட்டளை இட்டார்.

''திருமாவளவன்'' என்ற முதல் நூல் 1951-ல் வெளிவந்தது (என் முதல் மகனின் பெயரும் திருமாவளவன் என்பது குறிப்பிடல் நலம்.) அதைத் தொடர்ந்து சங்க காலப் புலவர் என்ற வரிசையில் 16 நூல்களையும், அரசர் என்ற வரிசையில் ஆறு நூல்களையும் வெளியிட்டார். புலவர் வரிசையில் முதல் நூல் 1952லும், அரசர் வரிசையில் கடைசி நூல் 1955லும் வெளிவந்தன.

தமிழ் எழுத்தாளர் உலகிற்கு அறிமுகமாகாத என் நூல்கள் இருபத்தைந்தை மூன்றாண்டு கால அளவில் வெளியிட்டு எனக்குப் பெருமை சேர்த்த திருவாளர் பிள்ளை அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

எழுத்துப் பணி தொடர, மலர் நிலையம், வள்ளுவர் பண்ணை, அருணா பதிப்பகம் என்ற வெளியீட்டாளர் மூலம் பல நூல்கள் வெளி வந்தன. அரசியல் பணிகளுக்கிடையே கால்டுவெல் அவர்களின் ஒப்பிலக்கண மொழி பெயர்ப்பு 1959ல் வள்ளுவர் பண்ணை மூலம் வெளி வந்தது.

1990 ஏப்ரல் 15ஆம் நாளன்று, என் ஐம்பதாவது நூலாக, திரு. பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின் தமிழர் வரலாறு மொழி பெயர்க்கப் பெற்று, திரு. பிள்ளை அவர்களின் மருகர் திரு. இரா. முத்துகுமாரசாமி அவர்கள் முயற்சியால் கழக வெளியீடாக வெளியிடப் பெற்றது. அவருக்கு நன்றி

இப்போது (1991) அவர் பணிக்க திருவாளர் வி. ஆர். இராமச்சந்திர தீக்ஷிதர் அவர்களின் Origin and Spread of Tamils, [தமிழரின் தோற்றமும் பரவலும்] என்ற நூல் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளது. திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின் Pre Aryan Tamil Culture (ஆரியர்க்கு முந்திய தமிழர் பண்பாடு) என்ற நூலை மொழிபெயர்த்து முடித்துவிட்டு; அவரின் மற்றொரு நூலாகிய Stone Age in India (இந்தியாவில் கற்காலம்) என்ற நூலை மொழி பெயர்க்க எடுத்துக் கொண்டுள்ளேன். என் எழுத்துப்பணி தொடரும். குறள்பற்றி, சங்க இலக்கியங்கள்பற்றி, பல தலைப்புகளில் நூல் எழுதக் குறிப்பு எடுத்து வைத்துள்ளேன். ''கல்வி கரையில கற்பவர் நாள்சில'' காலம் இடம் தந்தால் என் எழுத்துப் பணி ஓரளவேனும் முற்றுப் பெறும்.

# எழிலகம் வெளியீடுகள்

## புலவர் கா. கோவிந்தனார் படைப்புகள்

### இலக்கியம்

| | | |
|---|---|---|
| 1. | வள்ளுவர் சொல்லாட்சி மாட்சி | 15 00 |
| 2. | மனையுறை புறாக்கள் | 15 00 |
| 3. | காவிரி | 20 00 |
| 4. | சிலம்பொலி | 12 00 |
| 5. | புண் உமிழ் குருதி | 10 00 |
| 6. | அடுநெய் ஆவுதி | 10 00 |
| 7. | கமழ்குரல் துழாய் | 10 00 |
| 8. | சுடர்வீ வேங்கை | 10 00 |
| 9. | வடு அடும் நுண் அயிர் | 10 00 |

### வரலாறு

| | | |
|---|---|---|
| 10. | தமிழக வரலாறு சங்க காலம் —அரசர்கள் | 25 0 |
| 11. | தமிழக வரலாறு—கோசர்கள் | 30 00 |
| 12. | தமிழக வரலாறு— கரிகாற் பெருவளத்தான் | 26 00 |

## டாக்டர் கோ. திருமாவளவன் நூல்கள்

| | | |
|---|---|---|
| 13. | சம்புவரையர் | 10 00 |
| 14. | புலவர் வாழ்வும் பணியும் | 10 00 |
| 15. | History of the Cholas as gleaned from Ula (உலா) Literature | 125 00 |

எழிலகம்
46, செல்வ விநாயகர் கோவில் தெரு
திருவத்திபுரம்—604 407

ISBN—81-85703-15-9

வெற்றி அச்சகம், சென்னை—600 014.